20.00

www.onlineuthayan.com




பக்கங்கள்: 28

# உதயன்

சுடர் 27
கதிர் 62

வள்ளுவர் ஆண்டு 2043 | தை 13 வெள்ளிக்கிழமை (27/01/2012) | UTHAYAN - A Lively National Tamil Daily

## ஆணைக்குழு அறிக்கை ஜெனிவாவுக்கு போகாது

### அடித்துக்கூறுகிறார் அமைச்சர் பீரிஸ்

கொழும்பு, ஜன. 27

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் மார்ச் மாதக் கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படமாட்டாது என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அடித்துக் கூறியிருக்கிறார்.

இந்தோனேஷிய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி மார்டி நட்டலெகாவை சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே அமைச்சர் பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை ஒரு இறைமையுள்ள நாடு. நல்லிணக்க ஆணைக்குழுவை இலங்கை அரசு தான்

27

## கடத்தப்பட்ட மாணவியின் வாய்க்கும் மூக்குக்கும் 'பிளாஸ்ரர்'

### இதனால் மூச்சுத் திணறி அவர் மரணம்



யாழ்ப்பாணம், ஜன. 27

பருத்தித்துறை சக்கோட்டையில் நேற்று முன்தினம் மாலை கடத்தப்பட்ட மாணவி டிலக்ஷனாவின் வாயையும் மூக்கையும் மூடிப் பிளாஸ்ரர் ஒட்டப்பட்டிருந்தது. இதனால் ஏற்பட்ட மூச்சுத் திணறல் காரணமாகவே அவர் உயிரிழந்தார் என முதற்

27

# இலங்கையில் நிரந்தர அரசியல் தீர்வு அதிக அக்கறை காட்டுகிறது இந்தியா

### நேற்றுமுன்தினம் ஹிலாரியைச் சந்தித்த நிருபமா அவரிடம் நேரில் தெரிவிப்பு

வோஷிங்ரன், ஜனவரி 27

இலங்கையில் நிலைத்துநிற்கக்கூடிய - காத்திரமான அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இந்தியா முழுமையான - அதீத அக்கறை காட்டி வருகிறது. அதே சமயம் அமைதித் தீர்வு தொடர்பாக இலங்கையின் வாக்குறுதிகள் இந்தியாவுக்குத் திருப்தி அளிக்கின்றன.


- இவ்வாறு அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவர் நிருபமா ராவ், அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்ரனிடம் தெரிவித்திருக்கிறார்.

நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. தற்போதைய இலங்கையில் அரசியல் நிலைமை மற்றும் இலங்கை விவகாரத்தில் ஏனைய நாடுகளின் தலையீடுகளை அடுத்தே இவர்களின் தீடிர் சந்திப்புக்குக் காரணமாக இருக்கலாம் என்று அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

வோஷிங்டனில் கடந்த வருட இறுதியில் இந்தியத் தூதுவராகப் பதவியேற்ற பின்னர் நிரூபமாராவ், ஹிலாரியைச் சந்திப்பது இதுவே முதற் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய - அமெரிக்க உறவுகள் குறித்தும், ஆப்கானிஸ்தான், மியன்மார் உட்பட்ட நாடுகளின் பிரச்சினைகள் குறித்தும் இதன்போது பேசப்பட்டன. என்றும் அதேசமயம்,

27



இலங்கை மற்றும் இந்தோனேஷியாவுக்கிடையில் கலாசாரம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இரு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் நேற்றுக் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டன. இந்த ஒப்பந்தங்களில் இந்தோனேசியா அரசு சார்பாக வெளிவிவகார அமைச்சர் கலாநிதி மார்டி நட்டலெகாவும் இலங்கை அரசு சார்பாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோர் கைெயாப்பமிட்டனர்.

## ஜெனிவா மாநாட்டில் நல்லிணக்கக்குழு அறிக்கை: அடம்பிடித்து மறுக்கிறது இலங்கை அழக்கக் காத்திருக்கிறது மேற்குலகம்

கொழும்பு, ஜன. 27

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஜெனிவா மாநாட்டில் விவாதிப்பதா இல்லையா என்பது தொடர்பில் இலங்கைக்கும் மேற்குலக நாடுகளுக்கும் இடையே பனிப்போர் மூண்டுள்ளதால், மாற்று நடவடிக்கைகளைக் கையாளும் முயற்சியில் மேற்குலகம் அதிரடியாகக் களமிறங்கியுள்ளது எனத் தெரியவருகிறது.

ஜெனிவா கூட்டத் தொடரின்போது, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை விவாதிக்கப்படவேண்டும் என மேற்குலகம் விடுத்த கோரிக்கையை நிராகரித்து, அதற்கு இலங்கை கடும் எதிர்ப்பை வெளியிட்டதன் காரணமாகவே மாற்று நடவடிக்கைகள் குறித்து மேற்குலகம் பரிசீலித்து வருகின்

27

## இலங்கை உற்பத்திகளுக்கு தமிழ்நாட்டில் வந்தது தடை

சென்னை, ஜன.27

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை இந்தியாவின் தமிழ்நாட்டிலுள்ள கடைகளின் முன்பாக உள்ள அலுமாரிகளில் காட்சிக்கு வைக்க வேண்டாம் எனவும் அவ்வாறு வைக்கப்பட்டுள்ளவற்றை உடன் அகற்றுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரச நகர கூட்டுறவுச் சங்கங்களின் மூத்த அலுவலர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். 'இலங்கைப் பொருள்களைப் புறக்கணிப்போம்' என்ற அமைப்பு மேற்கொண்ட தீவிர பிரசாரங்களை அடுத்து சக்தி சரவணன் என்ற மூத்த அதிகாரி

27

## தமிழர் விடயத்தில் இந்தியாவின் நடிப்பு

கொழும்பு, ஜன.27

இலங்கை - சீன உறவுப் பாலத்தைத் துண்டிப்பதற்குப் 13 பிளஸைப் பகடைக்காயாகப் பயன்படுத்தி தீவிரமாக செயற்படும் இந்தியா, தமிழர் விடயத்தில் கரிசனை கொள்வதுபோல் நடிக்கின்றது - என்று பரபரப்பான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது சோஷலிசக் கட்சி.

ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான இந்த அரசிடம் இனப்பிரச்சினைக்கு உண்மையானதொரு தீர்வுத்

27

## காணி, பொலிஸ் பேச்சுக்கு சரியான இடம் தெரிவுக்குழு

### அமைச்சர் கெஹலிய கூறுகிறார்

கொழும்பு, ஜன. 27

காணி, பொலிஸ் அதிகாரங்கள் குறித்துக் கலந்துரையாடுவதற்குச் சரியான ஒரே ஒரு இடம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுதான்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. அதில் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

அதிகாரப் பகிர்வு தொடர்பாக ஆராய நாடாளுமன்றத் தெரிவுக்குழுதான் சரியான வாய்ப்பை வழங்கும் என்று நான் கருதுகிறேன். 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசுக்கு பிரச்சினை எதுவும் கிடையாது. ஆயினும் தனது மக்களுக்கு எது சிறந்த

27

### ஐ.நா. இளைஞர் மாநாடு இலங்கையில்

2014ஆம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உலக இளைஞர் மாநாட்டை இலங்கையில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான அமைச்சரவை பத்திரத்தை இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும சமர்பித்ததோடு அதற்கு அமைச்சரவை அனுமதியும் கிடைத்துள்ளது.

### கட்டாரில் ஷிரந்தி

கட்டாருக்கு நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள இலங்கையின் முதல் பெண்மணியான ஷிரந்தி ராஜபக்ஷ கட்டாரில் இலங்கை மாணவர்கள் கல்வி கற்கும் ஸ்டபர்ட் சர்வதேச பாடசாலை ஒன்றுக்கு நேற்று விஜயம் செய்தார். உலகம் முழுவதிலும் உள்ள விசேட தேவைகள் உடையோர் மற்றும் வலது குறைந்தோர் தொடர்பான ''சபாலா'' விசேட மாநாட்டில் கலந்துகொள்வதற்காகவே அவர் அங்கு சென்றுள்ளார். ஜனாதிபதியின் பாரியாரை வரவேற்க அங்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இலங்கை மாணவர்கள் அணிவகுத்து நின்று இலங்கைத் தேசியக் கொடியசைத்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

### 3 சட்டத்தரணிகள் பாகிஸ்தானில் சுட்டுக்கொலை

பாகிஸ்தானின் கராச்சி நகரில் ஆயுதபாணிகள் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தினால் சட்டத்தரணிகள் மூவர் உயிரிழந்துள்ளனர். நேற்று முன்தினம் புதன்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றதாக பாகிஸ்தான் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சட்டத்தரணிகள் பயணம் செய்த கார் மீது மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுதபாணிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக தெரிவிக்கப்படுகிறது. இறந்தவர்களில் இருவர் தந்தையும் மகனுமாவர். இந்த கொலைகளுக்கு பாகிஸ்தான் சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

### 42 பேருக்கு ஒத்திவைத்த சிறை

சட்டவிரோதமாக மீன்பிடி படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்ல முற்பட்ட சம்பவத்தில் தமது குற்றத்தை ஒப்புக் கொண்ட 42 பேருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதோடு தண்டப்பணமும் அறவிடப்பட்டுள்ளது. கொழும்பு பிரதான நீதிவான் ரஸ்மி சிங்கப்புலி இந்த தண்டனையை விதித்துள்ளார். இதன்படி குறித்த 42 பேருக்கும் 5 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழியச் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி 5000 ரூபா தண்டப்பணமும் அறவிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அதிகாரப் பகிர்வு குறித்து வெளிப்படுத்த அரசு அச்சம்

## ஐ.தே.க. கூறுகிறது

கொழும்பு, ஜன.27

''13 பிளஸ் அதிகாரப் பகிர்வு குறித்து நாட்டு மக்களிடம் பகிரங்கமாக உண்மையை வெளியிட்டால் கட்சிக்குள் பிளவு ஏற்படுமென அரசு அச்சப்படுகிறது. இது பாக்குவெட்டியில் அகப்பட்ட பாக்கின் நிலைமைபோன்றது. ஜனநாயக ஆட்சி என்று சர்வதேசத்திடம் நற்பெயர் பெறுவதற்காக நாட்டைக் களமாக வைத்து அரசு விளையாடக்கூடாது.''

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''தற்போது ஆட்சி நடத்துகின்ற அரசு 2004 ஆம் ஆண்டு எம்மால் முன்வைக்கப்பட்ட 13 ஆவது அரசியல் சீர்திருத்தத்தை எதிர்த்தது. ஆனால், இன்று அதனைப் பற்றிக்கொண்டு 13 பிளஸ் தருகின்றோம் என்கிறது. ஆனால், 13 பிளஸ் என்றால் என்ன என்பது பற்றி மக்களுக்குத் தெளிவாகக் கூற அரசு மறுக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியினால் 2004 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட 13 ஆவது அரசியல் திருத்தத்துக்கு ஆளுங்கட்சியினர் அன்று இணக்கம் தெரிவித்திருந்தால் அரசிற்கு இன்று இப்படியான நிலை வந்திருக்காது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா ஊடகவியலாளர் சந்திப்பின் போது 13 பிளஸ் தீர்வுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றார். ஆனால், அப்போது இது தொடர்பாக அரசதரப்பினர் சார்பில் ஒருவரும் வாய்திறக்கவில்லை. திறந்திருந்தால் இன்று ஆளுங்கட்சி சிதறியிருக்கும்.

யுத்தம் நிறைவுபெற்று இரண்டரை வருடங்கள் கடந்தும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாத நிலையிலுள்ள அரசு, காலம் தாழ்த்தியபடி காய்நகர்த்த முயற்சிக்கின்றது. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டு ஒரு வருடமாகியும், அதில் முன்வைக்கப்பட்ட யோசனைகளை அரசு செயற்படுத்துவதாக இல்லை.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணக்கம் தெரிவித்தால் அதற்கு நாமும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கின்றோம்.

தேர்தலில் வெற்றியீட்டினால் மட்டும் போதாது. ஜனநாயக ஆட்சி நிலவ வேண்டுமானால், அதிகாரப் பகிர்வுக்கு இடமளிக்க வேண்டும். 13 பிளஸ் தொடர்பான உண்மையை நாட்டு மக்களுக்குப் பகிரங்கமாக வெளியிடவேண்டும்'' - என்றார் அவர்.



யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்தியாவின் 62 ஆவது குடியரசு தின நிகழ்வு நேற்று யாழ். ரில்கோ விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் யாழ். வந்த இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமை அசத்திய மாணவி கணேசலிங்கம் பிரசாயினிக்கு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் பரிசில் வழங்குகிறார். (த-23)

# 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் அரசியல் தீர்வு

## அமெரிக்கவுக்கும் மஹிந்த உறுதியளித்தாராம்

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதுடன் அமெரிக்காவின் செனட் சபையைப் போன்று மேல் சபை ஒன்றையும் உருவாக்குவதே தனது அதிகாரப்பகிர்வுத் திட்டம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அமெரிக்காவுக்கு வாக்குறுதி கொடுத்த விவகாரம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வாசிங்டனுக்கு அனுப்பிய தகவல் பரிமாற்றக் குறிப்பிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்ட அன்று, கடந்த 2009 மே மாதம் 20ஆம் திகதி அமெரிக்கத் தூதுவராக இருந்த றொபேட் ஓ பிளேக் ஜனாதிபதியிடம் பிரியாவிடை பெறுவதற்காக சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பாக 2009 மே 26ஆம் திகதி அமெரிக்கத் தூதரக அதிகாரி ஜேம்ஸ் மூர் வாசிங்டனுக்கு தகவல் அனுப்பியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது றொபேட் ஓ பிளேக், இரண்டு முக்கியமான விடயங்களில் நல்லிணக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கூறியுள்ளார்.

மனிதாபிமான ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் இந்த நல்லிணக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், தமிழர்கள் கௌரவமாகவும் நம்பிக்கையுடன் வாழ்வதற்கு அதிகாரங்களை பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

அப்போது ஜ்னாதிபதி தான் 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று அதிகாரங்களைப் பகிரவுள்ளதாகவும், இதன்படி 13வது திருத்தத்தில் மாகாணங்களுக்கு உள்ள அதிகாரங்களுடன் மேலதிகமாக அமெரிக்காவில் உள்ளது போன்ற செனட் சபையை உருவாக்கப்போவதாகவும் வாக்குறுதி கொடுத்துள்ளார். (த)

# கட்சி ஒன்றின் பெயரைப் பாவித்து பாலத்தை விற்க முயன்ற நபர்

யாழ்ப்பாணம், ஜன.27

கிளிநொச்சி உருத்திரபுரம் பிரதான வீதியில் உள்ள பாலத்தின் இரும்புப் பாகங்களைத் தனிநபர் ஒருவர் பெரும்பான்மைக் கட்சியொன்றின் பெயரைப் பயன் படுத்தி இரும்பு வியாபாரிகளுக்கு விற்பனை செய்ய முயன்றவேளை அப் பகுதி மக்களாலும் பொது அமைப்புகளாலும் அந்த முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது:-

கிளிநொச்சி உருத்திரபுரம் 4 ஆம் குறுக்குத் தெரு வீதியூடாக கனகபுரம், புதுமுறிப்பு, ஊற்றுப்புலம் கோணாவில் போன்ற 15 கிராமங்களுக்குரிய பிரதான போக்குவரத்து பாதையிலுள்ள ஆற்றை குறுக்கறுக்கும் பகுதியில் போடப்பட்ட பாலத்தை சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினரும் கரைச்சிப் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவருமான தர்மசிறி என்பவர் நேற்று நண்பகல் 12 மணியளவில் தனிப்பட்ட ரீதியில் கட்சியின் பெயரை பாவித்து பலநோக்கு கூட்டுறவு அங்கத் தலைவர் எனக் கூறியும் அப்பகுதிக்கு இரும்பு வியாபாரிகளை கூட்டிச் சென்று விற்பனை செய்யமுயன்றுள்ளார்.

இதனை அடுத்து அவருக்கும் அந்த ஊர் மக்களுக்கும் இடையில் கடுமையான வாய்த் தர்க்கம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இந்த வாய்த் தர்க்கம் கைகலப்பாக மாறும் சூழ்நிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக மக்கள் பிரதேச சபைத் தலைவர்,தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இதனை அடுத்து இந்தப் பாலம் மேலிடத்து அனுமதியுடன் தான் விற்பனை செய்யப்படுவதாகவும், அதனை தடுக்க உங்களுக்கு அதிகாரம் இல்லை எனவும் தர்மசிறி மக்களிடம் கூறியுள்ளார்.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதிக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் தர்மசிறியினால் அச்சுறுத்தப்பட்டதுடன் அவர் வைத்திருந்த ஒளிப்படக் கருவியையும் பறிமுதல் செய்ய முயற்சித்துள்ளார். தகவல் கிடைத்ததும் ஸ்தலத்துக்கு சென்ற ஊடகவியலாளர்களும் அவரினால் அச்சுறுத்தப்பட்டதாகவும் கூறப்பட்டது.

கரைச்சி பல நோக்குக் கூட்டுறவு சங்கத்துக்கு நிதி சேகரிக்கவே இதனைத் தான் விற்பனை செய்கிறேன் என அவர் தெரிவித்துள்ளார். எனினும் மக்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டதனால் அவர் தனது முயற்சிகளைக் கைவிட்டுத் திரும்பினார். (த-6-319)

### நாட்டியாஞ்சலி நிகழ்வு

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் முத்தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் இந்தியாவைச் சேர்ந்த நாட்டிய மேதை கலைமாமணி ரமா வைத்திய நாதன் குழுவினரின் நாட்டியாஞ்சலி நிகழ்வு எதிர்வரும் 31ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 6.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ந 313)

### சமுர்த்திப் பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள்

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி மகா சங்கத்தின் வாழ்வாதாரத்திட்டதின் கீழ் 82 சமுர்த்திப் பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அண்மையில் வரணி வலயத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு வரணி சமுர்த்தி வங்கியில் வைத்து பிரதேச சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் க.விக்னேஸ்வரன் தையல் இயந்திரங்களை வழங்கினார்.

தையல் இயந்திரங்கள் 50 வீத மாணியத்துடனான கடன் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

# மருத்துவர் சங்கப் பிராந்திய மாநாடு யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 27

இலங்கை மருத்துவசங்கம், யாழ் மருத்துவ சங்கத்துடன் இணைந்து நடத்தும் பிராந்திய மாநாடு இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் நாளை இன்று மறுதினம் ஞாயிற்றுக்கிழமைவரை இடம்பெறவுள்ளது.

முதல் நாளான வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் எதிர்நோக்கும் சுகாதாரம் சார் சவால்கள் முன்நோக்கிய பாதையில் எனும் தொனிப் பொருளிலான பயிற்சிப் பட்டறை யாழ் ரில்கோசிற்றி ஹோட்டலில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம அதிதியாக சுகாதார அமைச்சர் கௌரவ. மைத்திரிபால சிறிசேன அவர்கள் கலந்து கொள்ளவுள்ளார். மருத்துவத்துறையின் வெவ்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வைத்திய நிபுணர்கள், தத்தம் துறைசார் சுகாதாரசேவைகளை வழங்குவதில் எதிர் நோக்கும் சவால்கள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளனர்.

அதேநாளில் யாழ். மருத்துவ பீடத்திலும் மாநாட்டுக்கு முன்னரான பயிற்சிப்பட்டறை ஆய்வு முன்மொழிவுகளுக்கான ஒழுக்க விதிகளின் மீளாய்வு எனும் தொனிப் பொருளில் இடம்பெறவுள்ளது. இதில், யாழ் மற்றும் கொழும்பு மருத்துவபீடங்கள், சுகாதார அமைச்சு, இலங்கை மருத்துவ சங்கம் போன்றவற்றில் அங்கம் வகிக்கும் துறைசார் வல்லுனர்கள், பேராசிரியர்கள் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

இவ்விரு பயிற்சிப் பட்டறைகளையும் தொடர்ந்து மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வுகள் யாழ். பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கேட்போர் கூடத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பிரதம அதிதியாக கொழும்பு மருத்துவபீடத்தின் நுண்ணுயிரியல் துறையைச் சேர்ந்த வாழ்நாள் பேராசிரியர் லலிதமெண்டிஸும் சிறப்பு அதிதியாக யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பேராசிரியை (செல்வி) வசந்தி அரசரட்ணமும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். யாழ் மருத்துவசங்கத்தின் தலைவர், சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் ரவிராஜ், இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் பேராசிரியர் வஜிர. ஜி.ஏ.திசாநாயக்க ஆகியோரின் உரைகளைத் தொடர்ந்து, பிரதம மற்றும் கௌரவ அதிதிகளின் உரைகள் இடம்பெற்று, அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாளான நாளை சனிக்கிழமை, இரு வேறு இடங்களில் மாநாட்டின் அமர்வுகள் இடம்பெறவுள்ளன. யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் மூன்று பகுதிகளாக அமர்வுகள் நடைபெறவுள்ளன. காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் தொழில் சார் நிபுணத்துவம் எனும் தொனிப்பொருளிலான ஆய்வரங்கில் பேராசிரியர் விஜிதமெண்டிஸ், பேராசிரியர் வஜிரதிசாநாயக்க, டாக்டர் கே.கே.எஸ். கரந்தகொட ஆகியோர் கருத்துரையாற்றவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ள சுகாதாரப் பாதையில் புதிய செல்நெறிகள் எனும் தொனிப்பொருளிலான ஆய்வரங்கு டாக்டர் திருமதி எஸ்.தனேஸ்வரி மற்றும் டாக்டர் எஸ்.பாலகுமார் ஆகியோர் தலைமைவகிக்க, பேராசிரியர் வஜிரதிசாநாயக்க, டாக்டர் கேதீஸ்வரி சிவசிதம்பரம், டாக்டர் கபில ஜெயரத்ன ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

பின்னர் மதியம் ஒரு மணிக்கு ஆரம்பமாகவுள்ள தொற்றா நோய்கள் எனும் தொனிப்பொருளிலான ஆய்வரங்கு நடைபெறவுள்ளது. இவ்வாய்வரங்கில் டாக்டர் பிரசாத் கட்டுயந்த, டாக்டர் என்.மல்லவாரச்சி, டாக்டர் கொட்வின் கொன்ஸ்ரன்ரைன், டாக்டர் லசந்த மாலவி டாக்டர் ச.முரளிவல்லி புரநாதன், டாக்டர். துரைராஜா, டாக்டர். என்.ஜெயக்குமாரன், டாக்டர் லங்காதிஸாநாயக்க, டாக்டர் சரத் அமுனுகம ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். அதனைத் தொடர்ந்து கலந்துரையாடலுடன் ஆய்வரங்குகள் மாலை 4.30 மணிக்குநிறைவடைகின்றன.

அதேநாளில் மற்றுமொரு பயிற்சிப்பட்டறை யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்னால் அமைந்துள்ள மருத்துவபீட மாணவர் விடுதியின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. மருத்துவஆய்விற்கான அடிப்படைப் புள்ளிவிபரவியல் எனும் தொனிப்பொருளிலான இப் பயிற்சிப்பட்டறையில் பல்வேறு ஆய்வு முறைகள், தரவுப்பகுப் பாய்வு தொடர்பான விளக்கங்களும் கருத்துரைகளும் ராகம மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர் டாக்டர் கிரிஷாந்த அபேசேகரவினால் வழங்கப்படவுள்ளன.

மூன்றாம் நாளான நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ் பொதுநூலகக்கேட்போர் கூடத்திலகாலை 9 மணிக்கு இலத்திரனியல் சுகாதாரம் வாய்ப்புக்களும் சவால்களும்எனும் தொனிப்பொருளிலான பயிற்சிப்பட்டறையில் சுகாதார அமைச்சைச் சேர்ந்த வல்லுநர்களும், பல்கலைக்கழக பேராசிரியர்களும் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர். அதனைத்தொடர்ந்து மாலை 3 மணியளவில் நிறைவுரைகளுடன் மாநாடுநிறைவு பெறும்.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வகுத்தவழியில் ஆற்றும் பணியை விட்டுக் கொடுக்குமா, என்ன?

✱ வன்னியில் நடைபெற்ற இறுதிப் போரின்போது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் தவறிவிட்டது. அந்தப் பாதிப்புகளுக்குப் பொறுப்புக் கூறவும் அது எந்த ஏற்பாட்டையும் மேற்கொள்ளவில்லை.

✱ ஆனால் போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்களுடன் தொடர்புடையவர்களாகக் குற்றம் சாட்டப்பட்ட படைத் தரப்பினரை அவற்றில் இருந்து இலங்கை அரசு விடுவித்திருக்கிறது.

✱ படையினரால் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச விதிமுறைகள் மீறலுக்கு பொறுப்புக்கூற நடவடிக்கை மேற்கொள்வதற்குப் பதிலாக அவர்களைப் பாதுகாத்து வருகிறது.

அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இந்த வருடத்துக்கான அறிக்கையில் இலங்கை குறித்துச் சுட்டிக்காட்டப்பட்ட எதிர்மறையான மிகப்பல அம்சங்களில் மேற்காட்டப்பட்டவையும் அடங்குகின்றன.

இலங்கையில் போர் முடிவுற்றதை அடுத்து அங்கு வாழும் இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதற்கான ஆதாரங்கள் மிகச் சிறிய அளவிலேயே தென்படுகின்றன என்பதும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

உலகின் 90 நாடுகளில், மனித உரிமைகள் பேணப்படுதல் மற்றும் மீறப்படுதல் தொடர்பான தகவல்களை மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது மிக நீண்ட அறிக்கையில் தொட்டுக்காட்டி விமர்சித்துள்ளது.

அந்த வரிசையில் --

• வடக்கு, கிழக்கில் உள்ளாடும் கள்ளாடுமாக தமிழர்களின் நிலங்கள் அரச தரப்பால், மிகக் குறிப்பாக படையினரால் வெளிப்படையாக அபகரிக்கப்படுவதாகவும்- -

• அந்தப் பிராந்தியங்களில் பல்வேறு வடிவங்களில் மக்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உண்டாக்கப் படுவதாகவும், ஆனால் அதனைத் தடுக்க, கனதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமலும் மக்களின் முறைப்பாடுகளை அரசு புறக்கணித்தும் வருகிறது என்றும் --

• ஊடகங்கள் மற்றும் குடிசார் சமூகக் குழுக்கள் மீதான அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன. சுதந்திரமான கருத்துக்களை வெளியிடும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் -- அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

அவை மட்டுமன்றி --

■ போர் முடிவுற்ற பின்னரும், வடக்கு கிழக்குப் பகுதிகளில் படையினர் மிகப் பெரும் எண்ணிக்கையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளமை குறித்து தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

■ கிறீஸ் பூத விவகாரம் தமிழ் மக்களின் மத்தியில் அவர்களது பாதுகாப்புக் குறித்த நம்பிக்கை இன்மையையும் உண்டாக்கியது.

■ இறுதிக் கட்டப் போரின்போது இடம்பெயர்ந்த தமிழ் மக்களில் பலர் இன்னமும் தமது சொந்த இடங்களில் குடியமர முடியவில்லை -- என்ற உண்மையான கள நிலைமைகளையும், மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அறிக்கை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக --

போரின்போது பல கட்டங்களிலும், குறிப்பாக இறுதிக் கட்டத்திலும் மோதலில் ஈடுபட்ட இரு தரப்புகளும் இழைத்த போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய்வதற்கு ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் நியமித்த நிபுணர் குழுவின் சிபார்சுக்கு அமைவாக, அனைத்துலக சுயாதீன விசாரணைப் பொறிமுறையை, அமைக்க வேண்டிய தேவையில்லை என்று இலங்கை அரசு நியமித்த நல்லிணக்க ஆணைக்குழு நிராகரித்தமையை, அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்பகம் கண்டித்துள்ளது.

ஆனால் கண்காணிப்பகத்தால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள், குற்றச்சாட்டுகளை அரசாங்கம் கடைக் கண்ணாலும் ஏறெடுத்தும் பார்க்காது என்பது மட்டும் நிச்சயம்.

போர்க் காலத்தின் போதும், அதற்குப் பிந்திய காலத்திலும், இப்போதும் தனது செயற்பாடுகள் நூறு வீதம் சரியானவையே, அவ்வேளைக்குப் பொருத்தமான நடவடிக்கைகளே, ஏற்பாடுகளே என்று நிலைநிறுத்தும் தனது வழமையான கட்டமைப்பிலிருந்து ஓர் அங்குலம் தானும் அரசு அசையமாட்டாது; நெகிழமாட்டாது!

இலங்கை அரசின் சிந்தனைகளும் செயற்பாடுகளும் எப்போதுமே பவ்வியமானவையும், நெறிமுறைகளைத் தழுவியவையாகவுமே அமையும். அவற்றில் எந்தக் கொம்பன் தவறு கண்டாலும் அதனைக் காதில் வாங்கித் திருந்துவதற்கோ, திருந்த முயல்வதற்கோ இடம்தரமுடியாது; தரமாட்டோம் என்பதே அரசின் நிரந்தர விதி. தவறு கண்டு பிடிப்போர் சொல்கிறார்கள் என்பதற்காக தமது நிலைப்பாடுகளையும் செயற்பாடுகளையும் தணிக்கவோ, தறிக்கவோ முடியாது என்ற புள்ளியிலிருந்து எந்தத் திசையிலும் அரசு அசையாது என்பது நிச்சயம்.

போற்றுவார் போற்றட்டும் புளுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும் ஏற்ற எம் பணியை நாம் வகுத்த வழியில் பிசகாது ஆற்றுவோம் என்ற பெரும் கோட்பாட்டை எங்கள் நாட்டு அரசு விட்டுக்கொடுக்குமா என்ன...?

# காணி, பொலிஸ் அதிகாரம் நாங்கள் எதிர்க்கிறோம்

**சமத்துவத்தையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டுவதன் மூலமே பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று ஜே.வி.பியின் மாற்றுக் குழுவான மக்கள் போராட்ட இயக்கம் தெரிவித்துள்ளது.**

கொழும்பு,ஜன.27

மாகாண சபைகளுக்குப் பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்படுவதை நாம் கொள்கை ரீதியாக எதிர்க்கின்றோம் என்று ஜே.வி.பியின் மாற்றுக் குழுவான மக்கள் போராட்ட இயக்கம் தெரிவித்துள்ளது.

காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப் பதோ, 13 ஆவது திருத்தச்சட்டத்துக்கு அப்பாலான அதிகாரப் பரவலாக்கத்தை நடைமுறைப்படுத்துவதோ தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ் மக்கள் தமது உரிமையைக் கோருவதற்கான உரிமையை தமது அரசியல் இயக்கம் எப்போதும் ஏற்றுக் கொள்கிறது என்று மக்கள் போராட்ட அமைப்பின் முக்கியஸ்தரான புபுது ஜயகொட தெரிவித்தார்.

காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்குப் பகிர்வதால் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று அரசியல் ரீதியாக நாம் நம்பவில்லை. கொள்கை ரீதியாக அதனை நாம் எதிர்க்கிறோம். அதற்கான அடிப்படை காரணங்கள் உள்ளன. எனினும், வடக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்துமாறு நாம் அரசை வலியுறுத்துகிறோம் என்று அவர் தெரிவித்தார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்கள் அவர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை. வடக்கில் இராணுவப் பிர சன்னம் அதிகரித்துள்ளது. இந்தப் பிரச்சினைகள் முதலில் தீர்க்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

சமத்துவத்தையும் ஜனநாயகத்தையும் நிலை நாட்டுவதன் மூலம் மாத்திரமே இந்தப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதை சிங்கள, தமிழ் மக்களை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு மக்கள் போராட்ட இயக்கம் முயற்சிக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-சி)

# தரவுகளை வழங்க சட்டமா அதிபர் பின்னடிப்பு

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தொடர்பில் போதிய தரவுகளைச் சட்ட மா அதிபர் திணைக்களம் வழங்கத் தவறியுள்ளது என்று சர்வதேச அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் பிரதிநிதி மார்க் ட்ரோவல் குற்றஞ்சாட்டியுள்ளார். குற்றச்சாட்டுக்கள் தொடர்பான தரவுகள் வழங்கப்படும் என்று சட்ட மா அதிபர் பல தடவைகள் உறுதியளித்த போதிலும், இதுவரையில் தரவுகள் வழங்கப்படவில்லை என்று அவர் தெரிவித்தார்.

சரத் பொன்சேகாவின் சட்டத்தரணி உரிய தகவல்களை வழங்கிய போதிலும், சட்ட மா அதிபர் திணைக்களம் எவ்வித தகவல்களையும் வழங்கத் தவறியுள்ளது.

சரத்பொன்சேகா வழக்கு தொடர்பிலான விசாரணைகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதனை கண்காணிக்கும் நோக்கில்தான் நான் இலங்கைக்கு வந்துள்ளேன்.

எனினும், பூரண அறிக்கை தயாரிப்பதற்குக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான தரவுகள் தேவைப்படுகின்றன. அதனைச் சட்ட மா அதிபர் திணைக்களம் வழங்கத்தவறியுள்ளது என்று அவர் தெரிவித்தார். வரையறுக்கப்பட்ட தரவுகளைக் கொண்டு பக்கச்சார்பற்ற முறையிலான ஓர்அறிக்கையையே நான் தயாரித்துள்ளேன் என்று அவர் தெரிவித்தார்.

சரத் பொன்சேகா வழக்கு விசாரணை தொடர்பில் கண்காணிப்பு நடத்துவதற்காக அனைத்து நாடாளுமன்ற ஒன்றியம் விசேட பிரதிநிதி ஒருவரை இலங்கைக்கு அனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு விளக்கமறியல்

கொழும்பு,ஜன.27

பகிடிவதைச் சம்பவம் ஒன்றில் நீதிமன்றில் முன்னிலையான பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் மூவர் எதிர்வரும் 9 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கண்டி நீதிவான் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை இவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவை பிறப்பித்துள்ளது.

நீதிமன்றம் விடுத்திருந்த அழைப்பாணை ஒன்றின் பேரில் பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் 25 பேர் நேற்று நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர். இந்த மாணவர்களில் மூவரைத் தவிர ஏனைய மாணவர்கள் தலா ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடு விக்கப்பட்டனர். (ச)

# நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்த பணிப்பு

கொழும்பு,ஜன.26

கொழும்பு - கண்டி அதிவேக வீதியின் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குடியிருப்புக்கள் குறைந்த பிரதேசங்களில் காணிகளை தெரிவுசெய்து குறைந்த செலவில் உயர்ந்த தரத்துடன் இந்த அதிவேக வீதியை நிர்மாணிக்க எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லும் பயணத்தில் உட்கட்டமைப்பு வசதியை மேம்படுத்த அதிவேக வீதியின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இதனூடாக முதலீடு தொடர்பான ஆர்வத்தை அதிகரிக்க முடியும் என்றும் தெரிவித்தார். (ச)

# மாற்று அணியை உருவாக்குவதில்லை

## சஜித்-கரு தகவல்

கொழும்பு,ஜன.27

ஐக்கிய தேசியக் கட்சியில் மாற்று அணியை ஏற்படுத்தவோ அல்லது தனிக் கட்சியை தொடங்கவோ நாம் எண்ணவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரிய ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

தாம் தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருப்பதாகவும் தாம் மாற்று அணியினர் அல்லர் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கருஜெயசூரிய தெரிவித்ததாவது:

மக்களின் கருத்தை அறிந்தே நான் கட்சியின் தலைவர் பதவிக்கு போட்டியிட்டேன். கட்சியைப் பாதுகாக்கும் நோக்கில்தான் அவ்வாறானதொரு முடிவை எடுத்தேன்.

எனினும், கட்சியின் தலைவரால் தேர்தலுக்கு பின்னரும் எனக்கு எதிராக தொடர்ந்தும் பழிவாங்கல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது குறித்து நான் கவலையடைகின்றேன்.

அதலபாதாளத்தில் விழுந்துள்ள நாட்டை ஐக்கிய தேசியக் கட்சியினால் மாத்திரமே மீட்க முடியும்.

அதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்குள் வலுவான அணி ஒன்று இருக்கின்றது. இதனை அனைவரும் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சிறிகொத்தா மீதான தாக்குதலை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். அந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புள்ளவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும்-என்றார். (ச)

# நிகழ்வுகள் இன்று

கருத்தரங்கு

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் நடத்தும் க.பொ.த. சாதாரண தரத்துக்கு தோற்றிய மாணவர்களுக்கான உயர்தரத்தில் சிறந்த பாடத்தினை தெரிவு செய்வதற்கான ஆலோசனைக் கருத்தரங்கு காலை 9 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-313)

பொதுக் கூட்டம்

தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் பொதுக் கூட்டம் வரணி வடக்கு சிமிழ் அம்மன் ஆலயத்துக்கு அருகாமையில் உள்ள கொத்தணி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

கொத்தணி அதிபர் கி.பூபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் கலந்து கொள்வார். (எ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீரிழிவு நோயாளர்கள் பாதிப்பு

அக்கராயன் ஜன.27

கிளிநொச்சி பொது மருத்துவமனையில் நீரிழிவு நோயாளர்களுக்கு மருந்துகளை மட்டும் வழங்குவதாகவும் நோய் சம்பந்தமான உடல் சோதனைக்கு உட்படுத்தப்படுவதில்லை எனவும் அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு நீரிழிவு நோயாளி ஒருவர் கிளினிக் கொப்பியுடன் சென்றுள்ளார்.

அங்கு அதிகாரிகளிடம் கிளினிக் கொப்பியைக் காட்டி மருந்து மட்டுமே வழங்கப்படுவதாகவும் உடல் பரிசோதனைகள் இடம் பெறுவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். மேற்படி விடயம் தொடர்பாக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட அதிகாரிகள் கேட்டுத் தெரிந்து கொண்டனர்.

அத்தோடு மருத்துவமனையில் நிலவும் வைத்தியர் பற்றாக் குறையே இத்தகைய விளைவுகளை ஏற்படுத்துவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-410)

# 35 வருடகாலமாக திருத்தப்படாத வீதி



துணுக்காய், ஜன.27

கிளிநொச்சி மாவட்ட கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட உருத்திரபுரம் வடக்கில் அமைந்துள்ள சக்திபுரம் எள்ளுக்காடு கிராமத்தின் முதலாவது வீதி சுமார் 35 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாத நிலையில் இருந்து வருவதால் இதனூடான பயணங்களை மேற்கொள்ள முடியாமல் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு இருக்கின்றனர்.

மேற்படி சக்திபுரம் எள்ளுக்காடு கிராமத்தில் சுமார்15 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மிகவும் வறுமையில் வாழ்ந்து வருகின்றன. இவர்கள் விவசாயத் தொழிலையே பிரதான தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர்.

1974 ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் குடியேறியதில் இருந்து இன்றுவரை எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் வாழ்ந்து வருவதாக இந்தக் கிராமத்தின் மக்கள் தெரிவித்தனர்.

விவசாயத்தை மேற்கொண்டு வரும் இந்த மக்களால் உற்பத்தி செய்து வரும் பொருள்களை இந்த வீதியூடாக எடுத்துச் செல்ல முடியாமல் உள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியால் 2 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள உருத்திரபுரம் சந்தைக்கும் 20 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கிளிநொச்சி சந்தைக்கும் மிகவும் சிரமத்தின் மத்தியில் சென்று விவசாய உற்பத்திகளை விற்று வருவதாகவும் இதனால் பெரும் பண விரயம் ஏற்படுவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் உருத்திரபுரம் கிராமத்தில் அமைந்த வைத்தியசாலைக்கு நோயாளர்கள் நடை பவனியாகச் சென்று வைத்திய சிகிச்சையையும் பெற்று வருகின்றனர். இந்தக் கிராமத்தில் இருந்து இதேவீதியூடாக மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று வருகின்றார்கள்.

ஆகவே 35 வருடகாலமாகத் திருத்தப்படாத இந்த வீதியை திருத்த சம்பந்தப் பட்ட பிரதேச சபையினர் முன் வர வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர். (எ-415)

## ஆற்றில் கலக்காமல் கழிவுநீரை தடுக்கவும்

அக்கராயன், ஜன.27

கிளிநொச்சி பொது மருத்துவமனையில் இருந்து வெளியேறும் கழிவுநீர் அருகில் உள்ள சிறிய ஆற்றில் கலப்பதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இந்த ஆறு இரத்தினபுரத்துக்கும் ஆனந்தபுரத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் ஓடுகிறது.

மருத்துவமனைக் கழிவு நீரால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகத் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் கால்நடைகள் இவ்வாற்றில் தண்ணீர் குடிப்பதால் மருத்துவமனையின் கழிவு நீரை ஆற்றில் கலக்க விடாது தடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-400)

## பேருந்துக்காகக் காத்திருக்கும் அரச உத்தியோகத்தர்கள்

முல்லைத்தீவு, ஜன.27

முல்லைத்தீவு மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் ஒரு வழிப் பாதையில் அதிகமாக சேவையில் ஈடுபடுவதால் வேறு வழிப் பேருந்துகளுக்கு காத்திருக்கும் அரச உத்தியோகத்தர்கள் நீண்ட நேரக் காத்திருப்பின் பின்னர் பயணம் செய்ய வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணம், மாங்குளம், ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேசங்களுக்குச் செல்ல வேண்டிய அரச உத்தியோகத்தர்கள் பாதிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்துக்குப் பெருமளவான அரச உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில் தமது சேவை நேரம் முடிவுற்றதும் யாழ்ப்பாணம், மாங்குளம், ஒட்டுசுட்டான் ஆகிய பிர தேசங்களுக்குச் செல்ல வேண்டிய அரச உத்தியோகத்தர்கள் நெடுங்கேணி ஊடாக வவுனியா செல்லும் பேருந்து சேவை மட்டும் சேவையில் ஈடுபடுவதால் பஸ்தரிப்பிடங்களில் காத்திருக்க வேண்டியுள்ளது.

அத்துடன் ஏனைய வழிப் பேருந்துகள் பல மணித்தியாலங்களின் பின்னரே சேவையில் ஈடுபடுகின்றது.

எனவே நெடுங்கேணி வழிப் பேருந்து குறித்த நேரத்தில் தொடர்ச்சியாகச் சேவையில் ஈடுபடுவதைப் போன்று ஒட்டுசுட்டான், மாங்குளம் ஊடாகச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பாதிப்படைந்துள்ள அரச உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-500)



மன்னார் எழுத்தூர் பெரியகமம் கிராமத்தில் அமைந்துள்ள சிறு மலர் சிறுவர் பாடசாலைக்கு அமைச்சர் றிஸாட் பதியுதீனின் பிரதிநிதியும் மன்னார் நகரசபையின் உறுப்பினருமான என்.நகுசின் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களை நேற்றுமுன்தினம் வழங்கியுள்ளார். பாடசாலையில் சுமார் 25 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் கல்வி கற்று வருகின்றனர். குறித்த சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காகத் தனது சொந்தப் பணத்தில் இருந்து குறித்த கற்றல் உபகரணங்களை இவர் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-601)

## முகாம் கழிவு நீரால் சுகாதாரச் சீர்கேடு

அக்கராயன், ஜன.27

கிளிநொச்சி நகரில் உள்ள இராணுவ முகாம்களிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இந்தத் தகவல் தெரிவிக்கப் பட்டது.

கிளிநொச்சி நகரினையும் அதனை அண்டிய பகுதிகளிலும் இராணுவ முகாம்களில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தேங்கி நிற்பதாகவும் மக்கள் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தின் 58 ஆம் படைப் பிரிவு நிலைகொண்டுள்ள முகாம்களில் வெளியேறும் கழிவு நீரால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இராணுவத்தின் 58 ஆம் படைப்பிரிவு நிலைகொண்டுள்ள முகாம்களில் வெளியேறும் கழிவு நீரால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி நகரில் இருந்து வெளியேறும் நீர் வாய்க்கால் மூலம் வயல் நிலங்களை வந்தடைவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (எ-6-410)

## இருபாடசாலைகள் மூடப்பட்டன

அக்கராயன், ஜன.27

கிளிநொச்சி கரைச்சிக் கல்விக் கோட்டத்தில் இரு பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக கரைச்சிக் கோட்டக்கல்வி அலுவலர் அ.அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தத் தகவலைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:-

நாள்தோறும் கல்வியாளர்கள் ஒன்று கூடி பாடசாலையின் முக்கிய தேவைகளை இனங்கண்டு முதன்மைப்படுத்தி நடைமுறைப் படுத்தி வருகின்றோம்.

106 ஆவது பாடசாலையைக் கடந்த வாரம் ஆரம்பித்து வைத்திருக்கிறோம். கரைச்சிக் கோட்டத்தைப் பொறுத்தவரை 40 பாடசாலைகளில் இரண்டு பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

குஞ்சுக்குளம் கணேச வித்தியாலயம், குஞ்சுக்குளத்தில் மக்கள் இல்லாமையால் கறுக்காய் நகரிலே இயங்கி வந்தது. கறுக்காய் நகரில் மக்கள் மீளக்குடியமராமையால் அந்தப் பாடசாலை மூடப்பட்டுள்ளது. மற்றைய பாட சாலையாகிய சிங்கள மகா வித்தியாலயம் பல காலமாக மூடப்பட்டுள்ளது.

ஆசிரியர் பற்றாக்குறை கல்வியில் பெரும் பிரச்சினையாகவுள்ளது. மார்ச் மாதத்தில் தேவையான ஆசிரியர்கள் வரவுள்ளனர் எனவும் தெரிவித்தார். (எ-410)

## விஷப்பாம்புகளின் நடமாட்டம் அதிகரிப்பு

துணுக்காய், ஜன.27

பாண்டியன்குளம், துணுக்காய், மாங்குளம் போன்ற பிரதேசங்களில் இரவு வேளைகளில் விஷப் பாம்புகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

பாண்டியன்குளம், துணுக்காய், மாங்குளம் போன்ற பிரதேசங்களில் இரவு வேளைகளில் விஷப் பாம்புகளின் தொல்லை அதிகரிப்பு

மேற்படி பிரதேசங்களில் காட்டுப் பனி மழை பெய்து வருகின்றமையால் மக்கள் நடமாடும் பிரதேசங்களில் விஷப்பாம்பின் நடமாட்டமும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

மல்லாவி வைத்திய சாலையில் கடந்தவருடம் 437 பேர் விஷப்பாம்புக் கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்றனர். பலர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

இரவில் மக்கள் தமது அத்தியாவசிய தேவைகளுக்குச் செல்லும்போது பயப் பீதியுடன் செல்வதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (எ-415)

### சிறைக் கைதிகளுக்கு பொருள்கள் வழங்கல்

கொழும்பு சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு உணவல்லாத பொருள்களை வழங்குவதற்காக "உலக நண்பர்களுக்கான அமைப்பு' ஒரு தொகுதி உணவல்லாத பொருள்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர்களிடம் கையளித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை மேற்படி அமைப்பின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஜெ.கிலேந்தன் மற்றும் உப செயலாளர் க.பவமொழி பவன் ஆகியோரால் நாடாளு மன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோநோகராதலிங்கம் ஆகியோரிடம் அவர்களது அலுவலகத்தில் வைத்து ஒப்படைக்கப்பட்டது.

## பண்ணையாளர்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

துணுக்காய், ஜன.27

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாடு, ஆடு, கோழிகள் வைத்துள்ள பண்ணையாளர்கள் அனைவரும் தமது பகுதி கால்நடை வைத்திய பணிமனையில் தமது பண்ணைகளைப் பதிவு செய்தல் வேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பதிவு செய்யாத பண்ணையாளர்கள் இனிவரும் காலங்களில் திணைக்களம் தொடர்பான எந்தவித செயற்பாடுகளையும் செய்ய முடியாது என்றும் தெரிவிக்கின்றன.

பண்ணைகளைப் பதிவு செய்யும் பண்ணையாளர்கள் மாட்டுக்கு காது இலக்கத் தகடுகளைப் பொருத்துவதை உறுதி செய்வதுடன் பண்ணையின் இலக்கத்தையும் அதற்கான அட்டையையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

முக்கியமாகத் தமது மாட்டுப் பண்ணைகளைப் பதிவு செய்யும் பண்ணையாளர்கள் மாட்டுக்கு காது இலக்கத் தகடுகளைப் பொருத்துவதை உறுதி செய்வதுடன் பண்ணையின் இலக்கத்தையும் அதற்கான அட்டையையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இந்தத் தகடுகள் இடப்பட்ட விலங்குகளுக்கு, மட்டுமே தடுப்பூசி மற்றும் விற்பனை கொள்வனவுக் கான அனுமதி, செயற்கை முறை சினைப்படுத்தல் போன்ற எந்தவொரு செயற்பாட்டுக்கும்அனுமதிவழங்கப்படும்.

நாடளாவிய ரீதியில் நடைபெறும் கால்நடை பண்ணைகள் பதிவு செய்யும் செயற்பாட்டில் முல்லைத்தீவு பிரதேச பண்ணையாளர்களும் மிக விரைவாக இந்த வருட இறுதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இதன்மூலம் எதிர்வரும் காலங்களில் பண்ணையாளர்களுக்குக் கிடைக்கக் கூடிய அனைத்து நன்மைகளையும் பெற முடியும் என திணைக்கள வட் டாரங் கள் மேலும் தெரிவிக்கின்றன. (எ-415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளும் தரப்பு சர்வாதிகாரத்தால் மாநகர எதிர்த்தரப்பு வெளிநடப்பு

**மாநகரசபையில் ஆளும் தரப்பு ஜனநாய கத்தை மதிக்காமல் சர்வாதிகாரப் போக்கில் செயற் படுவதைக் கண்டித்து எதிர்த் தரப்பினர் புறக் கணிப்பில் ஈடுபட்டனர். சட்டத்துக்கு முரணான ஆளும் தரப்பின் நடவடிக்கைகள் பற்றி கடிதம் ஒன்றும் ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டது.**

யாழ்ப்பாணம், ஜன.27

நிலையியற் குழுக்கள் தெரிவில் எதிரணியினர் பிரேரித்த பெயர்களைப் பதிவு செய்யாமல் ஆளும் கட்சியினர் தமது விருப் பப்படி நடந்து கொள்கின்றனர் என்று குற்றஞ்சாட்டிய யாழ்.மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள். சபைக் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

மாநகர சபையின் ஆளும் தரப்பு ஜனநாயகத்தை மதிக்காமல் சர்வாதிகாரப் போக்கில் செயற்படுகின்றது என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின. இதனைக் கண்டித்த அவர்கள் சபை நடவடிக்கையைப் புறக் கணித்து எழுந்து வெளியேறினர்.

சபைக்குத் தாங்கள் சமூகமளிக்காத நிலையில் நிலையியற் குழுவில் தமது பெயர்கள் இடம்பெறுவதை எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை எனவும் அவர்கள் கூறினர். சட்டத்துக்கு முரணான விதத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள இந்தக் குழுவை இயக்க முற்பட்டால் அதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் எனவும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

எதிர்க்கட்சியினரின் இந்த ஆட்சேபம் அடங்கிய கடிதம் யாழ்.மாநகர சபை ஆணையாளரிடம் நேற்றே கையளிக்கப்பட்டது.

கூட்டமைப்பு உறுப் பினர்களுடன் சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் இ.சங்கை யாவும் இந்தக் கடிதத்தில் கையெழுத்திட்டிருந்தார். (உ-7)

## உறுப்பினர் நிசாந்தனை தூக்கி எறிந்தது கட்சி

### மங்களநேசனும் பதவி விலகுகிறார்

யாழ்ப்பாணம், ஜன.27

யாழ்.மாநகர சபை உறுப் பினர் பதவியில் இருந்தும் ஐ.ம.சு. முன்னணி கட்சியில் இருந்தும் கிளர்ச்சியாளரான எஸ். நிஷாந்தன் தூக்கி எறியப்பட்டார்.

ஆளும்கட்சியின்கொள்கை விதிமுறைகளுக்கு எதிராகத் தவறான வழியில் சபை மீது குற்றச்சாட்டுக் களைச் சுமத்திய அவர் அவற்றை நிரூபிக்க தவற விட்டார் என்று குற்றஞ்சாட்டியே நிஷாந்தனின் உறுப் புரிமையை ஐ.ம.சு.முன் னணி கட்சி பறித்துள்ளது.

அது குறித்து தேர்தல் ஆணையா ளருக்கு கட்சி அறிவித்ததை அடுத்து தேர் தல் ஆணையாளர் மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து நிஷாந் தனை நீக்கி உள்ளார்.

அரச வர்த்தமானி மூலம் இது பற்றிய அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளரின் கடிதம் யாழ்.மாநகர சபை ஆணையாளருக்கு யாழ். உதவி தேர்தல் ஆணையாள ரால் அனுப்பி வைக்கப்பட்டிருந்ததை அடுத்து நேற் றைய சபைக் கூட்டத்துக்கு நிஷாந்தன் அனுமதிக்கப்பட வில்லை.

இதேசமயம், மாநகர சபை ஆளும் தரப்பின் மற்றொரு உறுப்பினரான ம.மங்கள நேசனும் சபை நடவடிக்கைகள் ஒழுங்காக இல்லை எனவும் முதல்வர் முறைகேடுகளில் ஈடுபடுகிறார் எனவும் குற்றஞ்சாட்டி தனது உறுப் பினர் பதவியை இராஜினாமா செய்யப் போகிறார் என்றும் நேற்றுச் சபையில் அறிவித்தார்.

முன்னதாக சபை எதிரணி உறுப்பினர்களுடன் சேர்ந்து அவரும் சபையைப் பகிஷ்கரித்து வெளிநடப்புச் செய்திருந்தார். (உ-7)

## இந்தியக் குடியரசு தினம் யாழ்ப்பாண மண்ணிலும்



இந்தியாவின் 62ஆவது குடியரசு தினம் யாழ்ப்பாணம் கந்தர்மடம் பலாலி வீதியில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்றுக் கொண்டாடப்பட்டது. துணைத் தூதர் வி. மகாலிங்கம் இந்தியத் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து வணக்கம் செலுத்தினார். தொடர்ந்து இந்தியக் குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீலின் செய்தியை வாசித்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய நாட்டவர்கள் சிலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (உ-23)

## கைதடி விபத்தில் இருவர் காயம்

தென்மராட்சி, ஜன.27

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை கைதடியில், ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பாணத்தில் இடம்பெறவிருந்த கூட்டம் ஒன்றில் கலந்துகொள்வதற்காக வந்த முல்லைத்தீவு மாவட்ட ஆயுள்வேத ஒருங்கிணைப்பாளர் கந்தசாமி காண்டீபன் (வயது-32) என்பவர் காயங்களுடன் சாவகச்சேரி ஆதார வைத்தியாலையில் அனு மதிக்கப்பட்டார். மற்றவர் கால் முறிந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டார். (ங-207)

## வேலையற்றோர் விவரம் குடாநாட்டில் திரட்டல்

யாழ்.மாவட்டத்தில் உள்ள வேலையற்ற இளைஞர் யுவதிகளின் விவரங்களை மாவட்டச் செயலகம் சேகரிக்க ஆரம்பித்துள்ளது. மாவட்டத்தில் பல ஆயிரக் கணக்கான இளைஞர், யுவதிகள் படித்துவிட்டும், இடைநிலைக் கல்வியுடனும் வேலையற்ற நிலையில் இருக்கிறார்கள். இவர்களுக்கான வேலை வாய்ப்புக் குறித்து ஆராயவே விவரங்கள் திரட்டப்படுகின்றன.

குடாநாட்டில் வேலையற்றிருப்போரின் விவரங்கள் இதுவரை திரட்டப்பட்டிருக்கவில்லை, தற்போது பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரச அதிபர் பிரிவுகள் ரீதியாக இந்த விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

யாழ்.மாவட்டத்தில் முதுகலைமாணி பட்டதாரிகள், பட்டதாரிகள், க.பொ.த உயர்தரம் மற்றும் சாதாரணதரம் வரை கற்றவர்கள் எனப் பல தரப்பினரும் வேலையற்ற நிலையில் காணப்படுகின்றார்கள்.

வேலையற்றவர்களின் விவரங்களைப் பதிவு செய்யும் பணியில் பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கடமையாற்றும் வெளிக்கள அலுவலர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்றும் பிரதேச செயலர்கள் தெரிவித்தனர். (உ-86)

## 'மடி'யைக் கெடுத்த மதுப் போத்தல்கள்

யாழ்ப்பாணம், ஜன.27

அனுமதிப்பத்திரமின்றி அதிகளவில் மதுபானப் போத்தல்களைத் தன்வசம் வைத்திருந்தவருக்கு ஐயாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதோடு மதுப்போத்தல்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

நயினாதீவைச் சேர்ந்த நபரே இவ்வாறு தண்டிக்கப்பட்டார். இவரை ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைது செய்தனர். அவரிடமிருந்து அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேலதிகமாக 9 மதுப் போத்தல்களைத் தாம் மீட்டனர் என்று பொலிஸார் நீதிமன்றில் கூறினர்.

ஊர்காவற்றுறை நீதிவான் எஸ்.எம். மகேந்திரராஜாவிடம் குறித்த நபர் முன்னிலைப்படுத்தப்பட்டார். சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவரிடமிருந்து மதுப்போத்தல்கள் பறிமுதல் செய்யப்பட்டதோடு ஐயாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. (உ-4)

* * *

அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் விற்பனை செய்த இரண்டு பேருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதி வான் எஸ்.எம். மகேந்திரராஜா 20 ஆயிரம் ரூபா அப ராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

வேலணையைச் சேர்ந்த குற்றவாளிகள் இருவரையும் ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முன்னிறுத்தியிருந்தனர். (உ-4)

## ஆஸ்பத்திரிக்கு உபகரணங்கள் வெளிநாட்டு அமைப்புகள் உதவி



யாழ்ப்பாணம், ஜன.27

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 5 லட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் நேற்று அன்பளிப்பாக வழங்கப்பட்டன. வைத்தியசாலை நிர்வாகம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இவை கிடைக்கப்பெற்றுள்ளதாக வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

பிரிட்டனில் உள்ள லிட்டில் மெடிக்கல் எயிட், தமிழ் மெடிக்கல் எயிட் ஆகிய அமைப்புக்களை இணைந்து டென்மார்க்கிலுள்ள குளோபல் மெடிக்கல் எயிட் அமைப்பின் ஊடாக இவற்றை வழங்கியுள்ளன.

குளோபல் மெடிக்கல் எயிட் அமைப்பின் தலைவர் பிரட்றிக் டயன்ஸ்பேர்க் வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜாவிடம் நேற்று உபகரணங்கள் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

நிகழ்வில் மருத்துவர் லயன் தியாகராஜா, மருத்துவர் குணதாஸ், யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி விரிவுரையாளர் இளம்பிறையன், வைத்தியசாலை செயலாளர் ஏ.எஸ்.பிரசாத் ஆகியோரும் கலந்துகொண்டனர். (உ-4)

## 'உண்மை விதை' தேடும் விவசாயத் திணைக்களம்

### வெங்காயச் செய்கையை மேம்படுத்துவதில் தீவிரம்

**''நாற்று மூலம் நடுகை செய்வதால் பயிர் பராமரிப்புச் செலவும் தோட்டத்தில் பராமரிக்கும் கால அளவும் குறைவடைகின்றது. அத்துடன் தரமான வெங்காயத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்''**

அச்சுவேலி, ஜன.27

யாழ்.மாவட்டத்தில் வேதாள வெங்காயத்தை நாற்று மூலம் நடுகை செய்வதற்கான 'உண்மை விதையை' உற்பத்தி செய்யும் முயற்சியில் யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் முனைப்போடு ஈடுபட்டுள்ளது. உண்மை விதை உற்பத்தியில் 15 விவசாயிகளை ஈடுபடுத்தி இருப்பதோடு அவர்களுக்கான சகல வசதிகளும் 6 லட்சம் ரூபா நிதி உதவியுடன் செய்யப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் முதன் முதலாக மேற்கொள்ளப்பட்டுள்ள வேதாள வெங்காய நாற்றுக்கான உண்மை விதை உற்பத்தியில் தெரிவு செய்யப்பட்டுள்ள முன்னோடி விவசாயிகள் 15 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கான வெங்காய விதை, பசளை, கிருமிநாசினி, தொழில்நுட்ப உதவி, நிபுணத்துவ ஆலோசனை உள்ளிட்ட அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

வேதாள வெங்காய உண்மை விதை உற்பத்தியில் புலோலி, மாதகல், கைதடி, வேலணை, கரவெட்டி, திருநெல்வேலி உள்ளிட்ட இடங்களில் செய்யப்பட்ட முன்னோடி விவசாயிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட முன்னோடி விவசாயிகளிடம் இருந்து வெங்காய விதை யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு அடுத்தபோக செய்கைக்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு நியாய விலையில் வழங்கப்படவுள்ளது.

''நாற்று மேடையில் 40 தினங்கள் நாற்றுக்கள் பராமரிக்கப்பட்ட பின்னர் பண்படுத்தப்பட்ட தோட்டத்தில் உரிய முறையில் பிட்டியிலும், பாத்தியிலும் நாற்றுக்கான நடுகை செய்யலாம். தோட்டத்தில் நடுகை செய்யப்பட்ட பின்னர் 70 தினங்களுக்கு நீர் பாய்ச்சி பயிரை பராமரித்தால் தரமான வெங்காயத்தை அறுவடை செய்யலாம். இதன் மூலம் மிகக் குறைந்த மூலதனத்துடன் மிகக் கூடிய வருவாயை விவசாயிகள் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலை ஏற்படும்'' என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

''நாற்று மூலம் நடுகை செய்வதால் பயிர் பராமரிப்புச் செலவும் தோட்டத்தில் பராமரிக்கும் கால அளவும் குறைவடைகின்றது. அத்துடன் தரமான வெங்காயத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்'' என யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள பாடவிதான அதிகாரி இ.சௌந்தரராசன் தெரிவித்தார். (உ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் நிலையம் அமைக்க பாடசாலைக் காணியில் கண்

அச்சுவேலி, ஜன.27

அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு பத்தமேனி விபசி வித்தியாலயத்துக்குச் சொந்தமான காணியைக் கையகப்படுத்தும் முயற்சியில் பொலிஸ் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு நிரந்தரமான புதிய கட்டடத்தைக் கட்டுவதற்கு பொலிஸ் திணைக்களம் நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டுள்ளது. இதற்கான காணியை இனங்காணும் முயற்சிகள் இடம்பெற்றுவந்தன. பொலிஸ் நிலையம், அச்சுவேலி இராச வீதியில் காணியைப் பெற்றுக்கொள்ள முயற்சிகள் எடுக்கப்பட்டன. அவை கைகூடாமையினால் பாடசாலைக்குச் சொந்தமான இடத்தைக் கைமாற்றுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

> ''ஒரு பாடசாலையை அழித்து பொலிஸ் நிலையம் அமைப்பது என்பது நாட்டில் நல்ல குடிமக்களைத் தவிர்த்து குற்ற வாளிகளைப் பெருக்குவதில் அக்கறை எடுப்பது போன்று உள்ளது''

அச்சுவேலி-செல்வச்சந்நிதி வீதிக்கு மேற்குப் புறமாக பத்தமேனியில் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்படாமல் மூடப்பட்ட நிலையில் அச்சுவேலி விபசி வித்தியாலயம் இருக்கிறது.

1967ஆம் ஆண்டு காலப் பகுதியில் தென்னிலங்கையைச் சேர்ந்த பௌத்த அமைப்புகளின் ஆதரவுடன் யாழ்.மாவட்டத்தில் ஐந்து பௌத்த தமிழ் பாடசாலைகள் நிறுவப்பட்டன. அதில் ஒன்றுதான் பத்தமேனி விபசி வித்தியாலயம். இதற்கான காணி பொதுமக்களினால் குறித்தகாலப்பகுதியில் பாடசாலைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது எனக் கூறப்படுகிறது. எனினும் காலப் போக்கில் இது தமிழ்ப் பாடசாலையாக மட்டுமே இயங்கி வந்தது.

1995 இல் வலிகாமம் இடம்பெயர்வினைத் தொடர்ந்து 1996 ஆம் ஆண்டு மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் அச்சுவேலிப் பகுதியில் மூன்று பாடசாலைகள் மூடப்பட்டன. அதில் ஒன்றாக பத்தமேனி விபசி வித்தியாலயமும் அடங்குகிறது.

விபசி வித்தியாலயக் காணியைஅச்சுவேலிபொலிஸ் நிலையத்துக்கு கைமாற்றுவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. பாதுகாப்பு அமைச்சும் பொலிஸ் திணைக்களமும் காணியை பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளில் முனைப்போடு ஈடுபட்டுவருவதால் காரியம் கைகூடிவிடும் எனக் கூறப்படுகின்றது.

போரின் பின்னர் பாடசாலையை மீளவும் செயற்பட வைக்கும் முயற்சியில் பெற்றோரும் பாடசாலைச் சமூகமும் ஈடுபட்டு வரும் சூழ்நிலையில், பொலிஸ் நிலையத்தின் தேவைக்காக அதனைப் பெறுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவது தொடர்பாக பெற்றோர் அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்துள்ளனர்.

''பாடசாலைகளை அமைப்பதும் மீள இயக்குவதும் நாட்டில் நல்ல குடிமக்களை உருவாக்குவதற்கான அறிகுறிகள். ஆனால் பொலிஸ் நிலையங்களின் உருவாக்கம் குற்றாவளிகள் பெருக்கத்துக்கான அறிகுறி. ஒரு பாடசாலையை அழித்து பொலிஸ் நிலையம் அமைப்பது என்பது நாட்டில் நல்ல குடிமக்களைத் தவிர்த்து குற்றவாளிகளைப் பெருக்குவதில் அக்கறை எடுப்பது போன்று உள்ளது'' என்று குடாநாட்டு அறிஞர்கள், கல்விச் சமூகத்தினர் தெரிவித்தனர். இந்த நடவடிக்கையைப் பொலிஸ் திணைக்களம் உடன் கைவிட்டு பொலிஸ் நிலையத்துக்கு வேறு இடம் பார்க்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுத்தியுள்ளனர். (உ-11)

## வெட்டப்படும் மரங்கள்

தென்மராட்சி, ஜன.27

வரணி, நாவற்காட்டுப் பகுதியில் குடியிருப்புகள் இல்லாத காணிகளின் வேலிகளில் காணப்படும் மரங்களை சிலர் 'அடாத்தாக' வெட்டி எடுத்துச் செல்வதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தினமும் காலை வேளைகளில் இந்தப் பகுதிக்கு வரும் ஒரு குழுவினர் தம் இஷ்டப்படி இங்குள்ள ஆள்களற்ற காணிகளின் வேலிகளில் உள்ள மரங்களை வெட்டித் தறித்து சைக்கிள்களில் வியாபாரத்துக்காகக் கொண்டு செல்கின்றனர். இத்தகைய செயலை தடுக்க முனைந்த ஊர்மக்களை இந்தக் குழுவினர் கத்தி போன்ற ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக கிராம அலுவலர்கொடிகாமம்பொலிஸ் நிலையம், தென்மராட்சிப் பிரதேச செயலர் ஆகியோரிடம் முறையிட்டும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் மக்கள் தெரிவித்தனர். (ங-207)

## கடற்படையின் தாக்குதலுக்கு வலி.தெற்கு சபை கண்டனம்

வலி.வடக்கு, ஜன.27

வலி.வடக்குப் பிரதேச சபையின் தலைவர் மற்றும் உறுப்பினர் கடற்படையினரால் தாக்கப்பட்டதைக் கண்டித்து வலி தெற்குப் பிரதேச சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

வலி.தெற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் தியாகராசா பிரகாஸ் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களால் கடற்படையின் தாக்குதலைக் கண்டிக்கும் முன்மொழிவு கொண்டுவரப்பட்டது.

சபையின் எதிர்க்கட்சியினரான அரச தரப்பு உறுப்பினர்கள் பிரேரணைக்கு ஆதரவு வழங்கவில்லை. எனினும் பெரும்பான்மை ஆதரவுடன் இக்கண்டனம் தீர்மானமாக்கப்பட்டது.

''மக்களின் இறப்புக்குக் காரணமாக இருக்கும் டெங்கு நுளம்பை ஒழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவரும் உறுப்பினரும் மற்றும் பொது மக்களும் தாக்கப்பட்டுள்ளார்கள்.

> எதிர்க்கட்சியினரான அரச தரப்பு உறுப்பினர்கள் இந்தப் பிரேரணைக்கு ஆதரவு வழங்கவில்லை. எனினும் பெரும்பான்மையானோரின் ஆதரவுடன் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

இலங்கை ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட திட்டத்தின்போதே கடற்படையினர் இவ்வாறு நடந்து கொண்டுள்ளனர். இது கண்டிக்கத்தக்கதுடன் மக்களின் பிரதிநிதிகள் மக்களுக்கான சேவையை வழங்க முடியாத நிலைமையையும் இத்தகைய சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாது இருப்பதை உரிய தரப்புகள் உறுதிப்படுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-86)



வடபகுதிக்கான ரயில் பாதைகளை மீளமைக்கும் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன. ரயில் பாதை புனரமைப்பில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் அரியாலை நெடுங்குளம் பகுதியில் வெடிக்காத நிலையில் மண்ணில் புதைந்திருந்த எறிகணை ஒன்றை இனங்கண்டனர். இதனால் புனரமைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டு, இது குறித்து படையினருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. வெடிக்காத நிலையில் காணப்பட்ட இந்த எறிகணையை படையினர் மீட்டெடுத்துச் சென்றனர். அதன்பின்னர் மீளமைப்புப் பணிகள் மீண்டும் ஆரம்பமாகின. ரயில் பாதையைப் புனரமைக்கும் பணியின் போது இதுபோன்ற இன்னும் பல வெடிபொருள்கள் மீட்கப்படலாம் என்று பணியாளர்கள் தெரிவித்தனர்.

## கிராம அலுவலர் வீட்டில் திருட்டு

தென்மராட்சி, ஜன.27

பெண் கிராம அலுவலர் கடமைக்குச் சென்ற பின்னர் இவரது வீட்டின் ஓடுகளைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் அங்கிருந்து பெறுமதிமிக்க பொருள்களை அபகரித்துச் சென்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை சாவகச்சேரி நகரிலிருந்து 100 மீற்றர் தூரத்திலுள்ள கற்குளியில் இடம் பெற்றுள்ளது. திருட்டு நடந்த சமயம் அவரது கணவரும் அலுவலகத்துக்குச் சென்றிருந்தார்.

இவரது வீட்டு வாசலில் பச்சை நிற ஒட்டோ நின்றதை அயலவர்கள் அவதானித்த போதிலும் கிராம அலுவலரிடம் தேவைக்காக வந்திருக்கலாமெனநினைத்து அசண்டையீனமாக இருந்து விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட திருடர்கள் தமது கைவரிசையை கிராம அலுவலர் வீட்டில் காட்டி விட்டனர். திருட்டுச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-207)

## மீறப்பட்டது ஆளுநரின் உத்தரவு: இருளில் மக்கள்

யாழ்ப்பாணம், ஜன 27

மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட வலி. வடக்கு பிரதேசத்தின் சில பகுதிகளில் இதுவரையில் மின்சாரம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அந்தப்பகுதி மக்கள் இரவை பெரும் சிரமத்துடனேயே கடத்த வேண்டி இருக்கிறது. 3மாதங்களுக்குள் இலவசமாகத் தமக்கு மின் இணைப்பு வழங்குமாறு விடுத்த அறிவுறுத்தலை மின்சாரசபை புறக்கணித்து விட்டதாக மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

> மின்சாரம் இல்லாததால் தொழில் முயற்சிகளை மேற்கொள்ள முடியவில்லை என்று மீளக் குடியமர்ந்த மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வலி.வடக்கு பிரதேசத்தில் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதமும், 2011 ஆம் ஆண்டு மே மாதமும் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டனர். ''இந்தப் பகுதிகளுக்கான மின்சார விநியோகம் அதன் பின்னர் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் இதுவரையில் வித்தகபுரத்துக்கும் அதனை அண்டிய சில பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கப்படவில்லை. அதற்கான ஏற்பாடுகளும் கூட இதுவரை மேற்கொள்ளப்படவில்லை'' என்று மீளக்குடியமர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருட நடுப்பகுதியில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடந்த விசேட மாநாட்டில் வலி.வடக்கில் மீளக்குடியமர்ந்த சகலருக்கும் மூன்று மாதங்களுக்குள் இலவசமாக மின் இணைப்புகளை வழங்குமாறு மின்சார சபைக்கு வடமாகாண ஆளுநர் சந்திரசிறி அறிவுறுத்தி இருந்தார்.

இதன் பின் சில பகுதிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டாலும் சில பகுதிகளுக்கு இதுவரையில் வழங்கப்படவில்லை. இதன் காரணமாக பொதுமக்கள் இரவில் கடும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். மின்சாரம் இல்லாததால் தொழில் முயற்சிகளை மேற்கொள்ள முடியவில்லை என்று மீளக் குடியமர்ந்த மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் பிரதேச மக்கள் மின்சாரசபையிடம் கேட்டபோது உடனடியாக மின்சாரம் வழங்க வேண்டுமானால் பணத்தைச் செலுத்தினால் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (உ-15)

## சைக்கிள் இலக்கத் தகடு விநியோகம் ஆரம்பமாகவில்லை

யாழ்ப்பாணம், ஜன.26

யாழ்.மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளில் 2012 ஆம் ஆண்டுக்குரிய சைக்கிள் உரிம இலக்கத் தகடுகள் விநியோகம் ஆரம்பிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வருடந்தோறும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மார்ச் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் சைக்கிள் இலக்கத் தகடுகள் விநியோகம் முடியவடைய வேண்டும்.

எனினும் இந்த வருடம் ஜனவரி மாதம் முடிவடையும் தறுவாயில் கூட இலக்கத் தகடுகள் விநியோகம் இதுவரை ஆரம்பமாகவில்லை. இதனால் இலக்கத் தகடுகளை பெறுவதற்காக உள்ளூராட்சி சபைகளுக்குச் செல்லும் மக்கள் ஏமாற்றம் அடைவதாக தெரிவிக்கப்பட்டது.

சைக்கிள்களுக்கான இலக்கத் தகடுகள் இன்னமும் உள்ளூராட்சி சபைகளுக்கு வந்து சேராததாலேயே விநியோகம் ஆரம்பமாவதில் தாமதம் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. (ங-207)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கல்முனை மீனவர்களை அழைத்துவர நடவடிக்கை

அம்பாறை, ஜன.27

கல்முனையிலிருந்து மீன்பிடிக்கச்சென்று காணாமற்போய் தமிழ்நாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ள நான்கு மீனவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை கைத்தொழில், வணிக அமைச்சின் ஆலோசகர் வை.எல்.எஸ். ஹமீட் மேற்கொண்டு வருகின்றார்.

கடந்த 9 ஆம் திகதி கல்முனை, சாய்ந்தமருது பகுதியில் இருந்து ஆழ்கடல் மின்பிடிக்காகச் சென்ற நால்வரும் காணாமல் போயிருந்த நிலையில் அவர்களைத் தேடும் பணியில் கடற்படையினர் தீவிரமாக ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை தமிழ்நாடு - கன்னியாகுமரி கடலில் கரையொதுங்கிய நான்கு மீனவர்களையும் அந்தப் பகுதி மீனவர்கள் காப்பாற்றியுள்ளனர். தற்போது பொலிஸாரின் பாதுகாப்பிலுள்ள குறித்த மீனவர்களை இலங்கைக்கு கூட்டிக்கொண்டு வருவது தொடர்பில் தமிழகத்திலுள்ள இலங்கைத் துணைத் தூதரக அதிகாரிகளுடன் சட்டத்தரணி வை.எல்.எஸ். ஹமீட் பேச்சுகளை நடத்தியிருப்பதுடன் தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார். (ச)

## மேல் கொத்மலை வான் கதவு திறப்பு

நுவரெலியா, ஜன.27

கொத்மலை நீர்தேக்கத்தின் வான் கதவுகள் நேற்று வியாழக்கிழமை திறக்கப்பட்டதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் நுவரெலியா மாவட்ட இணைப்பதிகாரி தெரிவித்தார்.

காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை வான் கதவுகள் திறக்கப்பட்டது என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் நுவரெலியா மாவட்ட இணைப்பதிகாரி எரந்தன ஹேமவர்த்தன தெரிவித்தார். (ச)

## கொள்ளையிட்ட 4 பேர் கைது

மாவனல்லை ,ஜன.27

மாவனல்லை பிரதேசத்தைச் சேர்ந்த மாணிக்கக்கல் வியாபாரி ஒருவரிடமிருந்து இரண்டு கோடி ரூபா பெறுமதியான 14 மாணிக்கக்கற்களை கொள்ளையிட்டதாகத் தெரிவிக்கப்படும் 8 பேரில் 4 பேர் பொலிஸாரால் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஹெம்மாத்தகம பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் உள்ளடங்குவதாகத் தெரிவித்த பொலிஸார், இப்பொலிஸ் அதிகாரியின் வீட்டு முற்றத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த சில மாணிக்கக்கற்களை கண்டெடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

தம்மை இரகசியப் பொலிஸார் என்று அடையாளம் காட்டி இந்தச் சந்தேகநபர்கள் மாணிக்கக் கற்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக மாவனெல்லை பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# கிழக்கின் அபிவிருத்திகள் நோர்வே பணி தொடரும்

காத்தான்குடி, ஜன. 27

போரால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்த நோர்வே தொடர்ந்தும் இலங்கைக்கான உதவிகளை வழங்கும் என்று இலங்கைக்கான நோர்வே தூதர் ஹில்ட் ஹரல்ஸ்ட்டட் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, தாழங்குடா சரீரம் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் 22ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

**இதுவரை காலமும் இலங்கை அரசுடனும் மற் றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களினூடாகவும் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் வாழ்வாதார மேம்பாட்டு வேலைகளையும் நோர்வே மேற்கொண்டு வந்தது.**

இதுவரை காலமும் இலங்கை அரசுடனும் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களினூடாகவும் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் வாழ்வாதார மேம்பாட்டு வேலைகளையும் நோர்வே மேற்கொண்டு வந்தது.

இதேபோன்று தொடர்ந்து இந்தப்பகுதிகளில் மக்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள நோர்வே தயாராக இருக்கின்றது.

கிழக்கில் ஏற்பட்ட போர் மற்றும் ஆழிப் பேரலை அனர்த்தம் ஆகியவற்றின் போது நோர்வே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு சரீரம் நிறுவனத்தினூடாக உதவிகளை வழங்கியது. அத்துடன், வாழ்வாதார உதவிகளும் இந்த நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்பட்டன.

எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராம அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுக்கவுள்ளோம். கடந்த வெள்ள அனர்த்தத்தின் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கினோம்.

ஆயிரக்கணக்கான குடும்பங்களை சரீரம் நிறுவனம் இணைத்து அவர்களின் சுயதொழிலை மேம்படுத்தி அவர்களுக்காக உதவிசெய்து வருகின்றது. பல பெண்களை இந்தத் திட்டத்தில் சரீரம் நிறுவனம் இணைத்திருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

80 சதவீத பெண்கள் சரீரம் நிறுவனத்தில்இணைந்து பயனாளிகளாக உள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் மகிழ்சியடை கின்றேன்.

நோர்வே அரசு இலங்கை அரசுடன் ஒன்றிணைந்து பலதரப்பட்ட வேலைகளையும் மேற்கொண்டு வந்துள்ளது- என்றார். (ச)

## பல்கலை மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

பேராதனை பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் கடந்த செவ்வாய்க் கிழமை எதிர்ப்பு ஊர்வலமொன்றில் ஈடுபட்டனர்.

உயர்கல்வி அமைச்சு பல்கலைக்கழகங்களையும் மாணவர்களையும் அடக்கி ஒடுக்க முயற்சிக்கின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் பாதுகாப்புக் கம்பம் சரிந்து வீழ்ந்ததால் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் காயமடைந்த நிலையில் பேராதனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பேராதனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி - கொழும்பு பிரதான வீதிக்குள் மாணவர்கள் பிரவேசிப்பதை தடுப்பதற்காக வைக்கப்பட்டிருந்த பாதுகாப்புக் கம்பத்தை மாணவர்கள் அகற்ற முயற்சித்த போதே கம்பம் வீழ்ந்து மாணவர் காயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



தென்கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விரிவுரையாளர் விடுதி கடந்த செவ்வாய்க்கிழமை அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவால் திறந்து வைக்கப்படுகின்றது.

## சமுர்த்தி உத்தியோகத்தருக்கு மார்ச் முதல் அரச ஓய்வூதியம்

மட்டக்களப்பு,ஜன.27

எதிர்வரும் மார்ச் மாதம் தொடக்கம் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அரச ஓய்வூதியம் பெறும் நிரந்தர உத்தியோகத்தர்களாக மாற்றப்படவுள்ளனர் என்று பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

மட்டக்களப்பு - வாழைச்சேனையில் மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களைச் சந்தித்து உரையாடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எதிர்வரும் மார்ச் மாதத்துடன் அரச திணைக்களத்தின் கீழ் உள்வாங்கப்படவுள்ளனர். அதன்மூலம் இந்த நாட்டிலுள்ள அனைத்து சமுர்த்தி உத்தியோகத்தர்களும் நிரந்தர அரச உத்தியோகத்தர்களாக மாற்றப்படவுள்ளனர்.

**சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர ஓய்வூதியம் வழங்கப்படும் என்று பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார்.**

இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவையிலும், நாடாளுமன்றத்திலும் பெறவுள்ளோம். நிரந்தர ஓய்வூதியம் பெறும் அரச உத்தியோகத்தர்களாக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மாற்றப்பட்டு அவர்களுக்கு அரச உத்தியோகத்தர்கள் பெறும் அத்தனை சலுகைகளும் வழங்கப்படும் - என்றார்.(ச)

## தோ.தொழிலாளர்களுக்கு வேலைப்பளு; கட்டுப்படுத்த ஒன்றிணைவோம்

நுவரெலியா, ஜன.27

கம்பனிகள் தொழிலாளர் மீது வேலைப்பளுவை அதிகரிக்கவும், சம்பளத்தைக் குறைக்கவும் எத்தனிக்கின்றன. இவற்றிற்கு முடிவு கட்டுவதற்கு மக்கள் சக்தியைக் கட்டியெழுப்ப வேண்டும். ஐக்கிய தேசிய கட்சியின்ஆட்சியை உருவாக்குவதன் மூலமே இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் என்று இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க நிர்வாக அதிகாரி ஆர்.திவ்விய ராஜன் தெரிவித்தார்.

**அரசின் சலுகைகளுக்காக விலைபேசி விற்கும் துரோகத்தனத்தின் மறுபெயரே இவர்களது 'மக்கள் சேவை' என்று தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க நிர்வாக அதிகாரி குற்றஞ்சாட்டியுள்ளார்.**

எஸ்கடேல் தோட்டத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு பெரும் நிதிநெருக்கடியில் தடுமாறி வருகிறது. அதனால்தான் உணவுப் பொருள் களின் விலையை அதிகரித்து மக்கள்மீது சுமையை ஏற்றுகிறது. அதே போல், தேயிலையை ஏற்றுமதி செய்வதற்கு ஒழுங்காக விலையைப் பேரம் பேசி விற்கவும் தெரியாது .

தோட்டத் தொழிலாளர்களுக்கு அநீதி இழைப்பதற்கு அனுமதிக்கக்கூடாது. தொழிலாளர்கள் துன்பப்படும்போது கம்பனிகளின் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொண்டு தொழிலாளர்களுக்கு எதிராகச் செயற்படும் தொழிற்சங்கங்களின் அதிகாரத்தை அடக்குவதற்கு அணிதிரளவேண்டும்.

அரசின் சலுகைகளுக்காக - சமூகத்தையே விலைபேசி விற்கும் துரோகத்தனத்துக்கு மறுபெயரே இவர்களது 'மக்கள் சேவை'. கொப்பி, பென்சில், புத்தகங்கள், கிரிக்கெட் மட்டைகள் போன்றவற்றைக் கொடுப்பதால் சமூகப் பிரச்சினை தீராது. 'வீதி' போடுவதற்கு ஓடித்திரியும் இவர்களால் மலையகத்தில் வீடுகளை அமைக்க முடியுமா? லயன்களில் வாழும் சமூகத்தைப் பற்றிச் சிந்திக்காத இவர்களுக்கு பாடம்புகட்டும் சக்தியாக மலையகம் மாற்றம் பெறவேண்டும்.

வாழ்க்கைச் செலவின் தாக்கத்தாலும், அநாவசிய விரயங்களாலும் மக்களின் துயரமே பெருகிவருகிறது. எனவே, பெருந் தோட்டத்துறை மக்கள் மீது பழி சுமத்தி இம்சிப்பதற்கு முயற்சிக்கும் கம்பனிகளுக்கு எதிராக ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ச)

## லஞ்சம் பெற்ற அதிகாரி கைது

வர்த்தகர்களிடம் லஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் வன திணைக்கள அதிகாரியொருவர் லஞ்ச தடுப்புப் பிரிவினரால் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டு ஏறாவூர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இலுப்படிச்சேனையில் திறந்து வைக்கப்பட்ட வட்டார வன திணைக்கள அலுவலகத் திறப்பு விழாவுக்கு என்று மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வர்த்தகர்களிடம் லஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுவாஞ்சிக்குடி தொடக்கம் வாழைச்சேனை வரையிலுள்ள மர ஆலை உரிமையாளர்கள், பலகை விற்பனையாளர்கள், மரம் வெட்டி விற்பனை செய்பவர்கள் மற்றும் விறகு விற்பவர்கள் என்று பலரிடமிருந்து இவர் பணம் பெற்றுள்ளார்.

இந்த நிகழ்வு ஏற்பாட்டுக்கு பணம் வழங்கவில்லையென்றால் வியாபார உரிமங்கள் மற்றும் அனுமதிப் பத்திரங்கள் ரத்து செய்யப்படும் என்று வர்த்தகர்களை இவர் மிரட்டியுள்ளார்.

இந்த விடயம் சம்பந்தமாக ஏறாவூர் பிரதேச வர்த்தகர் ஒருவர் கொழும்பு லஞ்ச தடுப்புப் பிரிவுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இந்த வர்த்தகரிடம் வன திணைக்கள அதிகாரி இலஞ்சம் பெறும் போதே லஞ்ச தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி சாரா ஊழியர்கள் பல்கலையில் போராட்டம்

சம்பள முரண்பாட்டைத் தீர்க்க வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.27

அனைத்துப் பல்கலைக் கழகக் கல்வி சாரா ஊழியர்கள் நேற்று நடத்திய அடையாள ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக் கழகக் கல்விசாரா ஊழியர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். சம்பள முரண்பாட்டைத் தீர்க்கக் கோரியே போராட்டம் நடத்தப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள சம்பள முரண்பாட்டை சுற்றறிக்கைக்கு அமைய உடனடியாக நீக்க வேண்டும் எனவும், கல்விசாரா ஊழியர் களின் அடிப்படைச் சம்பளத்தின் 25 வீதத்தை ஒரு கொடுப்பனவாக உடனடியாக வழங்க வேண்டும் எனவும் தொழிற்சங்கக் கூட்டுக்குழு கோரியுள்ளது. எனினும் சம்பள முரண்பாட்டை நீக்கப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தவறி விட்டது. உயர் கல்வி அமைச்சர் மானியங்கள் ஆணைக்குழு அதிகாரிகள் ஆகியோருடன் நடத்திய பேச்சுகளும் பயனளிக்காததாலேயே போராட்டத்தில் குதித்துள்ளோம்'' என்றனர் ஊழியர்கள்.

**சம்பள முரண்பாட்டைத் தீர்க்குமாறு ஊழியர்கள் விடுத்திருந்த கோரிக்கையைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அமைச்சரும் கண்டு கொள்ளாததாலேயே இந்தப் போராட்டம்**

போராட்டம் தொடர்பாக பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராஜா தெரிவித்ததாவது:

அனைத்து வகையான கல்வி சாரா ஊழியர்களும் இன்று ஒருநாள் அடையா வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

எமக்கு அடிப்படை சம்பளத்திலிருந்து 25 வீதம் அதிகரிப்பை வழங்கக் கோரியுள்ளோம். இதற்குப் பின்னரும் உரிய பதில் கிடைக்காத பட்சத்தில் எதிர்வரும் முதலாம் திகதியிருந்து தொடர்ச்சியாகத் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட வேண்டி வரும்.

எமது இந்தப் போராட்டத்துக்கு யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கமும், மாணவர்களும் போதிய ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர்.

பல்கலைக்கழக ஆணைக் குழு அலுவலகம் முன்பாக அனைத்துப் பல்கலைக்கழக தொழிற் சங்கம் பேரணியும் ஆர்ப்பாட்டமும் நடத்துகிறது. - என்றார். (உ-311-ரி)

## புனரமைப்பு பணி நிறைவு



யாழ்ப்பாணம்,ஜன.27

வேலணைப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் புனரமைப்புச் செய்யப்பட்ட அல்லைப்பிட்டி கிராமசபைக் கட்டடத்தின் பணிகள் நிறைவடைந்துள்ளன.

பொதுமக்களின் தேவைகருதி வெகுவிரைவில் இந்தக் கட்டடத்தின் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகப் பிரதேச சபை வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன. (ந-313)

## கடவுளுக்கும் இடமில்லை

யாழ்ப்பாணம்,ஜன.27

வீதி அகலிப்பின் பெயரில் சிறுப்பிட்டி மேற்குக் கிராமத்தின் அடையாளச் சின்னமாக விளங்கும் வைரவர் உண்டியல் அகற்றப்படும் நிலை உருவாகியுள்ளதால் பிரதேச மக்கள் கவலையடைந்துள்ளனர்.

வீதி அகலிப்புப் பணிகளால் கிராமத்தின் வரலாற்றுச் சின்னங்கள் அழிக்கப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



எனவே கிராமத்தின் அடையாளச் சின்னமான ஞான வைரவர் ஆலயத்தை அதே இடத்தில் மீண்டும் நிறுவப்படுவதற்கு சிறுப்பிட்டி மேற்கு வைரவர் ஆலய நிர்வாகிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-313)


## நினைவு அஞ்சலி

14ஆம் ஆண்டு | 11ஆம் ஆண்டு





அமரர்
சின்னப்பு வல்லிபுரம்
1912.05.02
1998.02.03

தோற்றம்
மறைவு

அமரர்
வல்லிபுரம் மாணிக்கலிங்கம்
1946.06.09
2001.01.28

திதி 27.01.2012

மண்ணிலே எம்மை நல்ல வண்ணம் வாழ வைத்து
விண்ணுலகம் ஏகிய எம் அன்புத் தந்தையரே
உங்கள் அன்பும் ஆசியும் என்றும் எம்மை வழிநடத்த
ஆண்டவரை வேண்டுகின்றோம்.

566/3, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(13488) (6,10)
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்/சென்மேரிஸ் வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும்
திருமதி மே.ஞா.ஜோ. புவிராஜசிங்கம் அவர்களின் அன்புச்சகோதரன்
**லோறன்ஸ் ஞானசேகரம்**
அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யாழ்/சென்மேரிஸ் வித்தியாலயம்
(OLR) (13518) (7-9)

## 34ஆம் ஆண்டு நினைவு



அமரர்
பொ. மணி
(கரையூர் மணி)

தோற்றம்
1951-06-28

மறைவு
27-01-1978

மனிதரில் மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய் புனித வாழ்வு வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே

காத்திருந்து அரவணைத்த கைகள், கர்லமெல்லாம் எம்மை விட்டுப் பிரிந்த தேனோ? மலர்ந்த வதனச் சிரிப்பை வாழ் நாளில் காணக்கிடைக்குமா?

மாலா (பெறா மகள்),
வவா (சகோதரன்).
(13582) (6,7,10)

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. களஞ்சியப்படுத்தல் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் உகந்தது. வாகனத் தரிப்பிட வசதியும் உண்டு.

தொடர்பு : R.சத்தியசீலன், 3ஆம் கட்டை, கட்டைப்பிராய், கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
T.P - 077 7179927

Personal-Group Classes (Vavuniya - Jaffna)
**Auto CAD**
2D-Drawing & 3D-Modeling
Contact No:0719978819

## தவறவிடப்பட்டுள்ளது

அகஸ்தின் அந்தோனிப்பிள்ளை என்பவருடைய அடையாள அட்டை (இல. 423120940V) மற்றும் 2012ஆம் ஆண்டுக்கான வாகன வரி, காப்புறுதி அனுமதிப்பத்திரம் சுன்னாகத்திற்கும் கந்தரோடைக்கும் இடையில் 26/01/2012 அன்று தவறவிடப்பட்டுள்ளது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கீழ்க் குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

021 2226047 , 077 9351414

இன்றல்ல நேற்றல்ல 33 வருடங்களாக வெளிவாரிப் பட்டப்படிப்புகளுக்கென தனித்துவமாக இயங்கும் நிறுவனம்

யாழ் நகரில்
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
57/18, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(இலங்கை வங்கி முன்பாக)

**(G.A.Q, B.A)**
(யாழ். பேராதனை)

க.பொ.த (உ.த) 3 பாடங்களில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான விரிவுரைகள்

ஆரம்பம்: 28.01.2012 காலை: 8 மணி
பதிவுகள் எம்மால் மேற்கொள்ளப்படும்
தொ.பே:072 660 7756
(13565)



யாழ்ப்பாணக் கல்லூரி நல்லாசானுக்கு வயதறுபதாம்!
வாழி!! வெல்க!!!
உயர்திரு.கந்தையா சதாசிவம்

'முப்பதாண்டு ஆசிரிய' முதிர்சேவை செய்தவனாம் நட்புக்கினிய 'சதாசிவ' நாயகனே நீ வாழ்க! கற்பதுவும், பிறருக்கதைக் கற்பிப்பதுவும், பெரும்பேறாம்! நற்பிறவிப் பயனதனை நடைமுறைப் படுத்தல் மிக அரிதாம்! எனினும் அதை எதிர்கொண்டு எழுச்சிப்பணி செய்தவன் நீ! பேருக்கு ஆசிரியர் மிகப் பலராம் ஆசிரியப் பொருளுணர்ந்த பேர்பெற்ற ஆசிரியர் மிகச் சில்ராம்! அதிலொருவனாம் எங்கள் அன்புச் சதாசிவமே வாழ்க பல்லாண்டு

உங்கள் அன்புக்கினிய
யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரிய நண்பர்கள்.
(13563) (6,7,10)

## மரண அறிவித்தல்

### துரையப்பா இரத்தினம்



தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா இரத்தினம் 24.01.2012 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா-கனகம்மா தம்பதியரின் சிரேஷ்ட மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா-ஆச்சியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ் சென்ற இரத்தின பூபதியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் அன்னலட்சுமி, தணிகாசலம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற க.இரத்தினத்தின் மைத்துனரும், கமலாதேவி (கனடா), சறோஜினிதேவி, காலஞ்சென்ற நேசகுமார்(இத்தாலி) மற்றும் பாலகுமார் (கனடா), கலாதேவி, தேவகுமார்(சுவிஸ்), சாந்தினி (அவுஸ்திரேலியா), மாலினி(ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் இராசரத்தினம், அருந்தவமலர், புஸ்பமாலா, ஐங்கரவேள், சஜித்தா, சுந்தரேஸ்வரன், ரவீந்திரகுமார் ஆகியோரின் மாமனும் உஷாராணி, சிவகுமார், சுதாகரன், காமினி, சுஜிகரன், சதீஸ், சர்மிளா, லக்ஷாயினி, சஜீந்திரன், ஜனனி, துவாரகன், துஸ்யந்தி, துஷியன், வாசவன், திவ்யன், நிருபனா, விதுஷனா, ஜீவிகா, பிருந் தாபன், ஹரிஸ்னி, சகிலன், சாருஜன் ஆகியோரின் பேரனும், ஹரிசன், அபிராம், துர்க்கா, ஸ்ரீசாயி, அஸ்வின், இஷானா, சமீனா, சுடிக்ஷா, கர்சினி, அபிஜன், அபிராமி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.01.2012 ஞாயிற்றுக் கிழமை பி.ப 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகன கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வன்னியசிங்கம்,
வீதி, தாவடி,
(13567) (6,10)
தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பப்புவா நியூகினியாவில் 2 கிராமங்களில் நிலச்சரிவு

## புதையுண்டு 40 பேர் சாவு

சிட்னி,ஜன.27

ஆஸ்திரேலியாவிலுள்ள பப்புவா நியூகினியா நாட்டில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நிலச்சரிவில் 40 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தநாட்டின் மலைப் பகுதியில் உள்ள மெண்டி நகரத்தின் அருகேயுள்ள 2 கிராமங்களில் நேற்றுமுன் தினம் ஏற்பட்ட நிலச்சரிவின்போது உறங்கிக்கொண்டிருந்தவர்கள் மண்ணுக்குள் புதைந்துள்ளனர். அத்துடன் ஏராளமான வீடுகளும் மற்றும் வீதிகள் பெரும் சேதத்துக்கு உள் ளாகின.

தகவல் அறிந்த பொலிஸ் அதிகாரிகளும், இராணுவமும் விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.



இந்த நிலச் சரிவில் சிக்குண்டோரில் இதுவரை 40 பேர் உயிரிழந்துள்ளனர், பலர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். அவர்கள் ஹெலிக்கொப்டர் மூலம் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

துரிதமாக நடைபெற்று வரும் மீட்புப் பணிகளில் ஆஸ்திரேலிய அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. (ந)

# புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் கொடூரம்

உறவினர் வீட்டு விருந்து நிகழ்ச்சியில் இளைஞர் ஒருவர் தற்கொலைத் தாக்குதல் நடத்தியதில் அவர் மற்றும் ஒரு குழந்தை உட்பட 5 பேர் உடல் சிதறி உயிரிழந்துள்ளனர்.

சொத்துப் பிரச்சினைக்குப் பழிவாங்க அவர் இவ்வாறு கொடூரத் தாக்குதல் நடத்தியது விசாரணையில் தெரியவந்துள்ளது.

சீனாவின் லியான் யுவான் நகருக்கு அண்மையில் உள்ள கிராமம் டைலு என்பவர் சீனப் புத்தாண்டை முன்னிட்டு கடந்த 22ஆம் திகதி தன் வீட்டில் விருந்து நிகழ்வுக்கு ஏற்பாடு செய்திருந்தார்.உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் உட்பட ஏராளமானோர் வந்திருந்தனர். அப்போது, ஆவேசத்துடன் அங்கு வந்த ஓர் இளைஞர் பொருள்களை அடித்து நொறுக்கியதுடன் தன் உடலில் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தார். இத்தாக்குதலில் விருந்து நிகழ்ச்சியை நடத்தியவர், அவரது அப்பா, அம்மா, ஒரு குழந்தை ஆகியோர் பரிதாபமாகப் பலியாகினர்.

6 பேர் படுகாயம் அடைந்தனர்.படு காயமடைந்தவர்களின் நிலை ஆபத்தான கட்டத்தில் உள்ளதால் இறந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகின்றது

(ந)





மியன்மார் சென்றிருந்த பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரி (இடது), யோங்கோன் நகரில் அந்நாட்டு எதிர்க் கட்சித்தலைவர் ஆங்சான் சூகியைச் சந்தித்துப் பேசினார்.

# கழிவறையில் வசிக்கும் சீனப் பெண்

சீனாவைச் சேர்ந்த பெண் ஒருவர் இரண்டரை ஆண்டுக்கும் மேலாகக் கழிவறையை விட்டு வெளியே வர மறுத்து அங்கேயே தங்கி வருகிறார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி குளியல் அறைக்குள் சென்ற அவர் உண்பது, உறங்குவது எல்லாமே கழிவறையில் தான். இதேவேளை அந்தப் பெண் தன்னை ஒருவித சக்தி அங்கேயே உட்கார வைத்திருக்கிறது. ஆனால் அது என்ன என்பதை என்னால் வெளிப்படுத்த முடியவில்லை என்று கூறுகிறார்.

இந்த வினோத சம்பவம் குறித்து அவரது கணவர் கூறுகையில்,கழிவறையில் ஆடையின்றி அமர்ந்து இருக்கிறார். இதுவரையில் 18 முறை குளித்து இருப்பார்- என்றார். (ந)

# வளைந்த முதுகெலும்பு நிமிர்ந்து நேரானது

இளம் பெண்ணின் வளைந்த முதுகெலும்பு 10 மணி நேர அறுவைச் சிகிச்சைக்கு பின்பு சரிசெய்யப்பட்டுள்ளது.

பிரிட்டனைச் சேர்ந்த 16 வயது பெண்ணான லாராவின் ஒரு பக்க தோள் சற்று சரிவாக இருந்தது. இதனால் அவருக்கு உடல் நலக் குறைவோ, வலியோ ஏற்படவில்லை. எனினும் மருத்துவமனையில் எக்ஸ்ரே எடுத்துப் பார்த்த போது அவரது முதுகெலும்பு மிகவும் வளைந்து இருப்பது தெரியவந்தது.

இதனை அடுத்து லாராவுக்கு அறுவை சிகிச்சை செய்து முதுகெலும்பின் இருபுறமும் உலோக கம்பகளை பொருத்தி அதை நிமிர்த்தி வைத்தனர். சுமார் 10 மணி நேரத்தில் இந்த அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்று அவர் குணம் அடைந்தார்.

இந்தச் சிகிச்சைகுப் பின்



லாராவின் உயரம் 4 அங்குலம் அதிகரித்துள்ளது. இது குறித்து மருத்துவர்கள் தெரிவித்தாவது:-

1,000 குழந்தைகளில் 4 பேருக்கு இது போன்ற குறைபாடு இருக்கலாம். இவ்வாறான குறைபாடு குழந்தை வளர்ச்சி அடையும் போது அதுதானாகவே சரியாகி விடும். ஒரு சிலருக்குத்தான் இவ்வாறான அறுவை சிகிச்சை தேவைப்படும் என்று கூறினார்கள்.

# துப்பாக்கிச் சூட்டில் 23 பேர் உயிரிழப்பு

**பாகிஸ்தானில் பாதுகாப்புப் படையினர் தேடுதலில் ஈடுபட்டிருந்த போது, அங்கு மறைந்திருந்த 50இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் தாக்கினர்.**

பாகிஸ்தானில் பாதுகாப்புப் படையினருக்கும், தலிபான் தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சூட்டில் 23 பேர் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தானின் வட மேற்குப் பகுதியில் பழங்குடியினர் அதிகம் வசிக்கும் குர்ரம் பகுதியில் பாதுகாப்புப் படையினருக்கும், தலிபான் தீவிரவாதிகளுக்கும் இடையே கடும் மோதல் நடைபெற்றது. இதில் 6 பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டனர், தீவிரவாதிகள் தரப்பில் 17 பேர் பலியாகினர்.

குர்ரம் பகுதியில் பாதுகாப்புப் படையினர் தேடுதலில் ஈடுபட்டிருந்தபோது, அங்கு மறைந்திருந்த 50 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதையடுத்து இரு தரப்பினருக்கும் இடையே கடும் மோதல் நடை பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பஹ்ரைனில் வீதிமறியல் போராட்டம்

டுபாய்,ஜன.27

வளைகுடா நாடான பஹ்ரைனில், அரசுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடந்த வீதி மறியல் போராட்டத்தில் பலர் கைது செய்யப்பட்டனர்.

பஹ்ரைனில், ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ளனர். ஆனால் அந்தநாட்டில், தாங்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தப்படுவதாக ஷியாக்கள் கருதினர். இந்நிலையில், எகிப்தில் ஏற்பட்ட புரட்சியைத் தொடர்ந்து, பஹ்ரைனிலும், மக்கள் மன்னருக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். எனினும், சில மாதங்களிலேயே ராணுவம், சவூதி அரேபியாவின் படைகள் ஆகியவற்றின் துணையால் ஆர்ப்பாட்டம் நசுக்கப்பட்டது.

இதற்கிடையில், இரு நாள்களுக்கு முன்பாக, சிட்ரா, பானி ஜம்ரா கிராமங்களில் பொலிஸ் குவிக்கப்பட்டுள்ள காட்சிகளை, ''பேஸ்புக், டுவிட்டர்'' உள்ளிட்ட சமூக வலைத் தளங்களில் வெளியிட்ட, அல் வெபாக் கட்சி, மக்கள் வீடுகளை விட்டு வெளியே வந்து ராணுவத்தை எதிர்கொள்ளும்படி அழைப்பு விடுத்திருந்தது. இதையடுத்து நேற்று முன்தினம், பல கிராமங்களில் இருந்து மக்கள் திரண்டு வீதி மறியல்களில் ஈடுபட்டனர். எனினும், பொலிஸார் அவர்களைக் கலைத்து விட்டனர். இருதரப்புக்கும் இடையில் மூண்ட மோதலில், பலர்காயம் அடைந்தனர். பலர்கைதுசெய்யப்பட்டனர்.

# பாக். பிரதமர்– இராணுவத் தளபதி அவசர சந்திப்பு



பாகிஸ்தான் அரசியலில் ஏற்பட்டுள்ள உறுதியற்ற நிலையையும் பதற்றத்தையும் தணிக்கும் நோக்கில் பாகிஸ்தான் இராணுவத்தின் தலைமைத் தளபதி ஜெனரல் அஷ்பாப் பர்வேஷ் கயானி பிரதமர் யூசுப் ரசா கிலானியைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

பாகிஸ்தானில் பதுங்கியிருந்த பின்லேடனை அமெரிக்க ராணுவம் சுட்டுக் கொன்றதைத் தொடர்ந்து அங்கு பிரதமர் கிலானி தலைமையிலான அரசுக்கும், ராணுவத்துக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதனால் ராணுவப் புரட்சி ஏற்படும் அபாயம் உருவானது. எந்த நேரத்திலும் புரட்சி மூலம் கிலானி அரசை கவிழ்த்துவிட்டு ராணுவ ஆட்சி ஏற்படலாம் என்ற அபாயம் நிலவியது.


இதன் காரணமாகப் பாகிஸ்தான் அரசியலில் நிலையற்ற தன்மையும், பதற்றமான நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையில் பாகிஸ்தான் ராணுவத்தின் தலைமைத் தளபதி பர்வேஷ் கயானி, பிரதமர் யூசுப்ரசா கிலானியை சந்தித்துள்ளார்.

இவர்களது சந்திப்பு இஸ்லாமாபாத்தில் உள்ள பிரதமர் இல்லத்தில் நடந்தது. இந்தச்சந்திப்பின்போது பாகிஸ்தானின் உளவுநிறுவனமான ஐ.எஸ்.ஐயின் தலைவர் லெப்டினென்ட் ஜெனரல் அகமது சுஜா பாஷா மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹீனா ரப்பானி ஹரி ஆகியோரும் உடன் இருந்தனர்.

இந்தச் சந்திப்பின் போது நாட்டின் பாதுகாப்பு குறித்து விவாதித்ததாக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இவை தவிர ராணுவத்துக்கும், அரசுக்கும் இடையே ஏற்பட்டுள்ள டெமோகேட் விவகாரம் மற்றும் பக்கத்து நாடான ஆப்கானிஸ்தானில் நிலவும் பதற்றம் மற்றும் புனரமைப்பு நடவடிக்கையில் உதவி, அங்கு நிலையான தன்மை மற்றும் பாதுகாப்பை பலப்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டன. (ந)

# நீர்யானையின் பாதம் விமானம் மூலம் கடத்தல்



ஆபிரிக்க நாடான ஸாம்பியாவில் இருந்து விமானத்தில் நீர்யானையின் பாதம் மற்றும் யானைத் தந்தத்தில் செய்யப்பட்ட 10 ஆபரணங்கள் சோதனை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஆபிரிக்க நாடான ஸாம்பியாவில் இருந்து விமானத்தில் ஆம்ஸ்டர்டாம் பெண்ணுக்குச் சொந்தமான பெட்டிகளை சோதனையிட்ட போது அதில் நீர் யானையின் பாதம் மற்றும் யானை தந்தத்தில் செய்யப்பட்ட 10 ஆபரணங்கள் இருப்பதைக் கண்டுபிடித்த அதிகாரிகள் அவற்றைப் பறிமுதல் செய்தனர்.

இதுதொடர்பாக கைது செய்யப்பட்ட பெண் கூறியதாவது:-

''இவை ஸாம்பியாவில் வசிக்கும் உறவினர்கள் கொடுத்தவை என்றும், இவற்றை எடுத்து வர அனுமதி தேவைப்படும் என்பது தனக்குத் தெரியாது'' என்று பதில் அளித்துள்ளார்.

**ஆபிரிக்க நாடுகளான ஸிம்பாப்வே, ஜாம்பியா போன்ற நாடுகளில் இருந்து அரிய வகை விலங்குகள் பிரிட்டனுக்குக் கடத்தி வரப்படுகின்றன.**

ஆபிரிக்க நாடுகளான ஸிம்பாப்வே, ஸாம்பியா போன்ற நாடுகளில் இருந்து அரியவகை விலங்குகள் பிரிட்டனுக்குக் கடத்தி வரப்படுகின்றன. இதனால் இந்த நாடுகளில் இருந்து விமானத்தில் வரும் பயணிகளிடம் பிரிட்டன் அதிகாரிகள் தீவிரமாகச் சோதனை நடத்துகிறார்கள். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கில் 34 பேர் ஒரே நாளில் தூக்கில்

## பெண்களையும் விட்டு வைக்கவில்லை

**பத்திரிகையாளர்கள் தாக்கப்படுவது, கருத்துச் சுதந்திரத்தை பறிப்பது, சந்தேக குற்றவாளிகளை ரகசிய சிறையில் அடைத்து சித்திரவதை செய்வது ஆகியவற்றில் ஈராக் படையினர் ஈடுபடுவதாக சமீபத்தில்குற்றச் சாட்டு எழுந்துள்ளது.**

ஈராக்கில் ஒரே நாளில் பெண்கள் உட்பட 34 பேருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது உலகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு ஐ.நா. சபை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஈராக்கில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற குற்றங்கள் மட்டுமின்றிபொருள்களுக்கு சேதம் விளைவிக்கும் குற்றங்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்படுகிறது. அவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்ட 2 பெண்கள் உட்பட 34 பேருக்கு கடந்த 19ஆம் திகதி - ஒரே நாளில் - தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இதுதொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் நவநீதம் பிள்ளை கூறியதாவது: சட்டப்படி வெளிப்படையாக விசாரணை நடந்திருந்தால் கூட ஒரே நாளில் 34 பேரைத் தூக்கில் போட்டிருக்க முடியாது. ஈராக்கில் இவ்வாறு இடம்பெற்றிருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. சாதாரண குற்றங்களுக்கு கூட மரண தண்டனை வழங்கப்படுவது சதாம் ஆட்சிக் காலத்தில் நடந்தது இப்போதும் தொடர்வது அதிர்ச்சியளிக்கின்றது.

அமைதியான முறையில் போராட்டம் நடத்துபவர்களும், பத்திரிகையாளர்களும் தாக்கப்படுவது, கருத்து சுதந்திரத்தை பறிப்பது, சந்தேக குற்றவாளிகளை இரகசிய சிறையில் அடைத்து சித்திரவதை செய்வது என்று ஈராக் படையினர் மீது குற்றச்சாட்டுக்கள் வருகின்றன.

ஈராக் அரசு சர்வாதிகாரப் போக்கில் நடந்துகொள்ளக் கூடாது என்று ஐ.நா. மனித உரிமை ஆணையம் எச்சரிக்கை விடுத்த 2 நாளில், 34 பேர் தூக்கில் இடப்பட்டிருக்கின்றனர். இது கண்டிக்கத்தக்கது - என்றார்.

ஈராக்கில் கடந்த 8 ஆண்டுகளில் மட்டும் 1,200 பேருக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. கடந்த ஒன்றரை மாதத்தில் 64 பேருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

விசாரணை நியாயமான முறையில் நடத்தப்படுவதில்லை, சிறு குற்றங்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்படுகிறது. என்று ஈராக் மீது பொதுவான குற்றச்சாட்டுகள் தொடர்ச்சியாக வருகின்றன. (ந)

## ஒரே பிரசவத்தில் 6 குழந்தைகள்



ஆப்கானிஸ்தானிலுள்ள வைத்தியசாலை ஒன்றில் தாயொருவர், ஆறு குழந்தைகளை ஒரே தடவையில் பிரசவித்துள்ளார்.

வைத்தியாலையில் அனுமதிக்கப்பட்ட அதேநாளில் மூன்று பெண் குழந்தைகளையும், மூன்று ஆண் குழந்தைகளையும் குறித்த பெண் பிரசவித்தார் என்று வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

குழந்தைகள் பிறப்பதற்கு முன்னர் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகளைச் சுமப்பது தொடர்பாக அந்தப் பெண்ணுக்குத் தெளிவுபடுத்தப்படவில்லை. அத்துடன், முறையான சிகிச்சைகளையும் அவர் பெற்றிருக்கவில்லை எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சீரான சிகிச்சைகளைப் பெறாமலே ஆறு குழந்தைகளை பிரசவித்துள்ளமை மிகவும் அரிதாகவே நிகழ்வதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை உலகில் அதிகூடிய தாய் மற்றும் குழந்தை இறப்பு வீதம் காணப்படும் நாடுகளில் ஒன்றாக ஆப்கானிஸ்தான் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

# சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை அதிகரிப்பு

பெர்சியன் வளைகுடா வழியாக அமெரிக்கக் கப்பல்கள் செல்வதற்கு ஈரான் தடை விதித்துள்ளதை அடுத்து சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை உயர்ந்துள்ளது.

ஈரானின் அணு ஆயுதக் கொள்கைக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இதனையடுத்து ஈரானில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்யத் தடைவிதித்துள்ளது அமெரிக்கா.

இதனால் ஆத்திரம் அடைந்த ஈரான் தனது நாட்டில் உள்ள பெர்சியன் வளைகுடா வழியாக எண்ணெய் கப்பல்கள் செல்லத் தடை விதித்தது. அதையும் மீறிச் சென்ற அமெரிக்க கப்பல்களை நோக்கி ஈரான் விசைப் படகு மோதுவது போல் சென்று பதட்டத்தை ஏற்படுத்தியது.

இதனால் எண்ணெய் கப்பல்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (ந)

# கப்பல் ஏன் கவிழ்ந்தது? புதிய தகவல்

இத்தாலி தலைநகர் ரோம் அருகில், கடலில் பாறை மீது மோதி கவிழ்ந்த கோஸ்டா கான்கார்டியா கப்பல், கிக்லியோ தீவுக்கு அருகில் சென்றதன் காரணம் குறித்து, தற்போது புதிய தகவல் வெளியாகியுள்ளது.

கப்பல் கப்டன் ஷெட்டினோ கைது செய்யப்பட்ட உடனேயே அவரது கைத்தொலைபேசிவாயிலாக பேசப்பட்ட உரையாடல்கள் இரகசியமாகப் பொலிஸாரால் ஒட்டுக் கேட்கப்பட்டது. அதிலிருந்து தற்போது புதிய தகவல் வெளியாகியுள்ளது. விபத்து நிகழ்ந்த மறுநாள் கைதான நிலையில், தனது நண்பருடன் கைத்தொலைபேசியில் பேசிய கப்டன் "நிர்வாகம் தான் என்னை தீவுக்கருகில் கப்பலைக் கொண்டு செல்லும்படி பலமுறை வலியுறுத்தியது. அதேநேரம் அந்தப் பகுதியில் பாறை இருப்பதை அவர்கள் கூறவில்லை.. நிர்வாகத்தின் பேச்சைக் கேட்டதற்கு இப்போது நான் தண்டனை அனுபவித்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்'' எனக் குமுறியுள்ளார். மேலும் கப்பலை பெரும் விபத்தில் இருந்து பயணிகளைக் காப்பதில் என்னால் முடிந்த அளவு நான் உதவியிருக்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார். (ந)


10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 25.02.1912

இறைவன் அடியில் 18.01.2002

திருமதி கனகசபாபதி இலட்சுமி அம்மாள்

(வல்லை வீதி, சங்கானை)

வற்றாத அன்புதனை
வசந்தமாய்த் தந்தீர்கள்
துணையென்று எமக்கு
துணையாய் நின்றீர்களே

உங்களை அன்புடன் நினைவுகூரும்
மகன், மகள், பெறாமகன், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

தகவல்: S.K.

(87446) (2-7)



ஈரவிழிகளுடன் முதலாம் ஆண்டு



மலர்வு 11.01.1943

உதிர்வு 07.02.2011

திதி - சதுர்த்தி (27.01.2012)

கனகரத்தினம் குமாரசாமி

(சோதிடர்,
இ.போ.ச. முன்னாள் நடத்துனர்)

குடும்பத்தின் குல விளக்காய்
அன்பின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய் - நற்
பண்புகளுடன் எம்மை வழி நடத்தி
எமக்காகவே வாழ்ந்து... ஓராண்டு
ஓடி மறைந்து விட்டதென்று
நம்பமுடியவில்லை!
எம் மனதில் சோகம் ஆழ் கடல்போல்
இருந்தாலும்
நாளும் பொழுதும் எம் இதயத்தில்
அகல் விளக்காய் பிரகாசித்துக் கொண்டுதான்
இருக்கிறீர்கள் எங்கள் அப்பாவே

உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்

வீதி, சங்கானை.

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடியரசுத் தினம் மணிப்பூரில் குண்டுவெடிப்பு

இந்தியாவின் குடியரசு தினமான நேற்றுக் காலை மணிப்பூர் மாநிலம் இம்பாலில் காலை 9 மணிக்கு குண்டு வெடிப்பு ஒன்று இடம்பெற்றது.

மணிப்பூர் தலைநகர் இம்பாலில் பலத்த பாது காப்புகளுக்கிடையே நடைபெற்ற குடியரசு தின விழாவில் பயங்கரவாதிகள் வெடிகுண்டை வெடிக்கச் செய்தனர். எனினும் இந்த குண்டு வெடிப்பில் உயிர்ச் சேதமோ, மக்களுக்கு காயங்களோ ஏற்படவில்லை.

தலைநகர் இம்பாலில் ஷாமாஷகி பள்ளி அருகே காலை 9 மணியளவில் இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் நிகழ்ந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இம்பாலின் மேற்கு மாவட்டமான காக்வா பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 2 வெடிகுண்டுகள் வெடித்ததாகவும் இதில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (வ)

## சதித் திட்டம் முறியடிப்பு

ஜம்மு காஷ்மீரில் பல்வேறு பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் நடத்திய தீவிர தேடுதல் வேட்டையில் தீவிரவாதிகள் தீட்டியிருந்த சதித்திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் குடியரசு தின விழாவை முன்னிட்டு, ஜம்மு காஷ்மீரில் பல் வேறு பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டனர். அதன் போது, ஒரு குகையில் அதிகமான வெடிகுண்டுகள், ஆயுதங்கள், துப்பாக்கிகள், வோக்கிடோக்கி உள்ளிட்டவைகளைப் பறிமுதல் செய்தனர். இதன் மூலம், குடியரசு தின விழாவை முன் னிட்டு தீவிரவாதிகள் தீட்டியிருந்த சதித் திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரி நீரஷ் தெரிவித்தார். (வ)




புதுடில்லியில் நேற்று நடந்த இந்தியக் குடியரசு தின விழா நிகழ்வில் முதலாவது நிகழ்ச்சியாக அமர் ஜவான் ஜோதி நிகழ்ச்சியில் பிரதமர் மன்மோகன் சிங் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்.

## மிரட்டல் விடுக்கும் கேரள அமைச்சர் மீது நடவடிக்கை



சென்னை,ஜன.27

முல்லைப்பெரியாறு அணை ஆய்வுக்காக அமைக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவை மிரட்டும் வகையில் பேசியுள்ள கேரள அமைச்சர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் முல்லைப் பெரியாறு அணை உரிமை மீட்புக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் வேண்டுகோள் விடுத்தார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்ததாவது:

முல்லைப் பெரியாறு அணை தொடர்பாக உச்சநீதிமன்றம் அமைத்த நிபுணர் குழுவின் அறிக்கை கேரள அரசுக்கு எதிராக இருக்குமானால் அதனை ஏற்கமாட்டோம் என்று கேரள அமைச்சர் கே.பாபு என்பவர் பகிரங்கமாகக் கூறியிருக்கிறார். நிபுணர் குழுவின் அறிக்கை பெப்ரவரி மாத இறுதியில் உச்சநீதிமன்றத்தில் அளிக்கப்பட இருக்கும் நேரத்தில் அந்தக் குழுவில் உள்ளவர்களை நிர்ப்பந்தப் படுத் தும் வகையிலும் கேரள அமைச்சர் கூறியிருப்பது நீதிமன்ற அவமதிப்பாகும்.

எனவே அவர் மீது உச்சநீதிமன்றம் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு தமிழக அரசு வற்புறுத்த வேண்டும்- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2012 இல் பத்ம விருதுகள் பெறுவோர் விவரம்

இந்த வருடத்துக்கான இந்தியாவின் பத்ம விருதுகள் பெறுவோர் விவரம் மத்திய அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பட்டியலின் படி ஐவருக்கு பத்மவிபூஷண், 27 பேருக்கு பத்ம பூஷண் மற்றும் 77 பேருக்கு பத்மசிறீ விருதுகள் வழங்கப்பட உள்ளன.

இந்தவிருதுகளுக்காக தமிழகத்தைச் சேர்ந்த ஒன்பது பேர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். தமிழக இசைக் கலைஞர் ரி.வி.கோபால கிருஷ்ணன், தமிழக வயலின் கலைஞர் எம்.எஸ்.கோபால கிருஷ்ணன், மும்பை வாழ் தமிழர் பாலசுப்ரமணியன் உட்பட 4 பேருக்கு பத்ம பூஷன் விருதும், சமூக சேவகர் பி.கே.கோபால், கூத்துப் பட்டறை என். முத்துசாமி, மருத்துவர் வி. எஸ். நடராஜன், மற்றும் நீரிழிவுநோய் நிபுணர் வி.மோகன் ஆகிய நான்கு பேருக்கு பத்மசிறீ விருதும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**இவ்விருதுகளுக்காக தமிழகத்தைச் சேர்ந்த ஒன்பது பேர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.**

உத்தரப்பிரதேச முன்னாள் ஆளுநர் டி.வி. ராஜெஷ்வர், கார்டூனிஸ்ட் மரியோ மிரண்டா, காலம் சென்ற இசைக்கலைஞர் பூபென் ஹசாரிகா, மருத்துவ வியலாளர் டாக்டர் கந்தி லால் ஹாஷ்டிமல் சன்ஷெட்டி (மஹாராஷ்டிரா) ஆகிய ஐவர் பத்ம விபூஷண் விருதுகளுக்குத் தெரிவாகியுள்ளனர்.

இந்த விருதுகளை இந்திய ஜனாதிபதி பிரதீபா பாட்டில் எதிர்வரும் மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் வழங்குவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வன்முறைக்கு இடமளிக்காது பேசித் தீர்வு காண வேண்டும்

### குடியரசு தின விழாவில் இந்திய ஜனாதிபதி



**பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் தலைநகர் புதுடில்லியில் குடியரசு தின நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.**

டில்லி, ஜன.27

நாட்டில், வன்முறைக்கு இடமளிக்கக் கூடாது என்றும், பிரச்சினைகளுக்கு பேச்சு நடத்தி தீர்வு காண வேண்டும் என்றும் இந்திய ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் தெரிவித்தார்.

இந்தியாவின் 63 ஆவது குடியரசு தினமான நேற்று நாட்டு மக்களுக்குத் தொலைக் காட்சியில் உரையாற்றினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியா ஜனநாயக நாடு என்ற பெருமையைப் பெற்றிருந்தாலும், அதைச் செயற்படுத்துவதில் பல்வேறு சவால்களைச் சந்தித்து வருவதாகத் தெரிவித்தார். எனினும், இது போன்ற இடையூறுகள் சிறிது காலமே நீடிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

அனைத்து நாடுகளுடனும், நட்பும் ஒத்துழைப்பும் நல்க, இந்தியா தயாராய் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். கல்வியும், சுகாதாரமும் அனைத்து பிரிவினரையும் சென்றடைய வேண்டும் என்றும் பிரதீபா வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவில் 63 ஆவது குடியரசு தின விழா தலைநகர் புதுடெல்லியில் நேற்று கோலாகலமாக நடைபெற்றது. புதுடில்லியில் குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டிலும், அந்தந்த மாநிலத்தில் ஆளுநரும் கொடியேற்றி வைத்தனர்.

முன்னதாக நேற்றுக் காலை அமர்ஜவான் ஜோதி நினைவிடத்தில் பிரதமர் மன்மோகன் சிங் மலர் வளையம் வைத்து மறைந்த படையினருக்கு அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் அவர் விழா நடந்த ராஜ்பாத்திற்கு வந்தார். குடியரசு தின விழாவின் சிறப்பு விருந்தினரான இந்தோனேசியாவின் முதல் பெண் பிரதமரான இன்லுக் ஷினாவாத்ராவும் உடன் வந்தார். இதையடுத்து நாடு முழுவ தும் பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

பல்வேறு மாநிலங்களிலிருந்தும் பொதுமக்கள் தலை நகர் டில்லியில் நடைபெறும் குடியரசு தின நிகழ்ச்சியைக் காண குவிந்தனர். இந்த முறை குறிப்பிடத்தக்க எவ் வித அச்சுறுத் தலும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டில் நக்சல் பாதித்த வட கிழக்கு மாநிலம் மற்றும் காஷ்மீரில் கூடுதல் கவனம் எடுத்து கொள்வது நல்லது என்றும் உள்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இருப்பினும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குடியரசு தின அணிவகுப்பு செல்லும் பாதையில் ரகசிய கண்காணிப்பு கமரா, துணை ராணுவப் படையினர், தேசிய பாதுகாப்புப் படையினர் ஆங்காங்கே பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். (வ)

## எடுத்தார் வாகனத்தை ஓடினார் ஓட்டம்

### 2 குழந்தைகள் உட்பட 9பேர் சாவு



இந்தியாவின் மஹாராஷ்டிரா மாநிலம் புனேயில் அரசு பஸ் சாரதி ஒருவர் மனநோயாளி போல் பஸ்ஸை இயக்கியதில் 2 குழந்தைகள் உட்பட 9 அப்பாவிப் பொது மக்கள் உயிரிழந்த சம்பவம் புனேயில் பதற்றத்தை உண்டாக்கிள்ளது.

மகாராஷ்டிரா மாநிலம் புனேயில் உள்ள ஸ்வார் கேட் பஸ் நிலையத்துக்கு அரசு சாரதி சந்தோஷ்மானே நேற்று முன்தினம் காலை வந்தார். அங்கிருந்து சதாரா என்ற இடத்துக்குச் செல்லும் மக்கள் யாரும் ஏறாத பேருந்தில் சந்தோஷ் மானே ஏறி பஸ்ஸை பைத்தியக் காரர் போல வேகமாக இயக்கத் தொடங்கினார்.

அதிகமான போக்கு வரத்து உள்ள பகுதியான புனே-சோலாப்பூர் வீதியில் பஸ்ஸை கண்மூடித்தனமாகச் செலுத்திச் சென்றார். அப்போது எதிரே வந்த வாகனங்கள் மீதும், வீதியில் நடந்து சென்றவர்கள் மீதும் பஸ் மோதியதில் பலர் பலத்த காயம் அடைந் தனர். இவ்வாறு 25 கிலோ மீற்றர் தூரம் வரை கண் மூடித் தனமாக பஸ்ஸைச் செலுத்திச் சென்றார். இந்த தகவல் பொலிஸாருக்குத் தெரிந்த தும் பஸ்ஸை விரட் டிச் சென்றனர்.

சுமார் ஒரு மணிநேர போராட்டத்துக்குப் பின்னர் தீயணைப்பு வீரர்கள் மற் றும் பொதுமக்கள் உதவியு டன் பொலிஸார் பஸ்ஸை மறித்து நிறுத்தினர். பின் னர் சந்தோஷ் மானேவை கைது செய்தனர்.

சந்தோஷ் மானேவின் பைத்தியக்காரத்தனத்தால் 2 குழந்தைகள் உட்பட 9 பாதசாரிகள் பரிதாபமாக உயிரிழந்தனர். நகர் முழுவதும் 40 இற்கும் அதிகமான வாகனங்கள் சேதமடைந்துள்ளதாகவும், 30 பேர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் ஆணையர் தெரிவித்ததாவது:

சந்தோஷ் மானே, நேற்று முன்தினம் தனது வேலையை முடித்துவிட்டு நன்றாகத் தான் சென்றுள்ளார். அவர் ஏன் இப்படி வெறியுடன் [illegible] காரணம் குறித்து விசாரித்து வருகிறோம் - என்றார்.

## விஞ்ஞானிகள் 4 பேருக்கு பதவிகளில் நீடிக்கத் தடை

இஸ்ரோ முன்னாள் தலைவர் மாதவன் நாயர் உட்பட மேலும் நான்கு விஞ்ஞானிகளுக்கு அரசு பதவிகள் எவற்றிலும் நீடிக்க முடியாது என்று மத்திய அரசு தடை விதித்துள்ளதாக தெரிய வருகின்றது.

இவ்வாறு தடை விதிக்கப்பட்டமைக்கு 2ஜி ஊழலை விடவும் மாபெரும் ஊழலான ஆண்டிரிக்ஸ் - தேவாஸ் ஒப்பந்த ஊழல் முறைப் பாடுகள் நிருபணம் ஆகியமையே காரணம் [illegible] வருகின்றது. [illegible]வெளி ஆராய்ச்சிக் கழகமான இஸ்ரோவின் துணை நிறுவனமாக உருவாக்கப்பட்ட ஆண்ட்ரிக்ஸ் என்ற நிறுவனம் தேவாஸ் மல்டி மீடியா எனும் தனியார் நிறுவனத்துக்கு மிகவும் குறைந்த விலையில் 70 மெகாஹெர்ட்ஸ் அலை வரிசைகளை பயன்படுத்திக் கொள்ள அனுமதித்து விட்டு அரசு நிறுவனங்களுக்கு அதிக விலையில் வழங்கியமை தொடர்பில் வெளிச்சத்திற்கு வந்தது இந்த மாபெரும் ஊழல் விவகாரம்.

**2ஜி ஊழலை விடவும் மாபெரும் ஊழலான ஆண்டிரிக்ஸ் – தேவாஸ் ஒப்பந்த ஊழல் முறைப்பாடுகள் நிரூபணம் ஆகிய மையே காரணம்**

இதனால் ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட பிரதமர் மன்மோகன்சிங் உத்தரவிட்டார். இந்தநிலையில் இந்த ஊழலை ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட குழுவின ரின் அறிக்கை மூலம் மேலும் ஊழல் நிரூ பணமாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதிப்பில்லாமல் பேசுவதற்கு....

மனிதனோடு இணைந்த தவிர்க்க முடியாத இன்னொரு உறுப்பு போல் கைபேசி மாறிக் கொண்டிருக்கிறது. இதனால் காது கேட்கும் திறன் பாதிக்கும் என்று அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. பாதிக்காத அளவுக்கு கைபேசியில் பேசுவதற்கு



- தவிர்க்க முடியாத நேரங்களில் மிகக் குறைந்த கால அளவு மட்டும் கைபேசியில் பேசுங்கள்.
- தரமான நிறுவனங்கள் தயாரிக்கும் கைபேசிகளை மட்டும் வாங்கி பயன்படுத்துங்கள். குறைந்த மின்காந்த கதிர்வீச்சு கொண்ட கைபேசிகளை மட்டும் உபயோகியுங்கள்.
- நேரடியாக கைபேசியில் பேசும் பழக்கத்தைத் தவிர்த்து ஸ்பீக்கர் மோட், ஹியரிங் போன் மற்றும் ஹெட்போன் உபயோகித்து உரையாடுவது நல்லது.
- குழந்தைகளும், கர்ப்பிணிகளும் கைபேசியில் பேசுவதை தவிர்ப்பது நல்லது.
- பழுதடைந்த, சரிவர இயங்காத அலைபேசிகளை உபயோகிக்கக் கூடாது.
- செல்போனுக்கு பதில் தொலைபேசியை உபயோகிக்கலாம் மற்றும் மின்னஞ்சல் தொடர்பும் சிறந்தது.
- கைபேசி மிகக்குறைந்த பற்றரியில் வலுவிழந்து நிற்கும் போது பேச வேண்டாம், முழுமையாக சார்ஜ் செய்து விட்டுப் பேசுங்கள்.

facebook

## பேஸ்புக்கில் யு.எஸ்.ஏ.ருடே

அமெரிக்காவில் இருந்து இயங்கிவரும் 'யு.எஸ்.ஏ ருடே' எனும் பத்திரிகை நிறுவனம் பேஸ்புக்கின் மூலம் தாம் வெளியிடும் செய்திகள் உடனுக்குடன் பயனர்களைச் சென்றடையும் வகையில் புதிய 'USA TODAY + Me' என்ற Timeline மென்பொருளை வெளியிட்டுள்ளது. இதன் மூலம் சுவாரஸ்யமான செய்திகளைப் பகிர்வதுடன், உங்கள் நண்பர்கள் விரும்பிப்படிக்கும் செய்திகளையும் பகிர முடியும். இதில் நீங்கள் விரும்பியவாறு தோற்றத்தில் மாற்றங்களை செய்ய முடிவதுடன், பல வழிகளில் செய்திகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் (filter) வசதியும் காணப்படுகின்றது.

## புகைப்படங்கள் இனிப் பேசுமே!


### உங்கள் புகைப்படங்களைப் பேச வைக்க Crazytalk எனும் மென்பொருள் வெளிவந்துள்ளது.



உங்கள் புகைப்படம் மட்டுமல்ல, இறந்தவர்களையும் கூட பேச வைக்க முடியும். நம்ப முடிய இல்லையா? புகைப்படம் cameraவால் எடுக்கப்பட்டாலும் சரி, Scanner மூலம் பெறப்பட்டது என்றாலும் பரவாயில்லை.


உங்கள் குரல் அல்லது பாடல் எப்படி பலதுக்கும் புகைப்படம் வாய் அசைக்கும். அதுமட்டும் அல்ல , உங்கள் குரலுக்கு வரையப்பட்ட உருவங்களை கூட பேச வைக்கலாம். எலி, பூனை கூட உங்களுடன் கதைக்கும், தலை அசைக்கும், சிரிக்கும்

நீங்கள் பல உருவங்களைக் கூடபேச வைக்கலாம். அதை பார்த்தவுடன் உங்களுக்கே புரியும். அவ்வளவு இலகுவானது.



முதலில் குறித்த புகைப் படத்தை திறவுங்கள்.
வாய், கண், முக்கு, தலை, நெற்றி ஆகிய பகுதிகளைக் குறியுங்கள்.
ஒலி பகுதியில் உங்கள் குரல் அல்லது பாடலைத் தெரிவு செய்யுங்கள்.
தலை அசைவைக் கட்டுப்படுத்துங்கள். இப்போது உங்கள் காணொலி தயார்.

## விண்டோஸ் 7 அழகிய 'தீம்ஸ்'




நீங்கள் பயன்படுத்தும் கணினியை தீம்களை (Theme) பயன்படுத்தி விதவிதமான தோற்றத்தில் வடிவமைக்கலாம் என்பது யாவரும் அறிந்த விடயம்.

இருந்தும் விண்டோஸ் 7 உடன்வரும் தீம்ஸ்கள் குறிப்பிட்ட அளவே காணப்படுகின்றன. இதனால் அந்தத் தீம்களை அடிக்கடி மாற்றி உங்களுக்கு சலித்திருக்கும்.

உங்கள் சலிப்பைப் போக்குவதற்காக Microsoft நிறுவனம் புதிய பல தீம்களை இலவசமாக தரவிறக்கும் வசதியை ஏற்படுத்தி யுள்ளது.

கீழுள்ள இணைப்பில் அழுத்துவதன் மூலம் குறித்த தளத்துக்குச் சென்று உங்களுக்கு விருப்பமான ஒன்றைத் தெரிவு செய்து Download என்ற இணைப்பை அழுத்துவதன் மூலம் கணினியில் சேமித்து பின் வழமையான முறையில் உங்கள் கணினியின் தோற்றத்தைமாற்றிக்கொள்ளலாம்.



## புற்றுநோயைக் கண்டறியும் 'ஸ்மார்ட்' போன்கள்

மனிதனில் ஏற்படும் புற்றுநோயை ஸ்மார்ட் போன்களைப் பயன்படுத்தி கண்டறிய முடியும் என்று கொரிய நாட்டு ஆராய்ச்சியாளர்கள் குழுவொன்று தெரிவித்துள்ளது.

அதாவது ஜேர்மன் நாட்டுப் பத்திரிகை ஒன்றில் வரையப்பட்டிருந்த பயனுள்ள வேதியல்(Angewandte Chemie) எனும் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தவாறு தொடு திரை தொழில்நுட்பத்தை(Touch Screen) புற்றுநோயைக் கண்டறிவதற்குப் பயன்படுத்த முடியும் என்று கூறியுள்ளனர்.

இதற்காக தொடுதிரை கொண்ட ஸ்மார்ட் போன்கள், PDA மற்றும் தொடு திரை தொழில்நுட்பத்தைக் கொண்ட ஏனைய இலத்திரனியல் சாதனங்களையும் இதற்காகப் பயன்படுத்த முடியும் என்று தெரி வித்துள்ளனர்.

இந்தத்தொழில்நுட்பமானது உடலிலுள்ள புரதம், DNA (பரம்பரை அலகு மூலக்கூறு) என்பவற்றிலிருக்கும் இலத்திரன் ஏற்றங்களுக்கு இசைவாக செயற்படுவதால் இவ்வாறு புற்றுநோயைக் கண்டறிய சாதகமாகப் பயன்படுத்த முடியும் என்பதில் தமக்கு 100 சதவீத நம்பிக்கை இருப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.





## ஒரு 'கிளிக்' இல் 'யூடியூப்' வீடியோ பதிவிறக்கம்



பல்வேறு இணையத்தளங்கள் மற்றும் மென்பொருள்கள் உதவியுடன் யூடியூப் வீடியோக்களை MP3, MP4 வடிவில் தரவிறக்கம் செய்யலாம்.

இருப்பினும் மிக எளிதாக ஒரே சொடுக்கில் யூடியூப் வீடியோக்களைத் தரவிறக்கம் செய்வற்கு ஒரு வழி உள்ளது.

YTBYCLICK என்ற ரூல்பார் மூலம் யூடியூப் தளத்தில் இருந்து வீடியோக்களை தரவிறக்கம் செய்யலாம். இதனை குரோம், இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர், பயர்பொக்ஸ் போன்ற உலாவிகளில் நிறுவ முடியும்.

தெரிவு செய்யப்பட்ட வீடியோக்களைத் தரவிறக்கம் செய்ய ரூல்பாரில் உள்ள ICON ஐ கிளிக் செய்தால் போதும், உங்களுக்கு புதிய பக்கத்தில் நீங்கள் தெரிவு செய்த வீடியோ தரவிறக்கத் தொடங்கும். இணையத்தள முகவரி http://www.youtubebyclick.com/



You Tube Broadcast Yourself


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசியோடிருக்கும் குழந்தைகளின் கால்கள்

விளையாட்டாகக் கூட விளையாடாமல் இருப்பவர்கள் எவருமே இருக்க முடியாது. விளையாடவே விரும்பாதவர்கள் கூட மறைமுகமாக விளையாட்டை ரசிக்கவும் ஆதரிக்கவும் செய்கிறார்கள். அம்மா சத்தம்போட்டு அழைத்துச் சாப்பிடச்சொன்ன பிறகுதான் பிள்ளைகளுக்குப் பசி என்ற ஒன்றின் ஞாபகமே வரும். அந்த அளவுக்கு விளையாட்டோடு ஒன்றிப்போய் விடுபவர்களும் உண்டு. வகுப்பறையில் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போதுகூட எப்படா விளையாட்டு நேரம் வரும் என கவலையோடு காத்திருப்பார்கள், அதற்கான மணி அடித்தவுடன் பறந்து விளையாட்டு மைதானத்திற்குப் போகவே ஆவலோடு இருப்பார்கள்.

கிராமப் புறங்களில் பொங்கல் பண்டிகைக் காலங்களில் பெரியவர், சிறியவர் என அனைவரும் பங்கேற்கும் விதத்தில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுவதுண்டு. அத்தகைய விளையாட்டுப் போட்டியில் நாம் மறந்து போன எம்முடைய விளையாட்டுக்கள் எல்லாம் கூட நினைவுபடுத்தப்படும்.

நாம் மட்டுமல்லை உலகில் வாழ்ந்த மற்றும் வாழ்ந்துகொண்டிருக்கக் கூடிய மாபெரும் தலைவர்கள் எல்லாம் கூட ஏதாவது ஒரு விளையாட்டில் தேர்ச்சி



பெற்றவர்களாகவும் அளவு கடந்து விளையாட்டை நேசிப்பவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். ஒருமுறை இந்தியப் பாரதப் பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேருவை மௌன்ட் பேட்டன் பிரபு கோஃல்ப் விளையாட அழைத்தாராம். அதற்கு நேரு ''தான் விளையாட வரவில்லை'' என்று சொல்லிவிட்டாராம். மௌன்ட் பேட்டன் ''என்ன காரணம்'' எனக் கேட்க, அதற்கு நேரு சொன்ன பதில், ''நீண்ட காலமாக எங்கள் மக்களை கோஃல்ப் விளையாட நீங்கள் அனுமதிக்கவில்லை. இந்தியாவின் ஏழை மக்கள் இந்த விளையாட்டுக்கே தகுதி இல்லாதவர்கள் என்று நீங்கள் நினைத்து விட்டீர்கள்'' என்றாராம் நேரு. அதற்கு மௌன்ட் பேட்டன் ''அந்தக் காலம் மலையேறிவிட்டது என்னுடைய அழைப்பை ஏற்றுக் கொண்டு தற்பொழுது விளையாட வாருங்கள்'' எனக் கெஞ்சினாராம்.

உங்களுக்கு ஒன்று தெரியுமா...?

கோஃல்ப் விளையாட்டுக்கான மைதானம் முதல் முதலில் மிக உயரமான இடத்தில்தான் இருந்தது. எங்கு தெரியுமா...? இமயமலையில்தான். அதன் பிறகு தான் உலகின் பல பகுதிகளிலும் அது உருவாக் கப்பட்டது. இந்த கோஃல்ப் விளையாட்டு முதன் முதலில் அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அதற்கு முன் 1829 இல் இது கல்கத்தாவில் அறிமுகமாகிவிட்டது. இருந்தாலும் சாதாரண இந்திய மக்கள் ஒருபோதும் கோஃல்ப் விளையாட அனுமதிக்கப்பட்டதேயில்லை.

பிரிட்டிஷ்காரர்கள், உள்ளூர்ப் பணக்காரர்கள், அரச அதி காரிகள் மட்டுமே விளையாடிக் கொண்டிருந்தனர்.

அயர்லாந்தில் பிறந்து, இந்திய விடுதலைப் போராட்டத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அன்னி பெசன்ட் அம்மையார் மிகச்சிறந்த குதிரை யேற்ற வீராங்கனையாக ஜொலித்தவர். இவ்வளவு ஏன்? ரஷ்ய நாட்டைச் சேர்ந்த அரசியல் தலைவர் லெனின் என்பவர் தன்னுடைய மாணவப் பருவத்தில் பனிச்சறுக்கு விளையாட்டில் சிறந்துவிளங்கினார்.

சரி.. இப்படித் தலைவர்கள் முதல் சாதாரண மனிதர்களையும் கவர்ந்த விளையாட்டுக்கள் எங்கிருந்து தான் தோன்றின. பண்டைய கிரேக்கத்தில் ஒலிம்பியா என்ற சிறிய கிராமத்தில்தான் முதன் முதலில் விளையாட்டுகள் உதயமாகின. ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்கு முன்பே அந்தக் கிராமத்தின் பெயரைக் கொண்டே ஒலிம்பிக் போட்டிகள் துவங்கிவிட்டன. கி.பி.393 ஆம் ஆண்டு வரை ஒலிம்பிக் போட்டிகள் கிரேக்கத்தில் நடத்தப்பட்டன. அப்போது இப்போதிருக்கக்கூடிய விதிமுறைகள் ஏதுமில்லை.

இடையில் கிரேக்கம் ரோமாபுரியின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. பிறகு 1500 ஆண்டுகள் வரை ஒலிம்பிக் தடைசெய்யப்பட்டிருந்தது.

பாலா

(தொடரும்)

# தகவல் தொழில்நுட்ப அறிவு மாணவருக்கு மிக அவசியம்

## யாழ். பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர்

யாழ்ப்பாணம், ஜன.27

இன்றைய உலகம் அறிவு உலகமாக மாறி வருகிறது. இந்த சவாலைச் சமாளிப்பதற்கு மாணவர்கள் தகவல் தொழில்நுட்ப அறிவையும் ஆங்கில அறிவையும் இளமையிலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டும் என யாழ்.பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் இரா.சிவசந்திரன் தெரிவித்தார்.

மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு கடந்த 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விவசாய ஆய்வு கூடத்தில் அதிபர் இ.புஸ்பராசா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இரா.சிவசந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த கலாநிதி அப்துல்கலாம் இந்தியாவில் இராமநாதபுரம் எனும் வறுமையான மாவட்டத்தில் பிறந்தவர். அவர் தன் அறிவால் புகழ் பெற்று இந்தியாவின் ஜனாதிபதியாக வந்தது மாத்திரமன்றி இந்தியாவை அணுவல்லரசாக மாற்றுவதற்கு உழைத்துவரும் விஞ்ஞானியாகவும் செயற்பட்டு வருகிறார்.

எனவே வசதி குறைவு வறுமை என்பது அறிவுக்கு ஒரு தடைக்கல் அல்ல. மாணவர்கள் விடாமுயற்சியுடனும், தன்னம்பிக்கையுடனும் உழைக்க வேண்டும் என்றார். (எ)

## முதியோர் சங்கத்தின் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.27

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் பொதுக்கூட்டம் கடந்த 21 ஆம் திகதி கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.


சங்கத் தலைவர் பொன்னையா இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலகத்தின் சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி விஜயகுமாரி முகுந்தன் கலந்து கொண்டார். (எ-313)

## சைவசமயப் போட்டி பெப். 20 ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜன.27

உரும்பிராய் கிழக்கு ஸ்ரீ பரமேஸ்வரி கண்ணகை அம்மன் ஆலயத்தினால் வருடந்தோறும் நடத்தப்படும் சைவசமயப் போட்டி பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளின் மாணவர்கள் பங்குபற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-313)



பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்புத்திட்டத்தில் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை முன்னாள் பேராசிரியர் இரா. சிவசந்திரன் வழங்குகின்றார். (எ)

## முறைசாராக் கற்கைநெறி

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் அலங்காரப் பொருள் உற்பத்தி, மனைமுகாமைத்துவம் போன்ற முறைசாராக் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தக் கற்கை நெறியினைக் கற்க விரும்புவோர் இதற்கான விண்ணப்பப் படிவங்களை இன்று கல்லூரி அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 1ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.(எ)

# போஷாக்கு உணவுத் திட்டம் கல்வியை மேம்படுத்த உதவும்

## கரவெட்டி பங்குத் தந்தை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.27

தைபிறந்தால் வழி பிறக்கும் என்ற முதியோரின் வாக்குக்கு அமைய தை பிறந்துள்ள வேளையில், மானிடர்களாகிய எமக்கு மாத்திரமன்றி விலங்குகள், பிராணிகள், தாவரங்களுக்குக்கூட சிறப்புக்கள் கிடைக்கும் என கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த கரவெட்டி பங்குத் தந்தை அருட்திரு ஒ. அகஸ்தீன் அடிகளார் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களுக்கு போஷாக்கு உணவு வழங்கும் தேசிய விழா வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில், போஷாக்குத்திட்டம் ஆரம்பிக்கப்படுவதால் மாணவர்கள் உடல் ஆரோக்கியத்துடன் இடையூறின்றி கல்வியைப் பெறவும், கல்வியை மேம்படுத்தவும் பெரிதும் உதவும்.

இந்தத் திட்டத்தின் மூலம் மாணவர்கள் [illegible] வேண்டும்.

**வசதி குறைந்த கிராமப்புற பாடசாலைகளுக்கு இந்த உணவுத் திட்டம் அவசியமானது.**

அப்பொழுதுதான்கல்வி முன்னேற்றகரமான சூழலை ஏற் படுத்தி எமது சமூகத்தில் தலைமைப் பண்புள்ள பிள்ளைகளாக வளர முடியும் . எமது சமூகத்தில் போர் இடம்பெற்றதனால் அதில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பலர் வாழ்வாதாரத்தின் இயல்பான ஓட்டத்துக்கு வரமுடியாமல் உள்ளனர்.

இந்த போஷாக்கு உணவுத் திட்டத்தின் மூலம் அப்படிப்பட்ட பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்துக்கும் கல்விக்கும் பெரும் உதவியாக இருக்கும்.

கல்வி என்பது வளரும் பிள்ளைகளுக்கு அடிப்படையானவற்றில் முதலிடத்தில் உள்ளதால் கண்டிப்பாக அவற்றில் எல்லா பிள்ளைகளையும் ஈடுபடுத்தவேண்டும்.

அதற்குஇந்தத்திட்டம் முன்னோடியாகவுள்ளது. பிள்ளை களின் எதிர்காலம் சிறந்து விளங்க அவர்களின் உடல் ஆரோக்கியம் சிறந்து விளங்கவேண்டும்.

ஆகவே இந்தத் திட்டத்தை வசதி குறைந்த கிராமப்புற பாடசாலைகளுக்கு முழுமையாக மேற்கொள்ளப்படவேண்டும்.

நகர பாடசாலைகளில் வசதி படைத்தவர்களின் மாணவர்கள் கல்வி கற்பதால் அவர்களுக்கு இந்த போஷாக்கு உணவுத் திட்டம் பயனளிக்காமல் போனாலும் போய் விடலாம்.

ஆனால் வசதி குறைந்த கிராமப்புற பாடசாலைகளுக்கு இந்த உணவுத் திட்டம் அவசியமானது. அங்குள்ள மாணவர்கள் பலர் பாடசாலை செல்லாமைக்குக் காரணம் ஒழுங்கான உணவு இல்லாமையே.

ஆகவே கண்டிப்பாக இந்தத் திட்டத்தை கிராமப்புற பாடசாலைகளுக்கு முழுமையாக கொண்டு சென்றால் அப்பகுதி மாணவர்களின் கல்வியில் முன்னேற்றத்தைக் காண வழிவகுக்கும் என்பது உண்மை என்றார்.

(எ-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:** 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021-2280065
தொலைநகல்: 021-2280066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377, 021-2262395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021-2270323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' – மானு சந்தி, அல்வாய் : 0212263206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 0214901519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 0212270399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார்:– சிவசாந்தி முகவர் 0755732271

# தமிழரின் அடுத்த தலைமை

மீட்பர்களை நோக்கித் தவம் கிடக்கும் போக்கில் இருந்து நாம் இன்னும் பெரிதாக மாறிவிடவில்லை. முன்னர் எமக்கான மீட்பர்களாக விடுதலைப் புலிகள் இருந்தார்கள். இப்போது புலம் பெயர் தமிழர்கள், அமெரிக்கா, இந்தியா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று பல முகங்களில் இருந்தும் ஏதாவது ஒரு மீட்பர் முகம் தென்படாதா என்று அலைந்து கொண்டிருக்கிறோம்.

ஆனால், இந்த மீட்பர்கள் எல்லோரையும் விட்டுவிட்டு நாங்கள் – தமிழர்கள் – என்ன சொல்கிறோம் என்பதையும் நாங்கள் என்ன கேட்கிறோம் என்பதையும் அறிவதில்தான் உலகம் ஆர்வமாக இருக்கிறது. அதற்கு எதிர்வினையாற்றத்தான் அது விரும்புகிறது.

போர்க்குற்ற விசாரணையாகட்டும் அரசியல் தீர்வாகட்டும் தங்களுக்கு என்ன வேண்டும் என்பதை தமிழர்கள் வெளிப்படுத்த வேண்டும் என்றே உலகம் எதிர்பார்க்கிறது. வெறுமனே அரசியல் கட்சிகள் அவற்றைக் கேட்கக்கூடாது என்பதே அதன் சித்தாந்தம்.

அப்துல் கலாமைப் பார்ப்பதற்காக முண்டியடிக்கும் கூட்டத்தை அரசியல் பேரணியிலோ நீதிக்காக நடக்கும் போராட்டங்களிலோ காணக்கிடைக்கவில்லை என்றால், தமிழ் மக்களுக்கு அரசியல் வேணவாக்கள் இல்லை, அவர்கள் அரசியல் தீர்வையோ, போர்க்குற்ற விசாரணையையோ கேட்கவில்லை என்பதுதானே அர்த்தம் என்று உலகம் எண்ணுகிறது.

சர்வதேச போர்க்குற்ற விசாரணை ஒன்றைத் துரிதப்படுத்துவதில் அமெரிக்கா உடனடியாக ஆர்வம் காட்டக்கூடாது என்று அந்த நாட்டு ராஜாங்கத் திணைக்கள அதிகாரிகள் தமது தலைவர்களுக்கு ஆலோசனை தெரிவித்திருப்பது இதன் வெளிப்பாடுதானே!

போரால் பாதிக்கப்பட்ட மக்களே நீதியான போர்க்குற்ற விசாரணை ஒன்று வேண்டும் என்று குரல்கொடுக்காத நிலையில், அமெரிக்கா அதற்காகப் பரிந்து பேசுவது தேவையற்றது ; பொருத்தமற்றது என்றே ராஜாங்கத் திணைக்கள அதிகாரிகள் வாதிடுகிறார்கள். அமெரிக்கர்கள் மட்டுமல்ல பெரும்பாலான மேற்குலகினரின் சிந்தனைப் போக்கு இந்த விடயத்தில் இப்படித்தான் இருக்கிறது. தமிழரே கேட்காதவற்றுக்காக நாம் ஏன் குத்தி முறிய வேண்டும் என்பதுதான் அதன் பொருள்.

அவர்கள் அப்படிக் கூறுவதில் தவறேதும் இருப்பதாகக் கொள்ள முடியாது. ஏனெனில், விடுதலைப் புலிகள் போராட்டக் களத்தில் இருந்து அகற்றப்பட்டதன் பின்னர் தமது விருப்பு என்ன என்பதை தேர்தல் ஒன்றின்போது தவிர தமிழர்கள் வேறெந்தச் சந்தர்ப்பத்திலும் வெளிப்படுத்தவில்லை.

அரசியல் இருப்புக்கான வேணவாவை வெளிப்படுத்தும் போராட்டத்தையோ அதற்கான முயற்சிகளையோ கூட நாம் மேற்கொள்ளவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்களோ அவர்களின் உறவுகளான நாங்களோ எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இலங்கை அரசிடம்கூடக் கோரிக்கை விடுக்கவில்லை.

நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்பாகச் சிலருக்குச் சாட்சியங்கள் அளிக்கக் கிடைத்த சந்தர்ப்பங்களைத் தவிர, திரட்சியான வெளிப்பாட்டுக்கான சந்தர்ப்பங்களை எமது அரசியல் கட்சிகளோ அமைப்புக்களோ வெளிப்படுத்தி இருக்கவில்லை. இதன் வெளிப்பாடுதான் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் கருத்து.

ஆனால், இப்போதும் முழுமையாக எதுவும் கெட்டுப் போகவில்லை. பகிரங்கமாக ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் நடத்துவதற்குத்தான் எமக்குத் தைரியம் இல்லை என்றாலும், குறைந்தபட்சம் கையெழுத்து வேட்டையாவது நடத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதை உலகுக்கு வலியுறுத்தும் வகையில் 50 ஆயிரம் அல்லது ஒரு லட்சம் கையெழுத்துக்களைத் திரட்ட உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம்.

தேர்தலைத் தாண்டிய இந்த அரசியல் வெளியை நிரப்பக்கூடிய தலைமை ஒன்றே எதிர்காலத்தில் தமிழர்களுக்குத் தலைமை வகிக்க முடியும்– தலைமை வகிக்க வேண்டும்.

# கொன்கோடியா கப்பல் மாலுமியும் இலங்கை நாட்டின் மாலுமிகளும்....

■ விஎஸ்ரி

பிரிட்டிஸ். அமெரிக்க காணிவல் நிறுவனத்துக்குச் சொந்தமான, 'கொஸ்தா கொன்கோடியா' என்ற பெயர் கொண்ட உல்லாசப் பயணக் கப்பல் இம்மாதம் 13ஆம் திகதியன்று இத்தாலியின் மேற்குக் கரைக் கடலில் பயணித்துக் கொண்டிருந்த வேளை விபத்துக்குள்ளாகிக் கடலில் மூழ்கியது. உரிய கடற் பயண மார்க்கத்தில் கப்பல் தலைமை மாலுமி கப்பலைச் செலுத்தாது, இத்தாலியக் கரையில் அமைந்துள்ள சில தீவுகளை உல்லாசப் பயணிகளுக்கு காண்பிக்கும் நோக்கில் கப்பலின் தலைமை மாலுமி கப்பலை ஆபத்தான கற்பாறைகள் கொண்ட பாதையில் செலுத்தியமையே கப்பல் விபத்துக்கு உள்ளாகக் காரணமானது. கப்பலின் தலைமை மாலுமி கப்பலில் பயணித்த உல்லாசப் பயணிகளைத் திருப்திப்படுத்தும் நோக்கில் மேற்கொண்ட அந்தத் தவறான செயற்பாடு பதினொரு பேரின் உயிரைக் காவு கொள்ளக் காரணமாயிற்று. உரிய பயண மார்க்கத்தைத் தவிர்த்து தவறான பாதையில் பயணத்தை மேற்கொள்வதால் ஏற்படும் பலாபலன் இத்தகையதே. இன்றைய இலங்கையின் நிலையும் அந்த உல்லாசப் பயணக் கப்பலுக்கு நேர்ந்த கதியை ஒத்ததே.

இன்று இலங்கை அரசு பெரும் சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. தனது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் நோக்கிலானதல்ல அது கடந்த தேர்தல்களில் நடாளுமன்றம் மற்றும் ஏனைய மக்கள் பிரதிநிதித்துவம் வகிக்கும் நிறுவனங்களின் அதிகாரத்தை இந்த அரசு கைப்பற்றிக் கொண்டது. நாட்டு மக்களது அதிருப்பதியைச் சம்பாதிக்கும் விதத்திலான தனது நடவடிக்கைகள் மூலம் அரசு பொருளாதாரச் சிக்கல்களுக்கு இன்று முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. ரூபாவின் மதிப்பிறக்கம் காரணமாக அத்தியாவசிய உணவுப்பொருள்கள் உட்பட இறக்குமதிப் பொருள்களின் விலை அதிகரித்துள்ளது.

2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அரசு, அரச ஊழியர்களுக்கு வழங்கிய மிகச் சிறிய சம்பள அதிகரிப்பால் அரச ஊழியர்கள் திருப்தியுற இயலவில்லை. அரச கூட்டுத்தாபனங்கள் சிலவற்றின் ஊழியர்களுக்கு அரசு வழங்க முன்வந்த சம்பள அதிகரிப்பு போதுமானதல்ல எனத் தெரிவித்து குறிப்பிட்ட கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இலங்கை மின்சார சபை, நீர் வழங்கல் அதிகார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் ஊழியர் தொழிற்சங்கங்கள் அரசின் சம்பள உயர்வுத் தீர்மானத்தை ஏற்க மறுத்து வேலை நிறுத்த நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாக அரசை மிரட்ட ஆரம்பித்தன. அரசு தான் வழங்க முன்வந்த சம்பள உயர்வு வீதத்தை அதிகரிக்க முன் வந்த போதிலும், ஊழியர்கள் அது கூடப் போதுமானதல்ல எனத்தெரிவித்து விட்டுள்ளனர். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தாம் அரசிடம் முன்வைத்த பல கோரிக்கைகள் அரசினால் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் அடையாள வேலை நிறுத்த மூலம் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். அரசின் புதிய வேலைத்திட்டங்களுக்கு எதிரான ஊழியர்களது எதிர்ப்பு எதிர்காலத்தில் மேன்மேலும் உயர்வடையத் தக்க சாத்தியம் புலப்பட ஆரம்பித்துள்ளது.

இத்தகைய அரசுக்கு எதிரான போராட்டங்கள் குறிப்பிட்டத்தக்க அளவுக்கு அரசு ஊழியர்கள் தரப்புக்கு வெற்றியளித்திருப்பதுடன், அரசு மக்கள் சக்திக்கு முன் பின்னடைவு நிலைக்கு உட்பட நேர்ந்துள்ளது. தனியார் துறை ஊழியர்களுக்கான ஓய்வூதியத்திட்டத்துக்கு எதிரான மக்கள் எதிர்ப்புக்கு அரசு தலைதாழ்த்த நேர்ந்துள்ளது. மரக்கறி வகைகள் பிளாஸ்ரிக் கூடைகளிலேயே பேணப்பட வேண்டுமென்ற அரசின் தீர்மானத்துக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்ததையடுத்து அத்திட்டத்தைச் செயற்படுத்துவதை இடை நிறுத்தி வைத்த அரசு, பல திருத்தங்களுடன் அதனை மீண்டும் நடைமுறைப்படுத்த முயல வேண்டி ஏற்பட்டுள்ளது. தனியார் பல்கலைக்கழக உருவாக்கச் சட்ட மூலத்தை நிறைவேற்ற அரசு மேற்கொண்ட முயற்சி, மாணவர் எதிர்ப்புப் போராட்டங்கள் காரணமாகக் கைவிடப்பட நேர்ந்துள்ளது. அரசு தனது அதிகார பலம் குறித்து எவ்வளவு தான் பெருமை பேசிக் கொண்டாலும், அது மக்கள் சக்தியின் முன்னால் தலை குனிய நேர்ந்துள்ளது. இத்தகைய அரசின் தவறான செயற்பாட்டு முயற்சிகள் காரணமாக அரசினுள்ளேயே கருத்து வேறுபாடுகள் தோற்றம் கண்டுள்ளன. மொத்தத்தில் கூறுவதானால் ஜனவரி 13 ஆம் திகதியன்று 'கொஸ்தா கொன்கோடியா' கப்பல் நீரில் மூழ்கிய போது, மூழ்கும் அக்கப்பலிலிருந்து பெருச்சாளிகள் எவையாவது குதித்துத்தப்பித்துக் கொண்டனவோ நாமறியோம். ஆனால் ஜனவரி 13ஆம் திகதியளவில் ராஜபக்ஷ றெஜிமேன்ற், என்ற கடலில் மூழ்கும் கப்பலில் இருந்த பெருச்சாளிகள் மத்தியில் குழப்பமும் அமைதியின்மையும் உயர்வு கண்டதென்னமோ உண்மையே.

கடந்த ஜனவரி 13 ஆம் திகதியன்று கூடிய கொழும்பு மாநகர சபையின் கூட்டணி உறுப்பினர் குழு, சபையின் பிரதி எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து அசாத் சாலியை விலக்கி, ஐ.தே.கட்சித் தரப்பிலிருந்து கூட்டணியில் இணைந்து கொண்ட மொகமட் மஹரூப்பை அப்பதவியில் அமர்த்தியது. கடந்த சில நாள்ளகளாக அசாத் சாலி அரசை விமர்சித்து வந்ததாலேயே இத்தகைய பதவி இதற்க்கத்துக்கு அவர் உட்பட நேர்ந்ததாகப் பேசப்படுகிறது. அதே போன்று கடந்த சில மாதங்களாக அரசை விமர்சித்துக் கருத்து வெளியிட்டு வரும் அமைச்சர்களான விமல் வீரவன்ச மற்றும் பாடலி சம்பிக்க ரணவக்க ஆகியோர் தமது அத்தகைய போக்கை மாற்றிக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அதே வேளை தாம் சபாநாயகர் பதவியைத் துறக்கப் போவதாக சமல் ராஜபக்ஷ கூறிவருவதும் பிரதமர் பதவியைப் பெறும் எதிர்பார்ப்பிலேயே எனவும் பேசப்படுகிறது. ஆயினும் அவருக்குப் பிரதமர் பதவி வழங்குவதற்கு ஜனாதிபதியின் குடும்பத்தவர் மத்தியிலேயே எதிர்ப்பு நிலவுவதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன. அரசின் உயர்மட்டத்தரப்புக்கள் மத்தியில் நிலவும் இத்தகைய சிக்கல்கள் எதிர்காலத்தில் உச்சமடையக் கூடும். பெருச்சாளிகள் மத்தியில் நிலவும் இத்தகைய சிக்கல்கள், கப்பல் கடலில் மூழ்குவதற்கான முன் சமிக்ஞை எனக் கொள்ளத்தக்கதே. சில பெருச்சாளிகள் தற்போதே கப்பலிலிருந்து பாய்ந்து தப்பித்துக் கொள்ள முயல்வதாகவும் தோன்றுகிறது. கொஸ்தா கொன்கோடியா கப்பலின் தலைமை மாலுமி தன்னிச்சையாக மேற்கொண்ட தவறான முடிவால் கப்பல் கவிழ நேர்ந்தது போன்று சந்தர்ப்பவாத தேவையின் பொருட்டு குழப்பமான செயற்பாடுகளை மேற்கொள்ளும் ராஜபக்ஷ றெஜிமேன்ற் தற்போது வீழ்ச்சியுறும் தலைவிதிக்கு உட்பட நேர்ந்துள்ளது.

நாட்டு மக்கள் முகம் கொடுக்க நேர்ந்துள்ள சிக்கல்கள், மற்றும் தான் எதிர்நோக்க நேர்ந்துள்ள சவால்கள் குறித்து நன்கு தெரிந்து புரிந்து உணர்ந்துள்ள அரசு அவற்றிலிருந்து விடுபட தற்போது வேறொரு உபாய மார்க்கத்தை முன்னிலைப் படுத்த முயன்று வருகிறது.

கடந்த 2009 ஆம் ஆண்டு வரை அரசு விடுதலைப் புலிகள் மீண்டும் ஒன்று திரள்கின்றனர் என்ற பூதக்கதையையும், வெளிநாடுகளின் ஆக்கிரமிப்பு என்று பூதக் கதையையும் கூறி நாட்டின் சிங்கள மக்களை பயமுறுத்தி தன் பின்னால் ஒளிந்து கொள்ள வைத்து வந்தது. 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளை விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டிய தனது சூரத்தனத்தைப் பறைசாற்றி சிங்கள மக்களைத் தன் பின்னால் அணிதிரள வைக்கப் பயன்படுத்தியது. தற்போது அரசின் அந்த இரு கோஷங்களும் செயலாற்றுப் போயுள்ளன. 2012 ஆம் ஆண்டு அரசுக்கு சிக்கல்களை ஏற்படுத்தும் ஆண்டாக மட்டுமன்றி, பிரச்சாரகோஷங்கள் எதனையும் முன்வைக்க இயலாத ஆண்டாகவே பிறந்துள்ளது. பிரச்சார கோஷம் எதுவுமற்ற நிலையில் அரசு தற்போது விடுதலைப்புலிகள் ஒன்று திரள்கின்றனர் என்ற தனது பழைய கோஷத்தை மீண்டும் கையில் எடுத்துள்ளது. இதற்கு முன்னர் வேலை நிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்ட தொழிலாளர்கள் மீதும் ஆர்ப்பட்டங்களை மேற்கொண்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மீதும் விடுதலைப் புலிகள் ஆதாரவாளர்கள் என்ற இலச்சினையைப் பொறித்தமை போன்றே, தற்போது மாணவ சமூகத்தினர் மற்றும் மக்கள் போராட்டங்களை முன்னெடுக்கும் தரப்பினர் மீதும் விடுதலைப் புலிகளுக்கு ஆதாரவாகச் செயற்பட முனைவதாக அரசு குற்றம் சுமத்தி வருகிறது. இதன் மூலமாக அரசு ஒரே கல்லெறியில் இரு குருவிகளை வீழ்த்திவிடும் உத்தியை மேற்கொள்ள முனைகிறது.

அரசின் இத்தகைய எத்தனம், ஒரு புறத்தில் அரசுக்கு ஆதரவான ஊடகங்கள் மூலமான பிரச்சாரங்களால் சிங்கள மக்களைத் தமது சகல பிரச்சனைகளையும் மறக்க வைத்து அவர்களது சிந்தனைகளைத் திசை திருப்பி விடும் முயற்சியாக அமைகிறது. இதன்மூலம் தொழிலாளர்களை தமது ஊழியர் சேமலாப நிதி திருத்தச் சட்ட மூலம் குறித்து சிந்திப்பதற்குப் பதிலாக, விடுதலைப்புலிகள் மீண்டும் தலை தூக்குவது தொடர்பாக அச்சம் கொள்ள வைக்க அரசால் முடிகிறது. விவசாயிகளை பிளாஸ்ரிக் கூடைப் பாவனைச் சிக்கல் குறித்து கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, ஆயுதக் கிளர்ச்சி தொடர்பான அச்சத்தில் கவனம் கொள்ள வைக்க அரசால் முடிகிறது. மாணவ சமூகத்தினர் தனியார் பல்கலைக் கழகச்

22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் அதிகாரத்தைக் கிள்ளித் தெளிக்கலாம் காணி அதிகாரத்தைக் கொடுப்பது சிக்கலானது

■ புதினப்பலகை

சில ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ சந்தித்தபோது பேசப்பட்ட விடயங்களே 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று ஒரு தீர்வைக் காண்பது என ஜனாதிபதியின் செயலாளர் வீரதுங்க தெரிவித்தார். நாடாளுமன்றத் தெரிவுக் குழு தொடர்பாகவும் அவர் தெளிவுபடுத்தினார். அதாவது 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாலான உடன்பாடானது, நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பெற்றிராத மாகாண மட்ட பிரதிநிதிகளுக்கு மத்திய கட்டமைப்பில் பிரதிநிதித்துவத்தை வழங்குவதை உள்ளடக்கியுள்ளது.

"இக்கட்டமைப்பில் தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கு நியாயமான அடிப்படையில் பிரதிநிதித்துவம் வழங்கப்படும்" என வீரதுங்க விளக்கினார். "இந்திய மத்திய அரசில் மாநிலங்களின் நலன்களுக்கு இடமளிக்க உதவுவதாக கீழ்ச் சபை அமைந்திருக்கிறது. அதுபோன்ற சட்டங்களை வரைந்தால் நாடாளுமன்றமும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவும் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். நாடாளுமன்றமானது எல்லா மக்களுக்கும் உண்மையான பிரதிநிதித்துவத்தை வழங்க முடியாததாக இருக்கலாம் என்பதால் இது முக்கியமான ஒன்றாக உள்ளது" எனவும் அவர் தெரிவித்தார்.

வீரதுங்கவிடம் நாடாளுமன்ற தெரிவுக் குழு தொடர்பாக வினவியபோது, நிலையான அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் அதனை எவ்வாறு நகர்த்த முடியும் என்பது தொடர்பாகவும் ஆராய்வதற்காகவே இத்தெரிவுக் குழு உருவாக்கப்படுகிறது என அவர் பதிலளித்தார்.

"இவ்வளவு காலமும் உருவாக்கப்பட்ட அனைத்துக் குழுக்களும் நாடாளுமன்றத்துக்கு வெளியிலேயே உருவாக்கப்பட்டன. இதில் அனைத்துக் கட்சிக் குழுவும் உள்ளடங்குகின்றது" எனவும் வீரதுங்க விளக்கினார். "இவ்வாறு வெளியே அமைக்கப்படும் குழுக்களால் இனப்பிரச்சினை விடயத்தை நாடாளுமன்றுக்குக் கொண்டுவர முடியாது. ஏனெனில் நாடாளுமன்றம் அதனை ஏற்றுக் கொள்ளாது. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவானது இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாக வாதங்களை மேற்கொண்டால், நாடு அதற்கான தீர்வைத் தெரிவு செய்துகொள்ள முடியும். அதனால் தீர்வை மறுக்க முடியாது. ஆகவே தெரிவுக் குழுவானது நாடாளுமன்றத்துக்கு உள்ளேயே உருவாக்கப்படவேண்டும்" எனவும் வீரதுங்க தெளிவுபடுத்தினார்.

"நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கான பிரதிநிதிகளை நியமிக்குமாறு நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கேட்டுக்கொண்டோம், ஆனால் அவர்கள் இதனை மறுத்துவிட்டார்கள், இது விடயத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து நடக்க அவர்கள் இணங்கவில்லை" எனவும் அவர் தெரிவித்தார்.

"இது கோழியா முட்டையா முதலில் வருவது போன்ற ஒருவகை நிலைப்பாடாகும். நாடாளுமன்றில் உள்ள அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும் இத்தெரிவுக் குழுவில் உள்ளடங்கியிருப்பர். இது நாடாளுமன்றுக்குள் மேற்கொள்ளப்படும் செயற்பாடாகும். நாடாளுமன்றத் தெரிவுக் குழு விடயத்தில் என்ன நடந்தாலும் அந்த விடயத்தில் தான் முழு ஆதரவையும் வழங்குவதாக இலங்கை ஜனாதிபதி சம்பந்தனிடம் தெளிவாக உறுதியளித்திருந்தார்" எனவும் வீரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் ஜனாதிபதி நியமித்த அனைத்துக் கட்சிக் குழு ஊடாகப் பல்வேறு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டனவே என்று அவரிடம் சுட்டிக்காட்டியபோது, "அனைத்துக் கட்சிக் குழு போர்க் காலத்தில் உருவாக்கப்பட்ட அமைப்பாகும்" என வீரதுங்க தெரிவித்தார்.

"நாடானது தீவிரவாதத்தின் பிடியில் சிக்குண்டிருந்த போது நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்று உருவாக்கப்படவேண்டி வரும் என எவருமே கற்பனை செய்து பார்த்திருக்க மாட்டார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கூட இதனை நினைத்துப் பார்த்திருக்க முடியாது.



ஜனாதிபதியின் செயலர் 'லக்பிம' ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியின் மொழியாக்கம் இது.

இது தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவுக்கட்சி ஆகும்" எனவும் அதிபரின் செயலர் வீரதுங்க குறிப்பிட்டார்.

"13ஆவது திருத்த உடன்பாடானது எமது கழுத்தை அறுக்கும் செயலாகும். இது மிக அவசர அவசரமாக இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டது. இது எம்மைத் திருப்திப்படுத்தாவிட்டாலும் கூட இதனை நாம் ஏற்றுக்கொண்டோம்" எனவும் வீரதுங்க தெரிவித்தார்.

மாகாணமட்ட பொலிஸ் அதிகாரங்களை மாகாண முதலமைச்சரின் கைகளில் வழங்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்புவதாகவும் இலங்கைப் பொலிஸின் மாகாண பொறுப்பு அதிகாரியை முதலமைச்சர் நியமிக்கவேண்டும் என கூட்டமைப்பு விரும்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

"இது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கும். நாங்கள் இந்தப் பிரச்சினை தொடர்பாக மிக, மிகத் தீவிரமாக ஆலோசிக்க வேண்டியுள்ளது" எனவும் அவர் தெரிவித்தார்.

"கூட்டமைப்பின் இந்தக் கோரிக்கையை அமைச்சர் தொண்டமான் மிகப் பலமாக எதிர்த்தார். சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மத்திய மாகாணத்தில் எப்போதும் சிங்களவர் ஒருவரே முதலமைச்சராக இருப்பார் எனவும் இங்கு தமிழர் ஒருவர் ஒருபோதும் முதலமைச்சராக இருக்க முடியாது என்பதால் தமது மக்கள் மீது பொலிஸ் அதிகாரங்களைப் பிரயோகிக்கின்ற தெரிவைக் கொண்ட முதலமைச்சர் தமக்கு ஒருபோதும் வேண்டாம் என்றும் தாங்கள் மத்திய அரசிடமே முறையிட்டுக் கொள்கிறோம் என்றும் அமைச்சர் தொண்டமான் தெரிவித்திருக்கிறார்.

"மாகாணங்களில் அந்தந்த இன விகிதாசாரத்துக்கு ஏற்ப பொலிஸாரின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும். முதலமைச்சருக்கு இது தொடர்பில் அதிகாரங்களை வழங்க முடியும். ஆனால் முற்றுமுழுதாக அல்ல" எனவும் வீரதுங்க வலியுறுத்துகிறார்.

"மாகாண மட்ட பொலிஸ் பொறுப்பதிகாரியை நியமிக்கின்ற அனுமதி நிச்சயம் வழங்கப்படக்கூடாது. மாகாண மட்டத்தில் குறிப்பிடத்தக்க சில கண்காணிப்பு அதிகாரத்துடன் மத்திய அரசு கட்டுப்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகவே பொலிஸ் தொடர்ந்தும் இருக்க வேண்டும்" எனவும் அவர் விளக்கினார்.

இதேவேளையில், காணி என்பது முக்கிய பிரச்சினையாகும் என வீரதுங்க தெரிவித்துள்ளார். "65,000 சதுர கிலோ மீற்றரைக் கொண்ட ஒரு சிறிய நாடே இலங்கை. இங்கு 9 மாகாணப் பிரிவுகள் உள்ளன. உள்ளூர் அரசியல்வாதிகள் தமக்கு விரும்பியபடி இந்தக் காணிகளை கையகப்படுத்திக் கொண்டால் நாட்டின் முக்கிய வளமானது அழிவடைந்துவிடும்" எனவும் அவர் தெரிவித்தார்.

"தற்போது மாகாண மட்ட காணி ஆணையாளர் சில அதிகாரங்களைக் கொண்டுள்ளார். ஆனால் இலங்கை ஜனாதிபதியே இறுதியாக காணி உறுதிகளை வழங்குவதற்கான உரிமையைக் கொண்டுள்ளார். காணி உறுதிகளை உரியவர்களிடம் கையளிப்பதற்கு முன்னர் 39 படிமுறைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளது. இது கெட்ட விடயமல்ல. ஏனெனில் காணி என்பது அருமையான, கிடைத்தற்கரிய சொத்தாகும்" எனவும் வீரதுங்க குறிப்பிடுகிறார்.

காணி, பொலிஸ் அதிகாரப் பகிர்வு விடயங்கள் விவாதிக்கப்பட வேண்டியவையாக உள்ளன எனவும், இது தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக் குழு விவாதித்து உடன்பாடு ஒன்றை எட்டுவதே சிறந்தது எனவும் ஜனாதிபதியின் செயலர் கருதுகின்றார்.

# 'ஹலோ ஹலோ' என்ற மாணவி வடிக்கிறாள் கண்ணீர்...

■ பரமேஸ்வரன்
(ஆசிரியர்)

அண்மைக் காலமாக எந்த பத்திரிகையை எடுத்தாலும் எந்த மாவட்டத்திலும் சரி பெண்கள் பாலியல் இம்சைக்கு உள்ளாதல், பதின்ம வயதில் கருத்தரித்தல் என்ற செய்திகளைப் பார்க்க முடிகிறது. இன்றைய சமூகத்தில் இது பெரும் பிரச்சினையாகி விட்டது.

இந்த விடயத்தில் ஆசிரியர்களாகிய எமக்கும் பெரும் பங்குண்டு. பிள்ளைகள் பாடசாலையிலேயே அதிக நேரத்தைச் செலவிடுகிறார்கள். எனவே மாணவர்களையும் மாணவியரையும் ஒழுக்கமுள்ளவர்களாக வளர்த்து ஒரு நல்ல குடிமக்களாக வெளியேற்றுவது ஆசிரியர்களினதும் அதிபர்களினதும் பொறுப்பு.

பாலியல் இம்சையால் பெரும்பாலான மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்பதை புள்ளிவிவரங்கள் நிதர்சனமாக்குகின்றன. தமது மாணவர்கள் பாலியல் இம்சைக்கு உள்ளாகக் கூடும் என்ற ஏது நிலையைச் சில ஆசிரியர்கள்கூடக் கண்டும் காணாது விட்டு விடுகிறார்கள். இது ஆசிரியருக்குரிய பண்பல்ல.

வளர்ந்த மாணவர்களிடம் கைப்பேசியின் பாவனை அதிகரித்திருக்கிறது. ஒவ்வொரு பெற்றோரும் அதை வாங்கிக் கொடுக்கும்போது தம் மகனிடம் மகளிடம் நச்சு மருந்தை கொடுக்கிறோம் என்பதை உணர்வதில்லை.

பிள்ளைகளின் கையிலிருக்கும் கைப்பேசி பாவனையை நிறுத்துவதே பெரும்பாலான பிரச்சினைகளைத் தீர்த்துவிடும். அண்மைக் காலத்தில் நான் நேரில் பார்த்த ஒரு பரிதாப நிலையை எழுதுகிறேன்.

எனது முன்னைய பாடசாலையைச் சேர்ந்த மாணவியை வைத்தியசாலையில் மயக்க நிலையில் திடீரென்று கண்டேன். எனது மாணவி என்றபடியால் நேரில் போய் கதைத்தேன். அவளின் ஒவ்வொரு கண்ணீர் துளியும் ஏதோ ஒன்றை எனக்குக் கூறின. ஆனால் அவள் மனதில் உள்ளதை எனக்கு மறைப்பது போலத் தோன்றியது. அப்படியிருந்தும் அவள் இறுதியாக சொன்ன வார்த்தை "உருத்திரபுரம், கிளிநொச்சியை சேர்ந்த நிமால் என்ற 0775...536/ 0770...138 தொலைபேசி இலக்கம் என்னைக் காதலித்தார். தற்போது என்னுடன் கதைக்க மறுக்கிறார்". இதுதான் அவள் சொன்னவை.

அந்த மாணவியின் ஒவ்வொரு வார்த்தையையும் கேட்டபோது அவளைத் திட்ட வேண்டும் என்றுகூடத் தோன்றவில்லை எனக்கு. "அந்தத் தொலைபேசி எண்ணுடன் ஒருக்காற் கதை" என்று சொன்னேன். நான் சொன்னதற்காக அந்தத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அவள் அழுதழுது கதைத் [illegible] அவளை அவமதிப்பதாகவே இருந்தன.

"அவனைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?" என்று கேட்டேன். அதற்கு, "அவர் உருத்திரபுரத்தைச் சேர்ந்த தர்சினி என்பவளைத் தான் காதலிப்பதாக சொன்னார்" என்று சொன்னாள்.

மருத்துவமனையில் அந்த மாணவியைச் சந்தித்த 2 மாதங்களின் பின் அதே மாணவியை பேருந்தில் கண்டேன். அப்போதுகூட அவளின் கண்களிலிருந்த கண்ணீர் துளியே என்னை வரவேற்றது.

பாதிக்கப்பட்ட மாணவி உயிரியல் பிரிவில் கல்வி கற்பவள். யாழ் மாவட்டத்தை சேர்ந்த மாணவி என்பதால் யாழ். மாவட்ட அரச அதிபருக்குக்கூட உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட்டது. இது நான் நேரில் சந்தித்த ஒரு பெண் பிள்ளையின் பரிதாபகரமான சம்பவம்.

ஒவ்வொரு பெண் மக [illegible] ஆண் [illegible] யே பிறக்கிறாள். கதை அறியாத ஆண் நச்சு பாம்புகள் தங்களின் கொலை வெறி பெண்களை இரையாக்குகின்றன. உண்டு முடித்த பின் அவை பெண் பிள்ளைகளைத் தூக்கி வீசி விடுகின்றன.

இவ்வாறு பெண்பிள்ளைகளை காதலிப்பதாக நடித்து ஏமாற்றும் ஆண்கள் தமது தாயும், சகோதரிகளும் உறவுகளும் பெண்கள் என்பதை மறந்துவிடுகிறார்கள். நாளை தங்களுக்கே ஒரு பெண் பிள்ளை பிறக்கக்கூடும் என்பதையும் அதையும் இப்படி எவனாவது சீரழித்து விடுவான் என்பதையும் எண்ணிப் பார்க்கத் தவறிவிடுகிறார்கள். புத்தகம் சுமக்கும் வயதில் மாணவிகளைக் கருவைச் சுமக்க வைத்த எந்த ஓர் ஆணும் நல்லவிதமாகப் பிறந்திருக்க வாய்ப்பே இல்லை.

இத்தகைய ஆண்களிடம் இருந்து அப்பாவிப் பெண் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் அவசியமும் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் உண்டு.

சமூகத்தில் மாணவர்களை நல்ல குடிமக்களாக மாற்றுவதில் பெற்றோர்களை விட ஆசிரியர்களும் அதிபர்களும் அதிக கவனம் செலுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம். ஆசிரியர்கள் மாணவன்களுடனும் மாணவிகளுடனும் நட்புறவுடன் பழகி பல விடயங்களை அவர்களுக்குப் பக்குவமாகப் புரிய வைக்க வேண்டும். ஒவ்வொரு மாணவியையும் நச்சு கொலைவெறி பாம்புகளிடமிருந்து பாதுகாக்க வேண்டியது பெற்றோர், ஆசிரியர்களின் தலையாய கடமை. ஒரு தந்தையை அல்லது தாயை மீறிய பொறுப்பு ஆசிரியர்களுக்கு இருக்கிறது. ஒவ்வொரு பிள்ளையையும் உங்கள் பிள்ளை போல் நேசியுங்கள். எனது பழைய பாடசாலையின் அந்த மாணவி இப்போது படிக்கக்கூட இயலாத நிலைக்கு தள்ளப்பட்டு விட்டாள். இந்த ஓர் உதாரணம் பலவாகி விடுவதற்கு முன்னர் எல்லோரும் சேர்ந்தே அணை கட்டுவோம். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற வேண்டியவை மனோபாவங்கள்

விநாயகர் சதுர்த்தி விழா. வீட்டில் ஒரே கோலாகலம். மகளை அழைத்துத் தோட்டத்தில் இருக்கும் சாணத்தைக் கொண்டுவரச் சொன்னாள் அம்மா. அதனை இரண்டு கைகளிலும் அள்ளிக் கொண்டு வந்த மகளைப் பார்த்து "இவ்வளவும் எதற்கு?" என்று அங்கலாய்த்தபடி கொஞ்சமாகப் பிடித்து வைத்து "மீதியை வெளியில் எறி" என்றாள். பிடித்து வைத்த பிள்ளையாருக்கு மஞ்சளும் குங்குமமும் வைத்துக் "கும்பிடு... பிள்ளையாரைக் கும்பிடு" என்றாள் அம்மா.

கொண்டு வந்ததும் சாணகம். வெளியே எறிந்ததும் சாணகம். பிடித்து வைத்தது மட்டும் எப்படிப் பிள்ளையார் ஆனது? சாணகம் எப்படிக் கடவுள் ஆனது? பதவி உயர்வு எப்படி வந்தது? பாவனை.... பாவனை.... பாவனை தான் காரணம். சாணகம் கடவுளாகலாம் என்றால் ஆசாமி சாமியாக முடியாதா? ஏன் முடியாது? அப்படி மனிதனைச் சமைக்கும் முயற்சிதான் சமயம்.

இறைவழிபாட்டை முறையாகச் செய்ய மூன்று விஷயங்கள் முக்கியம். மந்திரம், கிரியை, பாவனை அவையே அந்த மூன்றும். ஜெபிப்பது மந்திரம். சில முத்திரைகளைப் கையால் காட்டுவது கிரியை. கல்லையோ செம்பையோ கடவுளாகப் பாவனை செய்து வழிபட்டால் வழிபாடு முழுமையாகிறது.

வழிபாட்டில் மந்திரம் முக்கியம்தான். ஆனால் மனோலயம் இல்லாத மந்திரபூசை வெறும் எந்திர வேலை. சிலர் பூசை செய்தால் மணிக்கணக்காகப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்... மனோலயம் அப்படி. அவர்கள் அபிஷேகம் செய்யும் போது குழந்தையைக் குளிப்பாட்டும் தாய்மைத்துவம் இருக்கும். அலங்காரம் செய்யும் போது காதலியின் தாபம் தலை எடுக்கும். நைவேத்தியம் செய்யும் போது, அன்னத்துடன் அன்பைக் குழைத்துப் படைப்பார்கள். உணவை ஊட்டி, பட்டுத் துணியால் சுவாமியின் வாயைத் துடைக்கும் போது கல்லாய் நிற்கும் நாத்திகன் கூட, கையை உயர்த்திக் கும்பிடுவான். கோவை கௌமார மடம் சுந்தரம் சுவாமிகள் பூசைசெய்யும் போது இந்த அநுபவம் எனக்கே உண்டு. இந்தப்பாவனைதான் உருவ வழிபாட்டின் ஜீவரகசியம்.

அது ஒரு மழைக்காலம். குளங்களும் கிணறுகளும் பக்தர்கள் மனம் போல் குளிர்ந்திருக்கும் நல்லகாலம். அந்த மழையிலும் நாட்டு நிலவரத்தை நன்கறிய நடந்தே வருகிறார் பாண்டிய மன்னர். பகலே இரவாக இருக்கும் அந்த மழைநாளில் , நிஜமான இரவு தலை எடுக்கும் அந்தி நேரம்.

குளக்கரை வழியாக அடிமேல் அடி வைத்து நடக்கிறான் மன்னர் மன்னவன்; தமிழ் வளர்க்கும் தென்னவன்; வரகுண பாண்டியன் என்ற சிவபக்தன். அப்போது அந்தக் குளக்கரை முழுவதும் 'கரபுர' 'தளபுள' என்று தவளைக் குலத்தின் சப்த ஜாலம். எப்போதும் கூர்மையான மன்னவன் செவிகள் , இன்னும் கூர்மை ஆயின. அவன் கண்களில் கண்ணீர் கவிதை எழுதியது.

அந்திப் பொழுதல்லவா? அவன் விழித் தாமரைகள் விரைந்து குவிந்தன. கரங்களாகிய தாமரைகளும், கடவுள் வணக்கம் செய்தன; உதடுகள் ஏதோ உச்சரித்தபடி நடு நடுங்கின; காலம் கரைந்தது.

உடன் வந்த அமைச்சர்களும் அதிகாரிகளும் அரசர் வழிபாட்டை அவமதிக்கக் கூடாதே என்று ஈர மழையில் அமைதியாய் நனைந்தனர். சிறிது பொறுத்து விழி மலர் திறந்த வரகுண பாண்டியன்; வாய் மலர் திறந்து உத்தரவிட்டான்.

"அமைச்சரே.... கேழ்வரகும், அரிசியும், தானியங்களும் நிறைய நிறையக் கொண்டு வந்து இந்தக் குளத்தில் கொட்டுங்கள்."

அதிர்ச்சியை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அமைச்சர் "உத்தரவு அரசே" என்று சொல்லிச் சிறிது கழித்து "குளத்தில் தானியங்களைக் கொட்டும் காரணம் என்ன என்று தெரிந்து கொள்ளும் தகுதி எங்களுக்கு இருந்தால் தெரிவிக்க வேண்டும்" என்று இழுத்தார்.

அரசன் மொழிந்தான். "சிவனடியார்கள் பசியோடு இருக்கலாமா? ஆண்டவன் அடியவர் பசி தீர்ப்பது ஆள்பவன் பிறவிக்கடமையல்லவா?" அமைச்சருக்குத் தலை சுற்றியது.

"அடியார்களா? குளத்திலா... புரியவில்லையே..." என்றார். "இந்தக் குளத்தில் கூடி நின்று தவளைகள் இறைநாமம் சொல்லி ஜெபித்ததைத் தாங்கள் கேட்கவில்லையா"

அமைச்சருக்குத் தலையும் புரியவில்லை... காலும் புரியவில்லை!

அரசர் தொடர்ந்தார். "ஹரஹர... ஹர ஹர என்று சிவபெருமானைத் தவளைகள் துதித்த இன்ப நாதம் உங்கள் செவிகளில் விழவில்லையா? ஹர ஹர என்பவர் யாரானாலும் சிவனடியார் அல்லவா?"


மன்னர் மனநிலை மந்திரிக்குப் புரிந்தது. கரபுர என்று தவளைகள் கத்தியமை ஹர ஹர என்று சிவபக்தனுக்குக் கேட்டிருக்கிறது. காரணம் மனோபாவம். இது வரகுண பாண்டியன் பெற்ற வரம்.

ஸ்ரீ வில்லிபுத்தூரில் ஆழ்வார் மகளாக வளர்ந்த ஆண்டாள், ஆயர்பாடியில் இடைக்குல மடந்தையாகத் தன்னை இதயபூர்வமாக பாவனை செய்தாள். அவளது ஆனந்த அனுபவத்திற்கு திருப்பாவையே அத்தாட்சி. நாயக நாயகி பாவத்தில், ஆண்டவனில் தன்னை இழந்த அனுபவம் ஆழ்வார்களுக்கும், நாயன்மார்களுக்கும் உண்டு. பாவனை இல்லாத வழிபாடு ருசியே இல்லாத சாப்பாடு. நமது வாழ்கை மேன்மையுற வேண்டுமெனில் நமது மனோபாவம் மாறினால் தான் சாத்தியமாகும்.

சீதையை எப்படியாவது அடைய வேண்டும் என்று இராவணனுக்கு ஆசை. அது நிறைவேறவே இல்லை. இராவணன் ஆலோசனை கேட்டான். அமைச்சர் சொன்னார். "நீங்கள் இராவணனாக இருக்கும்வரை இதற்கு வாய்ப்பே இல்லை... இராமனாக மாறுங்கள்.. மாயையால்.. ஆசை நிறைவேறும்" என்றார். விரக்தியாகச் சிரித்தான் இராவணன்.

"இராமனைப் போலவே நீலமேனி... தாமரைத் தடக்கை. வில்லேந்திய வீரத் தோள்கள். மரவுரி.... ஜடாமுடி, யாவும் பெற்றேன். என்னை இராமனாகப் பாவனை செய்தேன். தவறு செய்ய வேண்டும் என்ற எண்ணமே என்னைவிட்டு நீங்கிவிட்டது. தீய எண்ணமே என் மனத்தில் இல்லாமல் போனது."

உண்மை. வாழ்க்கை மாற வேண்டும் என்றால் மனோபாவங்கள் மாறியாக வேண்டும்.



சுகி. சிவம்

# இலவசக் கல்விப் போதனையை வழங்கும் மானிப்பாய் சத்தியசாயி பாடசாலை



இயற்கை அன்னை அள்ளித் கொடுத்த கொடைளதின் அழகை மெருகூட்டச் செய்து கொண்டிருப்பது ஒவ்வொரு பிரதேசங்களிலும் உள்ள பிரசித்தி பெற்ற இடங்களே என்றால் அது மிகையாகாது.

அபிவிருத்தி வளர்ச்சியினால் இத்தகைய இடங்கள் மாற்றம் பல ஏற்பட்டது. அதன் பணிகளும் செய்யப்படும் சேவைகளும் மாற்றமடைவதில்லை.

யாழ்.மாவட்டத்தில் வலிகாமம் தெற்குப் பிரிவில் அமைந்துள்ள சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள மானிப்பாய் எனும் நகரத்தின் அழகையும்,மதிப்பையும் வெளிப்படுத்திக்கொண்டிருப்பது அங்குள்ள பாடசாலைகளும் ஆலயங்களும் ஆகும்.

மானிப்பாய் நகரில் சிறந்த கல்விமான்களை உருவாக்கிய பெருமை இங்குள்ள பாடசாலைகளையே சாரும். அந்த வகையில் யாழ்.நகர் எல்லையில் இருந்து பன்னிரண்டு கிலோமீற்றர் தொலைவில் மானிப்பாய் பிரதான வீதியிலிருந்து இடது புறமாகவுள்ள நவாலிக் கிராமத்துக்குச் செல்லும் சோதி வேம்படி வீதியில் 150 மீற்றர் தூரத்தில் கடந்த 10 வருங்களாகக் கல்விப் பணியை ஆற்றி வருகின்றது. " சத்தியசாயி பாடசாலை"

ஏழை மாணவர்களின் கல்விக்காக அளப்பெரும் சேவையாற்றிய பகவான் ஸ்ரீ சத்தி சாயி பாவாவின் வழிகாட்டலில் மானிப்பாய் எனும் அழகிய கிராமத்தில் உருப் பெற்றுள்ளது இந்தப் பாடசாலை .

1990 ஆம் ஆண்டு மானிப்பாய் சத்திய சாயி நிலையத்தினர் நிர்வாகத்தை நடத்தி வந்தனர் அந்தப் பிரதேசத்தின் ஏழை மாணவர்களுக்கு, குறிப்பாக சாயி பக்தர்களுக்கு இலவசமாகக் கல்விப் போதனையை வழங்க வேண்டும் என எண்ணிக் கொண்டனர்.

அதற்கமைய அதே ஆண்டு காலப்பகுதியில் சத்திய சாயி பாடசாலை ஒன்றை நிலையம் இருக்கும் இடத்தில் ஆரம்பித்து நடத்தி வந்தனர்.

நவாலி, ஆனைக் கோட்டை, சண்டிலிப்பாய் என்று அயல் கிராமத்தில் உள்ள சாயி பக்தர்களின் பிள்ளைகள், இந்தப் பாலர் பாடசாலையில் தமது கல்வியைத் தொடர பெற்றோர்கள் இணைந்துக் கொண்டனர்.

**மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் ஆசிரியர் வளமும் இந்தப் பாடசாலையில் காணப்படுவது கற்றலை இன்னும் தரமுயர்த் துவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது.**

இதனால் நிலையத்தின் பணி சத்திய சாயி பாபாவின் ஆசியுடன்பரவலடையத் தொடங்கியது. பாலர் பாடசாலை மாணவர்கள், ரம்மியமான அமைதிச் சூழலில் தமது கற்றல் நடவடிக்கைகளைத் தொடர்ந்தனர். அதனைத் தொடர்ந்து சாயி பக்தர்களின் ஆர்வத்தினாலும், தேவையினாலும், பாலர் பாடசாலையை ஆரம்பப் பாடசாலையாக தரமுயர்த்துவதென நிலையத்தின் நிர்வாகத்தினால் தீர்மானிக்கபட்டது.

2003 ஆம் ஆண்டு தை மாதம் ஆறாம் திகதி தரம் 1 இற்கான வகுப்புக்கள் 25 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. சிறுவயது முதலே மாணவர்கள் சாயி போதனைகளையும், சிந்தனைகளையும் கேட்டு சிறந்த ஒழுக்க சீலர்களாகத் தம்மை வழிப்படுத்த இந்த நிலையம் பேருதவி செய்தது. இந்த ஆரம்பப் பாடசாலையில் பயிலும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளையும் இறைபக்தியையும், சிறந்த நற்குணங்களையும் கேள்வியுற்று பிரதேச மக்கள் தமது பிள்ளைகளையும் சேர்த்துக்கொள்ள ஆர்வப்பட்டனர்.

தமது விருப்பங்களை நிலையத்துக்குச் செல்வோர் அங்குள்ள நிர்வாகத்தினரிடம் முன்வைத்தனர். அத்துடன் தரம் 1 இல் பிள்ளைகளை இணைத்துக் கொண்ட பெற்றோர் தமது பிள்ளைகள் தொடர்ச்சியாக அதே பாடசாலையில் கற்க வேண்டும் எனவும் நினைத்தனர்.

இதற்கமைய பாடசாலையில் கற்கும் மாணவர்களின் கற்றல் ஆர்வத்தை அபிவிருத்திசெய்யும் நோக்குடன் வருடாவருடம் பாடசாலையில் வகுப்புக்கள் அதிகரிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து 2011 ஆம் ஆண்டு தரம் ஒன்பது வரையும் இந்த வருடம் தரம் 10 வரையும் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வகுப்பிலும் 25 மாணவர்கள் மட்டும் உள்வாங்கப்பட்டு சிறந்த கல்வி ஊட்டல் நடவடிக்கைகள் இந்தப் பாடசாலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றாற் போல் ஆசிரியர் வளமும் இந்தப் பாடசாலையில் காணப்படுவது கற்றலை இன்னும் தரமுயர்த்துவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது.

2003 ஆம் ஆண்டு முதல் தற்போதைய பாடசாலைக் கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை, ஒரு தனியார் பாடசாலையாக, இலவசக் கல்வியைப் போதிக்கும் பாடசாலையாக மானிப்பாய் நகரில் இன்று ஒளிர்வடைந்து காணப்படுகின்றது. சாயி பாபாவின் பக்தர்களின் சிறந்த முயற்சியால் உருவாக்கப்பட்ட இந்தப் பாடசாலை வளர்ச்சி பெற்றமைக்கு முக்கிய காரணமே இலங்கை மற்றும் வெளிநாடுகளில் வதியும் சாயி பக்தர்கள் என்றால் அது மிகையாகாது.

25 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலையில் தற்போது 178 மாணவர்கள் கல்வி பயில்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆண்கள், பெண்கள் என கலவன் பாடசாலையாக உள்ள இந்தப் பாடசாலையில் மாணவர்களின் வளங்களுக்கு ஏற்றாற் போல் அதிபர் உட்பட 18 ஆசிரியர்கள் கற்றல் சேவையை வழங்கி வருகின்றார்கள்.

தரம் 1முதல் தரம் 5 வரை தமிழ் மொழிப் பாடத்திட்டங்களும், தரம் 6 முதல் தரம் 10 வரை ஆங்கில மொழிப்பாடத் திட்டங்களும் இந்தப் பாடசாலையில் கற்பிக்கப்பட்டு வருகின்றன. மானிப்பாய் பிரதேசத்தில் இது ஓர் ஆங்கிலக் கல்விக்கு உரமூட்டுவதாகத் திகழ்வது பாடசாலையின் அபிவிருத்தியை மேலும் உயர்வடையச் செய்யவுள்ளது.

கல்விப் புலமையில் அதி சிறந்து விளங்கும் மானிப்பாய் பிரதேச மக்களுக்கு, இந்தப் பாடசாலை சேவை பயனுள்ளது என்றே கூறவேண்டும். மாணவர்கள் சிறு வயது முதல் ஆங்கில மொழித் திறமை கொண்டவர்களாகத் திகழ்வதற்கு சான்றாக அமைந்துள்ளது.

இந்தப் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களில் 9பேர் நிரந்தரமாகவும், 8 பேர் பகுதி

**சோபனா**

நேரமாகவும் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஆசிரியர்களின் கற்றல் புலமையையும்,சேவையையும் ஊக்குவிக்கும் நோக்குடன் பாடசாலை நிர்வாகத்தினால் அனைத்து ஆசிரியர்களுக்கும் ஊழியர் சேமலாப நிதியில் பணம் வைப்பிலிடப்பட்டு வருகின்றது.

தனியார் பாடசாலைகள் வெறும் பணத்துக்காகவும் பெயருக்காகவும் சேவை வழங்கி வரும் நிலையில் சாயிபாபாவின் வழிகாட்டலில் இலவசக் கல்விப் போதனையும், மாணவர்கள் ஆசிரியர்களின் இதர நலன்களில் அக்கறை கொண்டுசேவையாற்றும் நிலை இந்த பாடசாலையை மேலும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்கின்றது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றங்கள் இந்தியா மௌனம்

கொழும்பு,ஜன.27

இலங்கையில் நிகழ்ந்த போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணைக்கு ஆதரவு தெரிவிக்கக்கூடிய வாய்ப்புகளை இந்தியா தவற விட்டுள்ளது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

உலகின் 90 நாடுகளின் மனித உரிமைகள் பற்றி, மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஆய்வறிக்கையில் இந்தியா தொடர்பிலான ஆய்விலேயே இவ்வாறு தெரிவித்துள்ளது.

**இலங்கையில் நிகழ்ந்த போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணைக்கு ஆதரவு தெரிவிக்கக் கூடிய வாய்ப்புகளை இந்தியா தவற விட்டுள்ளது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றஞ்சாட்டியுள்ளது.**

வெளிநாடுகளில் நிகழும் மனித உரிமை மீறல்களைத் தட்டிக் கேட்கும் தலைமை வகிப்பதற்கு ஐ.நாவின் பாதுகாப்புச் சபை மற்றும் மனித உரிமைகள் பேரவை இரு அமைப்புகளில் உள்ள தனது உறுப்பினர் அந்தஸ்தை சரியான முறையில் பயன்படுத்த இந்தியா தவறிவிட்டது. சிரியா போன்ற நாடுகளில் நிகழ்ந்த கொடூரங்கள் விடயத்தில் இந்தியா மௌனமாகவே இருந்துவிட்டது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (ச)

# தேசத்துக்கு மகுடம்

## 50 பாடசாலைகளுக்கு மூடுவிழா

கொழும்பு,ஜன.27

தேசத்துக்கு மகுடம் கண்காட்சி மற்றும் சுதந்திர தின கொண்டாட்டம் என்பவற்றை முன்னிட்டு அநுராதபுரம் மாவட்டத்தில் 50 பாடசாலைகளை மூடிவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை தொடக்கம் இந்தப் பாடசாலைகள் மூடப்படும் என்று வட மத்திய மாகாண முதலமைச்சர் பேர்ட்டி பிரேமலால் திஸாநாயக்க தெரிவித்தார்.

அநுராதபுரம் பிரதான கல்வி வலயத்துக்கு உட்பட்ட 50 பாடசாலைகள் தற்போது மூடப்பட்டுள்ளதாகவும், தேவை ஏற்படின் ஏனைய பாடசாலைகளையும் மூட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

**தேசத்திற்கு மகுடம் கண்காட்சி மற்றும் சுதந்திர தின கொண்டாட்டம் என்பவற்றை முன்னிட்டு 50 பாடசாலைகளுக்கு மூடுவிழா.**

பாடசாலை மூடுவதன் மூலம் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பாதிப்பு இல்லை. இந்த ஆண்டு முதலாம் தவணை முன்கூட்டியே ஆரம்பிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-301)

## வீதி விபத்து 4 பேர் சாவு

கொழும்பு,ஜன.27

களுத்துறையில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் நான்கு பேர் பலியானதுடன் 7 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த வான் ஒன்று தீப்பற்றிக்கொண்டபோது அதில் இருந்த இரண்டு சிறுவர்கள் மற்றும் இரண்டு பெண்கள் பலியாகியுள்ளனர்.

காயமடைந்த நபர்கள் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் விபத்துக்கான காரணம் குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)


## நீர்ப்பாசனக் குளங்களை புனரமைக்க வேண்டும்

வடக்கில் உள்ள நீர்ப்பாசனக்குளங்கள் மற்றும் நீர் வடிகால்கள் புனரமைக்கப்படவேண்டும் என்று ஜே.வி.பி கோரியுள்ளது. யு.எஸ்.எய்ட் நிறுவன அதிகாரிகளிடம் ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து யு.எஸ்.எய்ட் அதிகாரிகளுடன் கடந்த செவ்வாய்க்கிழமை கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடபகுதியில் நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் அபிவிருத்திகள் என்பவற்றில் அரசியல்வாதிகளினால் ஊழல்களும், முறைகேடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கு இடம்தராத வகையில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மக்களுக்கு உரிய வீடமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)



இந்தியாவின் 63ஆவது குடியரசு தினத்தையொட்டி கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் இந்திய தூதர் அசோக் கே.காந்தா இந்தியக் கொடி ஏற்றுகிறார்.

# மகஸின் கலவரத்தில் தமிழ்க் கைதிகளுக்கு தொடர்பில்லை

கொழும்பு,ஜன.27

மகஸின் சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதல் சம்பவத்துடன் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்புபடவில்லை. அவர்களுக்கு எதுவித பாதிப்பும் இல்லை. தற்போது நிலைமை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்று கொழும்பு தெற்கு பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சீவ தர்மரட்ண தன்னிடம் தெரிவித்தார் என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவர் பிரபா கணேசன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகஸின் சிறைச்சாலைக்கு வரும் உறவினர்களின் பொதிகளை கடுமையாக சோதனை செய்ததன் விளைவாக ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே கைதிகளுக்கும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது.

கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சில் தமது இருப்பிடங்களும் பாதிக்கப்பட்டுள்ளன என தமிழ் அரசியல் கைதிகள் என்னிடம் தெரிவித்தனர். அதேவேளை, தம்மையும் இந்த நடவடிக்கையில் பங்குபற்றுமாறு ஏனைய கைதிகள் அழைத்தும் தாம் அதில் பங்குபற்றவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர். அதனால் தமக்கு பாதுகாப்பு ஏற்பாடு செய்து தருமாறும் வேண்டுகோள் விடுத்தனர். இது சம்பந்தமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன - என்றார். (ச-சி)

## லஞ்சம் பெற்ற பிரதேச சபை ஊழியர் கைது

கொழும்பு,ஜன.27

சமுர்த்தி அபிவிருத்தி சங்கத்தின் தலைவரிடம் லஞ்சம் வாங்கிய ஹொரவ பொத்தானை பிரதேச சபை அலுவலக ஊழியர் ஒருவர் லஞ்ச ஊழல் ஒழிப்புப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தேசத்துக்கு மகுடம் என்ற தேசிய வேலைத் திட்டத்துக்கு அபிவிருத்தித் திட்டம் ஒன்றை பெற்றுத் தருவது தொடர்பில் 23,000 ரூபா பணத்தை இவர் லஞ்சமாகப் பெற்றுள்ளார்.

இந்தத் திட்டத்தை நிறைவேற்ற குறித்த அரச அதிகாரி சமுர்த்தி அபிவிருத்தி சங்க அதிகாரியிடம் இதற்கு முன்னர் 25000 ரூபாவை லஞ்சமாகப் பெற்றுள்ளார்.

இந்த நபர் அநுராதபுரம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## புதையல் தோண்டிய இருவர் கைது

கொழும்பு,ஜன.27

மதவாச்சி - நெரியகுளம் சியம்பலாவெவ பிரதேசத்தில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று வியாழக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து உபகரணங்கள் சில கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# சிறைச்சாலையில் கலவரம் ரூ.80 லட்சம் சொத்து இழப்பு

கொழும்பு,ஜன. 27

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கலவரத்தில் 80 லட்சம் ரூபா சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலையில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற கலவரம் குறித்து விசாரணை நடத்த குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

**இந்தக் கலவரம் குறித்து விசாரணை நடத்துவதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டு உள்ளதாக சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.**

இந்தக் குழுவில், புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர், சட்ட ஆலோசகர் உள்ளிட்ட சிலர் அடங்குவதாக அவர் தெரிவித்தார்.

சிறைச்சாலைக் கட்டடத்துக்கு கைதிகள் தீ வைத்ததையடுத்து, சிறைக் கைதிகள் சிலரின் முக்கிய ஆவணங்கள் அழிந்து போயுள்ளன என்று அவர் தெரிவித்தார். (ச)

# திறமையான கல்லூரி மாணவியை யாழ்ப்பாணத்தில் சந்தித்தேன்

## இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் புகழாரம்

கொழும்பு, ஜன.27

நான் யாழ்ப்பாணத்துக்கு சென்று இந்துக் கல்லூரி மாணவர்களைச் சந்தித்து உரையாடியபோது வேறு பாடசாலை மாணவி ஒருவர், பொறுப்புள்ள நபராகத் திகழ நாம் என்ன செய்ய வேண்டும் என என்னிடம் கேள்வி எழுப்பினார் என்று இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களை கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்து உரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த மாணவி தொடுத்த வினாவுக்கு பதிலளித்த



நான் அந்தப் பதிலைத் திருப்பிக் கூறுமாறு தெரிவித்தேன்.

உடனடியாக அவர் அதனை திருப்பிக்கூறினார். யாழ்ப்பாணத்தில்தான் அவ்வாறு மிகத் திறமையான மாணவியை நான் சந்தித்தேன்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் இந்துக் கல்லூரியில் சந்தித்து உரையாடிய மாணவர்களின் திறமை தொடர்பாகவும் புகழாரம் சூட்டினார்.

இந்துக் கல்லூரிக்குச் சென்றபோது ஆறு மாணவர்கள் கேள்விகளை எழுப்பினர். அதில் மாணவன் ஒருவன் ஐயா நீங்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்ததையிட்டு நான் மிகவும் பெருமையடைகின்றேன். உங்களைப் போன்று நானும் வரவேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் என்று வினவினான்.

அந்த மாணவனது இந்தத் திடீர் வினா சபையார் அனைவரையும் கவர்ந்ததுடன் பலரது கரகோசத்தையும் பெற்றது. அதற்கு கடின உழைப்பாளியாகவும் இலட்சிய தாகமுடையவனாகவும் நேர்மையாளனாகவும் விடாமுயற்சி உடையவனாகவும் இருந்தால் உனது வெற்றியை யாராலும் தடுக்க முடியாது - என்றார்.(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சுதந்திர தினமன்று ஜேர்மனியில் கவனயீர்ப்பு நிகழ்வுகள்

இலங்கையின் சுதந்திர தினத்தைக் கண்டித்து ஜேர்மனியில் இலங்கைத் தூதரகத்தின் மற்றும் துணைத் தூதரகத்தின் முன்னால் கண்டன கவனயீர்ப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இதுகுறித்து புலம்பெயர்வாழ் தமிழர்கள் விடுத்த அறிக்கையில் தெரிவித்ததாவது:

இலங்கை சுதந்திரம் பெற்ற தினத்திலிருந்து தமிழினம் சுதந்திரத்தை இழந்து நிற்கின்றது. 64ஆவது சுதந்திர தினத்தை இலங்கை கொண்டாடவிருக்கும் இந்த நாள்களில் ஈழத்தமிழர்கள் இன்றும் மரணப்போராட்டத்தில் நிற்கின்றனர்.

இரத்தக்கறை படிந்த நாள்களாகவும் தூக்கமின்றிய இரவுகளாகவும் நாள்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. உலகத் தமிழினமே உறவுகளின் அழுகுரலோடு கடந்து செல்லும் இந்தநாள்களைக் நாம் வெறுமனே எண்ணிக் கொண்டிருந்தால் எங்கள் உறவுகளின் சமாதிகள் ஒன்றையும் கூட சிங்களபேரினவாதம் விட்டுவைக்கப் போவதில்லை.

நாம் அனைவரும் ஒரு முக்கியமான காலகட்டத்தில் எமது வரலாற்றுக் கடமையைச் செய்ய வேண்டிய தருணத்தில் நிற்கிறோம். புலம்பெயர் தமிழர்களின் கைகளில் முக்கியமான பணி ஒன்று ஈழத்தில் வாழும் எங்கள் உறவுகளால் தரப்பட்டிருக்கிறது.

நாம் வாழும் ஒவ்வொரு நாடுகளிலும் பெப்ரவரி 4 ஆம் திகதியை கறுப்புதினமாக முன்னெடுத்து உலகின் கண்களில் உண்மையைக் எடுத்துச் சொல்வோம். நாம் ஒவ்வொரு தமிழனும் எமக்காய் குரல் கொடுக்கின்றபோதுதான் எமது தேசத்தின் விடுதலை சாத்தியமாகும்.

எம் இனத்தை முழுமையாகத் துடைத்தழிப்பதற்காய் எத்தனையோ வஞ்சகங்களையெல்லாம் இலங்கை அரசு தயங்காமல் செய்கின்றது. தமிழனின் வாழ்வா, சாவா என்ற போராட்டத்தில் எமது பலம் தான் உறவுகளின் உயிரின் இருப்பை நிர்ணயிக்கப் போகின்றது.

எத்தனையோ இடர்மிகுந்த பொழுதுகளிலெல்லாம் எம்மை எமது போராட்டம் தான் காப்பாற்றி வந்திருக்கின்றது. ஆனால் இன்றோ மிகுந்த நெருக்கடியான ஓர் சூழ்நிலையில் இமயவரம்புகளில் நின்று எம்தேசம் போராடிக் கொண்டிருக்கின்றது. பாரெங்கும் வாழும் தமிழர்களே வரலாற்றுக் கடமை எம் ஒவ்வொருவரையும் அழைக்கின்றது.- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருவாசக விழா

ஸ்ரீ சபாரத்தின சுவாமிகளின் 24ஆவது குருபூசையும் திருவாசக விழாவும் எதிர்வரும் 30ஆம் திகதி மாலை 5 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் சி.தியாகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக இந்துகலாசாரத் திணைக்கள முன்னாள் பணிப்பாளரும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளரும் பொதுச்சேவைகள் ஆணைக்குழு உறுப்பினருமான உடுவை தில்லை நடராசாவும்,கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் சாந்திநாவுக்கரசன், பொன்னம்பலவாணேச்சர தர்மகர்த்தாவும் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.எம்.சுவாமிநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (வ)

## தத்தளித்த இலங்கை மீனவர்கள் மீட்பு

குளச்சல் அருகே கடலில் தத்தளித்த, நான்கு இலங்கை மீனவர்களை இந்திய மீனவர்கள் காப்பாற்றியுள்ளனர்.

குளச்சலை அடுத்த வாணியக்குடியைச் சேர்ந்த, ரஞ்சித்குமார் இவர், சக மீனவர்களுடன், மீன் பிடிக்கச் சென்றிருந்தார். நடுக்கடலில், ஒரு படகு உடைந்து, நான்கு பேர் தத்தளிப்பதைப் பார்த்த ரஞ்சித்குமார், அந்தப் பகுதிக்குச் சென்று, நான்கு பேரையும் மீட்டு, தன் படகில் ஏற்றினார்.

அவர்களிடம் கேட்டபோது, இலங்கையின் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அபுபக்கர் அப்துல் ரஹீம், முகமது பகதூர் ரகீம், பஷீர், முகம்மது இஸ்மாயில் என்பதும் தெரியவந்தது. இதுபற்றி ரஞ்சித்குமார், பொலிஸாருக்குக் கொடுத்த தகவலின்படி, கடலோரக் காவல் படை பொலிஸார் நான்கு பேரிடமும் விசாரணை நடத்தி வருகின்றனர். (வ)

## எழுதுமட்டுவாழ் தெற்கு மக்களுக்கு கலந்துரையாடல்

தென்மராட்சி, ஜன.27

எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவில் மீளக்குடியமர்ந்த மக்கள் தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு எழுதுமட்டுவாழ் கணேசா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் கலந்து கொள்ளவுள்ளதாகவும் பிரிவின் அபிவிருத்தியுடன் தொடர்புடைய அனைத்துத் திணைக்கள தலைவர்களையும் கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் அறிவித்துள்ளார்.

மேற்படிபிரிவில் மீளக்குடியமர்ந்த மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் அறிவித்துள்ளார். (வ-207)

## அலங்காரத் திருவிழா

சுழிபுரம்,ஜன.27

வட்டுக்கோட்டை வீரபத்திரர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது. சிவஸ்ரீ.சு. சுந்தரராசக் குருக்கள் பிரதம சிவாச்சாரியாராக இருந்து கிரியை களை நிறைவு செய்யவுள்ளார்.

தேர்த்திருவிழாவின்போது கொழும்பிலிருந்து புதிதாகச் செய்து வரும் தேரில் வீரபத்திரர் பவனிவரவுள்ளார். புதிய தேர் வெள்ளோட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது. (வ)

## யாழ்.நாகவிகாரையில் இளைஞன் காயம்

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ். நாக விகாரையிலிருந்து தவறிவீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் இளைஞர் ஒருவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது.

யாழ். நாகவிகாரையில் கலசம் பகுதியில் சிமெந்துக் கட்டுமான வேலைகளில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் அதிலிருந்து தவறி வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொலநறுவையைச் சேர்ந்த சமீதகுமார (வயது 28)என்ற நபரே படுகாயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டவராவர். (வ-319)

## இந்திய நாட்டவர் கல்முனையில் கைது

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து கல்முனை பகுதியில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்முனை பொலிஸ் நிலைய அதிகாரிகளால் இவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு - விருதுநகர் - தலவாய் புரம் பகுதியைச் சேர்ந்த இந்திய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்ட வராவார்.

கல்முனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அபராதம்

கசிப்பு காய்ச்சுவதற்குப் பயன்படும் 10 போத்தல் கோடாவை வைத்திருந்ததற்காகக் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்ட புங்குடுதீவு நபருக்கு நீதிவான் 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார். (உ-251)


**நன்றி கூறுகின்றோம்**

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2012 இனை மிகச் சிறப்பாக நடத்தி முடிப்பதற்கு எமக்கு அனைத்து வகையான ஒத்துழைப்புக்களையும் வழங்கிய பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ **டக்ளஸ் தேவானந்தா**, யாழ். மாநகர முதல்வர் திருமதி **யோகேஸ்வரி பற்குணராஜா** மற்றும் மாநகரசபை நிர்வாகத்தினருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

**யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றம்**

(சி/8236) (45-7 -9)



ஏழாலைதெற்கு, வசந்தபுரம், களபாவோடை

**அருள்மிகு வசந்தநாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்**

**மஹோற்ஸவ விஞ்ஞாபனம் - 2012**

**29.01.2012 ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து**

10 நாள்கள் வரை நடைபெற அம்பிகையின் திருவருள் கை கூடியுள்ளது.

விசேட உற்சவங்கள் தவிர்ந்த நாள்களில்

அபிசேகம் காலை 7 மணிக்கு
மூலஸ்தானப் பூஜை முற்பகல் 10மணிக்கு
வசந்த மண்டபப் பூஜை 11 மணிக்கு நடைபெறும்

**விசேட உற்சவங்கள்**

| | |
|---|---|
| கொடியேற்றம்: | ஞாயிற்றுக்கிழமை 29.01.2012 முற்பகல் 10 மணி |
| வேட்டைத்திருவிழா: | சனிக்கிழமை 04.02.2012 முற்பகல் 10 மணி |
| சப்பரத்திருவிழா: | ஞாயிற்றுக்கிழமை 05.02.2012 முற்பகல் 10 மணி |
| தேர்த்திருவிழா: | திங்கட்கிழமை 06.02.2012 முற்பகல் 10 மணி |
| தீர்த்தத்திருவிழா: | செவ்வாய்க்கிழமை 07.02.2012 முற்பகல் 10 மணி |

மஹோற்ஸவ காலங்களில் அடியார்கள் வருகை தந்து அம்பிகையை வழிபாடுசெய்து அவளின் அருட்கடாச்சத்தைப் பெற்றின்புறுமாறு வேண்டுகின்றோம்.

மஹோற்ஸவ காலங்களில் விஷேட சொற்பொழிவுகளும், மஹேஸ்வர பூஜையும் (அன்னதானம்) நடை பெறும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

(13368) (45) **தேவஸ்தானத்தினர்**




நல்லூரில்..... 526,529, பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின் வீதி), யாழ்ப்பாணம். தொ.பேசி: 021 222 1723.

யாழ்.நகரில்..... 770, 772, கே.கே.எஸ்.வீதி, (தட்டாதெருச் சந்தி), யாழ்ப்பாணம். தொ.பேசி: 021 222 0421. பக்ஸ்: 222 0421.

வடமராட்சியில்..... இல.171, பிரதான வீதி, நெல்லியடி, (சம்பத் வங்கிக்கு அருகில்) தொ.பேசி: 021 226 2992.

**O/Level இன் பின்னர்**

**பெறுபேறுகள் வரும் வரை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை கற்க இதுவே சிறந்த தருணம்**

O/L மாணவர்களுக்கு விசேட கட்டணச்சலுகை

- Diploma in Information Technology
- Diploma in IT & Web Programming
- Advanced Diploma in Hardware & Networking

**Multimedia Courses**

- Video Production
- Digital Pre-Press
- Web Animation
- Web Development
- Professional Graphic Design
- Cartoon Animation

CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

Registered with Tertiary & Vocational Education Commission of Sri lanka

| | | |
|---|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் | கொடிகாமம் வீதி, நெல்லியடி | 230, கண்டி வீதி, சாவகச்சேரி |
| T.P : 021-222 5677 | T.P : 021-2262399 | T.P : 021-2270267 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணத்தில்மேகக்கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும். மன்னார் மாவட்டத்தில் மழை பெய்யலாம். வவுனியாவில் வழமைக்கு மாறாக காற்று வீசலாம். ஏனைய இரண்டு மாவட்டங்களிலும் பெரும்பாலும் மேகக்கூட்டத்துடன் காணப்படும்.

# புங்குடுதீவின் சில பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படாதது ஏன்?

## மக்கள் விசனம்

**சில பகுதிகளில் மின் தூண்கள் நிறுத்தப்பட்டு பல மாதங்களாகிய போதும் மின் இணைப்பு வழங்க எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.**

புங்குடுதீவின் சில பகுதிகளில் இன்னமும் ஒழுங்கான மின்சார விநியோகம் இடம்பெறவில்லை என அந்தப் பகுதி மக்கள் வருத்தத்துடன் தெரிவித்துள்ளனர்.

30 வருடங்களுக்கு மேலாக மின்சார வசதி இன்றி இருந்த புங்குடுதீவுப் பகுதிக்குத் தற்போது மின்சாரம் வழங்கப்பட்ட போதும் ஒரு சில பகுதிகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாக மக்கள் விசனப்படுகின்றனர்.

சில பகுதிகளில் மின் தூண்கள் நிறுத்தப்பட்டு பல மாதங்களாகிய போதும் மின் இணைப்பு வழங்க எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

வேலணைப் பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில், புங்குடுதீவின் சிறுப்பிட்டிப் பகுதிக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படாதது குறித்து எடுத்துரைக்கப்பட்டது. அதன் போது மின்சாரசபை அதிகாரிகள் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருந்தனர்.

எனினும் அவர்கள் பாராமுகமாக இருப்பதன் காரணம் என்னவென்று புரியவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் ஆதங்கப்படுகின்றனர். (ந-313)

## உண்மை பேசினால் மகிழ்ச்சியே

நம் குடும்பத்தில் ஒரு பெண்ணுக்குத் திருமணம் என்றால் பெண்ணின் தாய் தந்தையர் எவ்வளவு கஷ்டப்பட்டு அதை நடத்தி முடிக்கப் பாடுபடுகின்றார்கள். மற்றவர்களுக்கு அவ்விருவரும் மிகவும் கஷ்டப்படுகிறார்களே என்று தான் தோன்றும். ஆனால் அத் தாய் தந்தையருக்குத் தங்கள் பெண்ணின் திருமணம் நடந்த பெருமிதம் சந்தோஷம் தான் நிலைக்குமே தவிரதம் கஷ்டங்களை உணர மாட்டார்கள்.

அது போலவே அரிச்சந்திரனும் தான் கொண்ட வாழ்க்கையின் இலட்சியத்தை விரதமாய் மேற்கொண்டு இடையே எதிர்ப்பட்ட இடர்பாடுகளைப் பற்றிய கவலையில்லாமல் வாழ்ந்தான். மற்றவர்களுக்குத்தான் அவன் மிகவும் கஷ்டப்பட்டதாகத் தோன்றுமே தவிர ஒவ்வொரு சோதனையிலும் தன் இலட்சியத்தில் வெற்றி பெறுவது குறித்துச் சந்தோசம் தான் அடைந்திருக்கின்றான். இறுதியில் இறைவனின் அனுக்கிரகத்தைப் பெற்றான். ஆகையால் உண்மை பேசியதால் அரிச்சந்திரன் சந்தோஷம் அடைந்தானே தவிரக் கஷ்டத்தை அடையவில்லை .

ஞானக்கதிர்

# 'கொல்' என்ற சிரிப்பு கொன்றது ஒரு நாளை

தென்மராட்சி,ஜன.27

நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருந்த போது பெரிய சத்தத்துடன் 'கொல் ' எனச் சிரித்த நபர் ஒருவர் நாள் முழுவதும் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டார்.

சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அவரது சிரிப்பொலி அங்கிருந்தவர்களின் கவனத்தைக் கலைத்து வழக்கு விசாரணைக்கு இடையூறு ஏற்படுத்தியது.

இதனை அடுத்து பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தார் என்று குற்றச்சாட்டைப் பதிவு செய்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் நீதிமன்றம் கலையும் வரை குறிப்பிட்ட நபரைக் காவலில் வைக்குமாறு உத்தரவிட்டார். நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் முடிந்த பின்னர் மாலையிலேயே அவர் விடுவிக்கப்பட்டார்.(உ-207)

# சொந்த நாட்டில் இருந்தவாறே பிரிட்டன் கல்வியைத் தொடரலாம்

லண்டன்,ஜன.27

வெளிநாட்டு மாணவர்கள் அவரவர் நாடுகளில் இருந்தபடியே, பிரிட்டனில் கல்வி பயில்வதற்கு வசதியாக பிரிட்டன் அரசு, புதிய சேவை ஒன்றை நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது.

உலகளவில் கல்விச் சந்தையில் ஏற்பட்டுள்ள போட்டியில் தனது இடத்தை தக்க வைப்பதற்காக, பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹேக் மற்றும் பல்கலைக் கழகங்கள் மற்றும் அறிவியல் துறை இணையமைச்சர் டேவிட் வில்லெட்ஸ் இருவரும் நேற்றுமுன்தினம் புதிய சேவை ஒன்றைத் தொடக்கி வைத்தனர்.

'உயர்கல்விக்காக உலகளவிலான ஒருங்கிணைந்த ஆலோசனை சேவை' என்ற இந்தத் திட்டத்தின்படி, பிரிட்டன் அரச சார் நிறுவனங்கள் மற்றும் அவற்றுடன் இணைந்து செயலாற்றும் நிறுவனங்கள் அளிக்கும் கல்விச் சேவைகள் மற்றும் ஆலோசனைகள் ஆகியவை ஒரே இணையத் தளத்தில் இனி கிடைக்கும். அந்த இணையத் தளத்தில் பல்வேறு கல்வி நிறுவனங்களைத் தொடர்பு கொள்வதற்கு வசதியாக அவற்றின் மின்னஞ்சல், தொலைபேசி எண்கள் உள்ளிட்ட தொடர்பு முகவரிகள் அளிக்கப்பட்டிருக்கும்.

இவற்றின் மூலம் எந்த நாட்டைச் சேர்ந்த மாணவரும் மிக எளிதில், தேவையான பிரிட்டன் கல்வி நிறுவனத்தை விரைவில் தொடர்பு கொண்டு தனது படிப்பைத் தொடர முடியும்.

மாணவர் விசாவில் கெடுபிடி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால், தங்கள் தாய்நாட்டில் இருந்தபடியே பிரிட்டனில் படிப்பதற்கு அவர்கள் விரும்புகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந)

## பிற்போடப்பட்டுள்ளது

எதிர்வரும் 29.01.2012 ஞாயிற்றுக்கிழமை
வண்.வடகிழக்கு கலட்டி எச்சாட்டி
மகாமாரி அம்மன் மணி மண்டபத்தில்
(கலட்டி அம்மன் கோயில்) நடைபெற இருந்த நா.நடராசா தம்பதியரின் புதல்வனின் திருமண நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

நா.நடராசா,
கருங்காலி, காரைநகர்.

## வாடகைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில் சிறிய நிறுவனங்களுக்கு அல்லது குடும்பத்தினருக்கு வீடு வாடகைக்கு உண்டு
தொடர்பு: 077 8208898

## வீடு வாடகைக்கு உண்டு

சோமசுந்தரம் வீதியின் கச்சேரி அருகில் 55 ஆம் நம்பர் மாடி வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு உகந்தது.
தொடர்பு: 0776393742
021 222 6438

## காணி விற்பனைக்கு

மருதனார்மடம், வலிகாமம் கல்வி வலய அலுவலகத்துக்கு அண்மையில் கிணற்றுடன் கூடிய 11 பரப்புக்காணி முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777110513

## ENGLISH GRAMMAR

ஆங்கிலத்தை மிக விரைவாகக் கற்க விரும்புவோருக்கு ஓர் அரிய வாய்ப்பு
இரண்டே நாள்களில்
நவீன உத்தியான FORMULATIONTECHNIQUE முறைமூலம் Formulation Table ஐ பயன்படுத்தி அடிப்படை ஆங்கில இலக்கணம் Basic English Grammar முழுமையாகக் கற்பிக்கப்படும்.
இடம்: The Excellent Learning Centre
கொக்குவில் சந்தி, கே.கே.எஸ். வீதி.
(கொக்குவில் இந்துக் கல்லூரி அருகில்)
காலம்: இந்த மாதம் 28, 29 ஆம் திகதிகளில் காலை 9.00 மணி
ஆசிரியர் P.T.புனிதராஜா
Contact No. 0714450379 (13349) (2-6-7)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
11 ★ 07 ★ 1950



மறைவு
10 ★ 02 ★ 2008

அமரர்
**அரியரத்தினம் பிரபாகரன்**

எங்கள் உயர்வுக்கு உறுதுணையாக இருந்த அப்பா
உங்கள் சிரித்த முகம் காண்பதற்கு ஏங்கித் தவிக்கின்றோம்
ஆறாத்துயர்கொண்டு ஆண்டு நான்கை அடைந்துவிட்டோம்
எங்கள் அப்பா! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

விமான நிலைய வீதி,
பத்தமேனி, அச்சுவேலி.
குடும்பத்தினர் (13480)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
கலைப்பீடம், இராமநாதன் நுண்கலைக்கழகம்
பரீட்சை அட்டவணை தொடர்பான
**அறிவித்தல்**

இராமநாதன் நுண்கலைக்கழக 1 ஆம், 2 ஆம், 3 ஆம் வருட மாணவர்களுக்கான இரண்டாம் அரையாண்டு அறிமுறைப் பரீட்சைகள் பின்வரும் திகதிகளில் ஆரம்பமாகும்.

| | |
|---|---|
| 1 ஆம் வருடம் | 16.02.2012 |
| 2 ஆம் வருடம் | 13.02.2012 |
| 3 ஆம் வருடம் | 08.02.2012 |

விரிவான பரீட்சை அட்டவணைகளைக் கலைப்பீடம் மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழகம் ஆகிய பகுதிகளிலுள்ள விளம்பரப் பலகைகளில் பார்வையிடலாம்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம். (அ/8215)(2-6-7)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
14 ★ 01 ★ 1955



மறைவு
27 ★ 12 ★ 2011

அமரர் நடராசா பவாநாதன்

கடந்த 27.12.2011 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத்தலைவர் அமரர் நடராசா பவாநாதனின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (28.01.2012) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு மிகவும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறைபதச் செய்தி கேட்டு எமக்கு எல்லா வழிகளிலும் ஆறுதல் தெரிவித்து உதவி புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)

பாலாவோடை,
உடுவில் தெற்கு,மானிப்பாய். (13179) (2-6-7) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?


**மேடம்:** வாகன யோகத்துக்கு வாய்ப்பு உண்டு. எந்த விடயத்துக்காகவும் அலட்டிக் கொள்ளாமல் நிதானமாகச் செயற்படுவீர்கள். மாற்று மொழி பேசுவோர் வழியில் மனதுக்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். சில வேலைகளை தாமதமாக ஆரம்பித்தாலும், சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள்.


**இடபம்:** கோபத்தைத் தவிர்த்து எதிலும் புத்திசாலித்தனமாகச் செயல்படுவீர்கள். எதிர் பார்த்த சில விடயங்கள் எளிதில் கைகூடி வரும். வியாபாரிகள் கடன் மிகுதிகள் வசூலாகி திருப்தி அடைவர். தொலைபேசி வழியில் நல்ல செய்திகளைக் கேட்கலாம். நீங்கள் தேடிச் சென்றும் பார்க்க முடியாத ஒருவரை இன்று திடீரெனச் சந்திக்கலாம்.


**மிதுனம்:** ஊக்கம், உற்சாகத்தைக் குறைக்கும் அல்லது அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். உடன்பிறப்புகள் உங்களுக்கு உதவிக்கரம் நீட்டலாம். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமைய லாம். உங்களின் அனுபவம் ஒன்றை மற்றவர்களுக்கு அறிவுரையாகச் சொல்வீர்கள்.


**கடகம்:** வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும் நாள். அவசரப்பட்டு சில முடிவுகளை எடுத்து விட்டு பின் கவலை அடைவீர்கள். சிலரிடம் உதவிகளைப்பெற மேற்கொண்ட முயற்சிகள் தள்ளிப் போகலாம். மறைமுகமான போட்டிகளைச் சந்திக்கலாம். தெய்வ வழிபாட்டின் மூலம் அமைதி பெறலாம். வெறுப்பு, விரக்தி, தாழ்வு மனப்பான்மை ஆள்கொள்ளும்.


**சிங்கம்:** மற்றவர்களால் சாதிக்க முடியாததை நீங்கள் சாதித்துக் காட்டுவீர்கள். வெளியூர் பயணங்கள் செல்ல திட்டமிடுவீர்கள். தாய் வழி உறவினர்கள் சிலரைச் சந்திக்க நேரிடலாம். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவோரை அடையாளம் கண்டு கொள்வீர்கள். நண்பர் ஒருவருக்கு அவசர உதவி செய்வீர்கள். நீண்டதூர பயணங்கள் செல்லலாம்.


**கன்னி:** வாய்ப்புகளை சாதகமாகக் பயன்படுத்திக்கொள்ள வேண்டிய நாள். தேக ஆரோக்கியக் குறைவுகள் நீங்கி தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். பணவரவுகளில் ஏற்பட்ட தடை, தாமதங்கள் விலகும். மாமன், மைத்துனர்களின் அன்புத் தொல்லைகளுக்கு ஆள்படலாம்.


**துலாம்:** எல்லாவற்றையும் முடித்து விடலாம் என்று சில வேலைகளை ஆரம்பித்து விட்டு சிலவற்றை இடையில் விட்டு விடலாம். தாய் வழியில் சுபச்செலவுகளைச் சந்திக்கலாம். சிலரிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் போகலாம். எதிர்பாராத தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம்.


**விருச்சிகம்:** எதிர்ப்பவர்களையும் சாமர்த்தியமான பேச்சுக்களால் மடக்கி விடுவீர்கள். கடன் மிகுதிகள் வசூலிப்பில் அக்கறை காட்டுவீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள். ஆதாயமில்லாத விடயம் ஒன்றுக்காக அலைய நேரிடலாம்.


**தனுசு:** எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். கடந்த காலத்தில் ஒருவருக்குச் செய்த உதவி ஒன்றை இப்போது மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். வியாபாரிகள் கூடுதல் வருமானத்தால் சந்தோஷம் அடைவர். அதிகச் செலவில் வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த செலவில் வாங்கி மகிழ்வீர்கள். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம்.


**மகரம்:** பணிபுரியும் இடத்தில் பிரச்சினைகள் வராமல் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். உறவினர்கள், நண்பர்களுக்காக கணிசமான பணத்தைச் செலவிடலாம். கொடுக்கல் வாங்கல்களில் எச்சரிக்கை அவசியம். சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள நேரிடலாம். கனவுத் தொல்லையுண்டு. சிலரிடம் மனம் விட்டுப் பேசும் சூழ்நிலை உருவாகும்.


**கும்பம்:** சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்கு பெறும் நாள். சில வேலைகளில் பதற்றம், படபடப்புடன் செயற்படுவீர்கள். உறவினர்கள் உங்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வர். ஆடம்பரப் பொருள்கள் வாங்கலாம். சில விடயங்களில் மதிப்பு, கௌரவம் பார்த்து விதண்டாவாதமாக நடந்து கொள்வீர்கள். எதிர்பாராத வகையில் உதவிகள் கிடைக்கும்.


**மீனம்:** மனதில் நினைத்ததை சரியென நினைத்துச் செய்வீர்கள். கணவன், மனைவி இடையே சிறு வாக்குவாதங்கள் ஏற்படலாம். விருந்தினர்கள் வருகையால் உங்களின் வழக்கமான வேலைகளில் மாற்றங்கள் ஏற்படலாம். பிரியமான நண்பர் ஒருவரை பல நாள்களுக்கு பின்னர் சந்திக்கலாம். சுபச் செலவுகள் கூடும். வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**நாளை**

தை 14 சனிக்கிழமை 28.01.2012
திதி: பஞ்சமி பி.ப. 04.54 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி மு.இ. 10.25 வரை
சுபநேரம்: 03.36 - 05.06 வரை,
ராகு காலம்: 09.36- 11.06 வரை

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | | | | 2 | 4 | |
| | 3 | | | | 2 | 5 | | 9 |
| | | | | 8 | | | | 6 |
| | 2 | 8 | 1 | | 9 | | | 5 |
| 5 | | 9 | 2 | 3 | 8 | 4 | | 7 |
| 1 | | | 6 | | 7 | 9 | 2 | |
| 3 | | | | 9 | | | | |
| 2 | | 1 | 3 | | | | 9 | |
| | 9 | 4 | | | | | 6 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
20
★
07
★
1914



மறைவு
07
★
02
★
2011

திருமதி
### செல்லம்மா கணபதிப்பிள்ளை

வருடம் ஒன்று சென்றாலும் எம்மை
வாட்டுகிறதே உங்கள் பிரிவு.
ஆத்மா சாந்தி பெற கிரியை வழிதான் இன்று.

கடந்த 07.02.2011 இறைவனடி சேர்ந்த செல்லம்மா கணபதிப்பிள்ளை அவர்களின் நினைவாக இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் இன்று (27.01.2012) வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணியளவில் நாகர் இலுப்பைக்குளம் நாகபூசணி அம்மன் ஆலயத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

இல. 31, புதிய வீட்டுத்திட்டம்,
நாகர் இலுப்பைக்குளம்,
வவுனியா.
T.P - 024 5689727


கணபதிப்பிள்ளை
மகாலிங்கம்,
மே[illegible]
(ஐயா கடை)

(13479) (8-6-7)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் (அப்பு)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் உடுவில், சங்கானை, இந்தியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை



பாலசுப்பிரமணியம் 21.01.2012 சனிக்கிழமை அகாலமரண மானார்.

அன்னார் நகுலேஸ்வரியின் (இந்தியா) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் மனோரஞ்சிதம் தம்பதியரின் மருமகனும், காலஞ் சென்றவர்களான கிரிதரன், சசிதரன் (பெல்ஜியம்) ஜெய தரன் மற்றும் ஜீவாதரன் (பிரான்ஸ்), முரளிதரன் (சுவிஸ்), கருணாகரன் (நோர்வே), மலர்விழி (இந்தியா), கயல்விழி (இறுதி வருட பல் வைத்திய மாணவி, இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேஸ்வரி, காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (லண்டன்), இரத்தினம் மற்றும் கனகமலர், வடிவேலு, துரைசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், வலி.கிழக்கு பி.ச.உறுப்பினர்), ராஜேஸ்வரி (லண்டன்), நாகேஸ்வரி, கமலாதேவி, விக்னேஷ்வரி, ஜெகதீஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தெய்வேந்திரம் மற்றும் மகேந்திரன் (லண்டன்) பரமேஸ்வரன் (லண்டன்) நந்தராணி, ஜெகதீஸ்வரன், செல்வராணி (நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெனனி (பெல்ஜியம்), நளினி (பிரான்ஸ்), அனுஷா (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனும், டிலக்ஷன், அபிநயா, சகானா, சவின் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குச் சங்கானையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நகுலேஸ்வரி
(மனைவி), பிள்ளைகள்.

காளிகோயிலடி,
சங்கானை.

(13559)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்குச் சென்றால்தான் கவனிப்பார் கல்வி அதிகாரி

## கோப்பாய் சண்முகம்
## கதையோடு செய்தி

கொழும்பில் உள்ள அப்பலோ ஆஸ்பத்திரிக்கு அடிக்கடி தனது பிள்ளையை சிகிச்சைக்காகக் கொண்டு செல்வது முடிவில்லாமல் தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. பிறந்து 6 வயதான அந்தப் பிள்ளையோடு ஆசிரியர் படும்பாடு வார்த்தைகளால் சொல்ல முடியாது. ஆசிரியர் தொழிலில் வரும் சம்பளமும் மகளின் சிகிச்சைக்காக கரைந்து போகிறது. வடமராட்சிப் பகுதியில் இந்த ஆசிரியர் வசித்து வருகிறார்.

கடந்த 25 ஆம் திகதி பாடசாலை முடிந்து தனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். அந்த ஆசிரியருக்கு இடமாற்றம் வன்னிப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு வந்துள்ளது. வாழ்வின் அடுத்த கட்ட நகர்வு பற்றிச் சிந்திக்க முடியாத சூழலில் மனச் சுமையுடன் வீடு நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார். நெல்லியடிச் சந்தியைத் தாண்டும் போது அதே பகுதியில் வேறொரு பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியை ஒருவரும் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். இருவரும் சந்திக்கிறார்கள்.

ஆசிரியர் : ''என்ன ஆசிரியர் இடமாற்றம் வந்திட்டுதா? எங்கே?''

ஆசிரியை : '' ஓ..'' என ஒருவித சோர்வுடன் பதில் கூறிக் கொண்டவர் உங்களுக்கும் ஆசிரியர் இடமாற்றம் வந்துவிட்டதா'' எனக் கேட்டார்.

ஆசிரியர்: ''ஓ...'' என இவரும் ஒருவித மனச்சோர்வுடன் பதில் சொன்னார். இருவரும் நகர்ந்து மாலு சந்திக்கு இடைப்பட்ட பகுதியில் வீதியின் அருகில் ஒதுங்கி மோட்டார் சைக்கிளை நிறுத்தினார்கள். மோட்டார் சைக்கிளில் இருந்த வண்ணமே கதைக்க ஆரம்பித்தார்கள்.

ஆசிரியர்- ''எனக்கு வன்னிக்கு இடமாற்றம் வந்துவிட்டது. என்ன செய்ய முடியும் . எனது மகளை நினைத்தால்தான் பயமாக இருக்கிறது. அவளை கொழும்பில் உள்ள அப்பலோ ஆஸ்பத்திரிக்கு கிளினிக்குக்கு அடிக்கடி கொண்டு செல்வதால் வலிப்பு நோய் இல்லாமல் மகள் வாழக் கூடியதாக இருக்கிறாள். நான் வன்னிக்குப் போனால் எனது பிள்ளைக்கு என்ன நடக்குமோ என்று தெரியாமல் உள்ளது'' என்று சொல்லிவிட்டுப் பெருமூச்சு விட்டார். அவரின் அந்த மூச்சில் வாழ்க்கைப் பயம் கூடிக் கிடந்தது.

ஆசிரியை- ''பிள்ளையின் வைத்திய சான்றிதழைக் காட்டி வன்னிப் பகுதிக்கான ஆசிரியர் இடமாற்றத்தை ரத்து செய்திருக்கலாமே'' என்றார்.

ஆசிரியர்- ''நான் அதிகாரிகளிடம் காட்டாமலா விட்டேன். பிள்ளையின் வைத்தியச் சான்றிதழைக் கொண்டு போய் கல்வி அதிகாரிகளிடம் காட்டினேன். அதைப் பார்க்கவும் இல்லை அந்த அதிகாரிகள். "உமக்கு வன்னிக்கு இடமாற்றம் வந்திருக்குது. நீர் அங்கே போகவும்'' என்று சொல்லிவிட்டார்கள்.

ஆசிரியை- ''என்ன மருத்துவ சான்றிதழைக் காட்டியும் அதனைப் பார்க்கக் கூட இல்லையா?''

ஆசிரியர் - அங்கே ஆசிரியர் இடமாற்றத்தைத் தீர்மானிப்பதற்கு ஒரு குழு இருக்கிறது. அவர்கள்தான் ஆசிரியர்களின் இடமாற்றத்தைத் தீர்மானிப்பார்கள். அவர்களிடம்தான் வைத்திய சான்றிதழைக் காட்டினேன். அவர்கள் சான்றிதழைப் பார்க்காமல் திருப்பித் தந்துவிட்டார்கள். ஒருவேளை ஆங்கிலம் தெரியாமல் இருக்குமோ?

ஆசிரியை- ''இருந்தாலும் இருக்கும், மறுமுறை நீங்கள் முயற்சி செய்து பார்க்கலாமே?

ஆசிரியர்- ''என்னத்தை முயற்சி செய்ய. கல்வி அதிகாரிகளுக்கு தெரிந்தவர்களுக்குத்தான் யாழ்ப்பாணத்துக்குள்ளேயே இடமாற்றமாம். மற்றையவர்களுக்கு வெளி மாவட்டத்துக்குத்தான் இடமாற்றுகிறார்கள் என்று சொன்ன ஆசிரியர் சில நிமிடங்கள் அவர்களைத் தாண்டிச் செல்லும் தெரிந்தவர்களுக்கு தலையாட்டிவிட்டு வாகனங்களையும் பார்த்துவிட்டு மீண்டும் கதைக்க ஆரம்பித்தார்.

''அது சரி உம்மட இடமாற்ற விடயம் என்ன மாதிரி எங்கு மாற்றி இருக்கிறார்கள்''

ஆசிரியை - ''அதை ஏன் பேசுவான். சில ஆசிரியர்கள் கல்வி அதிகாரி வீட்டுக்குப் போகிறார்களாம். வீட்டுக்குப் போனதும் அவர் உடனே வடமராட்சிக் குள்ளேயே இடமாற்றம் செய்து கொடுப்பாராம்.''

ஆசிரியர் - ''அப்படி என்றால் நீங்களும் அந்த அதிகாரி வீட்டுக்குப் போகலாமே''

ஆசிரியை - ''அதிகாரி வீட்டுக்குப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் வீட்டுக்குப் போய் வந்ததும் ஒன்றுமே சொல்லுகிறார்கள் இல்லை. ஏன் என்று தெரியவில்லை. அதனால் எனக்கு என்னுடைய இடமாற்றம் சம்பந்தமாகக் கதைக்க அதிகாரி வீட்டுக்குப் போக மனமில்லாமல் இருக்கிறது''

ஆசிரியர் - ''சரி நேரமாகிவிட்டது. என்ன நடக்கும் என்று பார்ப்பம்'' என்று சொல்லிவிட்டு இருவரும் மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டனர். மீண்டும் அடுத்த நாள் நெல்லியடிப் பகுதியில் இருவரும் சந்திக்கிறார்கள். மோட்டார் சைக்கிள் ஓடிக்கொண்டே ஆசிரியர் ஆசிரியைப் பார்த்து கேட்கின்றார். ''அதிகாரி வீட்டுக்குப் போனதா'' என்று ஆசிரியை கேட்க ''ஓம்..'' என்று தலையாட்டிவிட.

ஆசிரியர் - ''என்ன நடந்தது'' என்று கேட்க ஆசிரியை பேசாமல் தலையைக் குனிந்து கொண்டு மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டார். ஆசிரியர் ஒன்றுமே புரியாமல் தனது பாதைக்கு மோட்டார் சைக்கிளை எடுத்தார். அவர் போகும் போது நினைத்துக் கொண்டு போனார். அந்த அதிகாரி வீட்டுக்குப் போகின்ற ஆசிரியைகள் ஏன் மௌனமாகப் போகிறார்கள்.

என்ன, ஏது என்று அறிந்தால் நானும் போய் இடமாற்றத்தை உள்ளுக்குள்ளேயே எடுத்து விடுவேன் என்பதாலோ, அல்லது வேறு ஏதாவது பிரச்சினை இருக்குமோ என்று ஒன்றுமே புரியாமல் சென்று கொண்டிருந்தார். வீடு போய்ச் சேர்ந்தார். அங்கே நோயால் அவதிப்படும் தனது மகளை அணைத்தபடி '' இவையளுக்கு எங்கே எங்கட பிரச்சினை விளங்கப் போகுது'' என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டிருக்க. அவரது மனைவி அறைக்குள் இருந்து வந்து ''இடமாற்ற விடயம் என்னவாச்சு'' என்று கேட்க ஆசிரியர் ''முயற்சி செய்து பார்ப்பம் சரி வரும் என்று நினைக்கிறன்'' என்று சொல்லி தனது மனைவியை ஆறுதல் படுத்தினார்.

பார்த்தியளா ஒரு ஆசிரியர் இடமாற்றம் ஒரு ஆசிரியர் குடும்பத்தை எந்தளவுக்கு பாதித்துள்ளது...? ✸


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நாரந்தனை மண்ணின் மைந்தரும்
கரவெட்டிப் பிரதேச செயலாளராகப்
பல ஆண்டு காலம் சேவையாற்றி வட
மாகாணக் கல்வி அமைச்சின்
செயலாளராகப் பதவி உயர்வு பெற்றுக்
கடமை புரியும் **உயர்திரு சிவலிங்கம்
சத்திய சீலன்** அவர்களைப் பாராட்டி
வாழ்த்துவதுடன் மேன் மேலும் உயர்
பதவிகள் பெற்று சேவையாற்ற எல்லாம்
வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**நாரந்தனைப் பொதுமக்கள்.**

## மணிவிழாக் காணும் நாயகியை வாழ்த்துகின்றோம்



தேசத்தின் வங்கியாம்
இலங்கை வங்கிதனில்
கடந்த மூன்று
தசாப்தங்களாகச் சேவை
புரிந்து தற்போது
மானிப்பாய்க் கிளையில்
உதவி முகாமையாளராகக்
கடமையாற்றிய
திருமதி
**இராமலிங்கம்
குகபூசணி**
அவர்கள் நேற்று
(26.01.2012)
வியாழக்கிழமை தனது
சேவையில் இருந்து ஓய்வுபெறுவதுடன் இன்று
தனது பிறந்த தினத்தையும் கொண்டாடும்
மணிவிழா நாயகியின் சேவையைப்
பாராட்டுவதுடன் இவரது ஓய்வுக்காலம் சிறக்க
மனதார வாழ்த்துகின்றோம்.

**முகாமையாளர், ஊழியர்கள்,
இலங்கைவங்கி மானிப்பாய், சங்கானை
விரிவாக்கல் கிளை.**

(13500)(2-6-7)

### கார் விற்பனைக்கு

டாக்ரரின் பாவனையில் உள்ள 14 -XXXX நிசான் சனி கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0776684794,021 321 7950

### வீடு வாடகைக்குத் தேவை

கோண்டாவில் பகுதியில் 2 அறையுடனும் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: 0778194834

### விற்பனைக்கு

புத்தம் புதிய டீப் பிறீசர் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு 2½ அடி நீளம்.
தொடர்பு: 0776180675

### காணி விற்பனைக்கு

கரந்தன் கோகிலன் கடையிலிருந்து பூதவராயர் கோயிலுக்குச் செல்லும் வீதிக்கு அருகில் வீட்டுடன் கூடிய எட்டரைப் பரப்பு விஸ்தீரணமுள்ள காணியும், கோகிலன் கடைக்கு அருகில் ஐந்தரைப் பரப்பு விஸ்தீரணமுள்ள வெற்றுக் காணியும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:0777295970 நிலகா.

### பணிப்பெண் தேவை

சமையல் தெரிந்த, வீட்டு வேலைகள் செய்யக்கூடிய 25 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை. காலை 7.00 மணிக்கு வந்து மாலை 5.00 மணிக்குப் போகலாம். அங்கு தங்கி இருந்தும் கடமைபுரியலாம்.
தொடர்பு: செல்வம், 107, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:0779107153

### காணி விற்பனைக்கு

கோப்பாய் மத்தியில்
ஏழு பரப்புக் காணி
விற்பனைக்குண்டு.
சனி, ஞாயிறு தினங்களில்
பார்வையிடலாம்.
தொடர்பு: க.சிவசங்கரநாதன்,
கோப்பாய் மத்தி.

## Herbal Health Care Center

இன்று 27.01.2012 இல. 65, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் (பூநாறி மரத்தடிக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில்) காலை 8.30 மணிக்கு Herbal Health Care Center (ஆயுர்வேத சிகிச்சை நிலையம்) வைத்திய சேவையை ஆரம்பிக்கின்றது.

**இங்கு பெறப்படும் சேவைகள்**

★ சித்தமருத்துவ நிபுணர்களின் சேவை
★ பாரம்பரிய மருத்துவர்களின் சேவை
★ Fair Pharma (Pvt) Ltd மருத்துவசேவை

சித்த ஆயுர்வேத பாரம்பரிய மருத்துவ சேவையை தினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**Dr. G. SRITHARAN
58, K.K.S. ROAD, KOKUVIL.
T.P. 021 222 2537**

(13514) (45-6-7)

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.01.2011 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் 2012.03.24. (சனிக்கிழமை) முற்பகல் 8.30 மணிக்கு மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லிவீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| காங்கேசன்துறை | மானிப்பாய் |
| யாழ். பிரதான வீதி | மல்லாகம் |
| ஊர்காவற்றுறை | உரும்பிராய் |
| நெல்லியடி | புத்தூர் |
| அச்சுவேலி | பண்டத்தரிப்பு |
| சங்கானை | கோப்பாய் |
| சுன்னாகம் | கொடிகாமம் |
| சாவகச்சேரி | உடுப்பிட்டி |
| வல்வெட்டித்துறை | திருநெல்வேலி |
| யாழ். பல்கலைக்கழகம் | கல்வியங்காடு |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

(ச/8212) (45--) 2012.01.23


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
27/01/2012

# வரலாற்றை மீட்டெடுக்க கீரிமலையில் சிவபூமி மடம்

**மடத்தின் உட்பிரகாரத்தில் இந்தியாவில் இருந்து எடுத்து வரப்பட்ட சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.**



பஞ்ச ஈஸ்வர தலங்களில் ஒன்றாகிய கீரிமலை நகுலேஸ்வரத்தின் மகிமை மிக்க தீர்த்தமாகத் திகழ்வது கீரிமலைக் கடற்கரை. வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தக் கடற்கரையில் பத்துக்கும் அதிகமான மடங்கள், சித்தர்களின் சமாதிகள், கோயில்கள், அன்ன சத்திரங்கள் என்பன இருந்தன என்று சொல்லப்படுகின்றது.

நாட்டில் நிகழ்ந்த அசம்பாவிதங்களால் இவை எல்லாம் அழிக்கப்பட்டன. தர்மச் சொத்துக்கள் யாவும் அநாதரவாகி விட்டன. எனினும், இலங்கையில் மிகவும் முக்கியமான யாத்திரிகர்கள் நடமாடும் இடமாக கீரிமலை இன்றும் விளங்குகின்றது.

சைவத் தமிழ்மக்கள் பிதிர்க் கடன்களை நிறைவேற்றும் பிரதான புனித பிரதேசம் இதுவாகும். அங்குள்ள அந்தியேட்டி மடத்தில் தினசரி ஆகக் குறைந்தது ஆறு அந்தியேட்டிக் கிரியைகளாவது இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இறந்தவர்களின் அஸ்தியை முக்திகிடைக்கவேண்டும் என்பதற்காகக் காசியில் கரைப்பது போலவே இறந்தவர்களின் அஸ்தியைக் கீரிமலையிலும் கரைத்தால் பாவங்கள் நீங்கி முக்தி பெறமுடியும். ஆத்மா ஆறுதலடையும் என்பது ஈழ மக்களின் நம்பிக்கை. கீரிமலையின் சிறப்பைத் தெரிந்து கொண்டு ஏனைய மதங்களைச் சேர்ந்த மக்களும் அங்கு தினமும் வருகை தருகின்றனர்.

பெருமளவு மக்கள் தினமும் வந்து கூடும் இந்தப் பகுதியில் ஒரு சொட்டு நிழல் கூட இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த முப்பது ஆண்டுகளில் இந்தப் பிரதேசம் வெறுமையாகி விட்டது. மடங்களில் அன்னதானப் பணிகள் நின்று விட்டன. மக்கள் தங்கிச் செல்லக் கூடியதான நிலைகள் அருகிப் போயுள்ளன.

இங்கே சிறப்புடன் மக்கள் தொண்டாற்றிய சிறாப்பர் மடம்,வைத்திலிங்கம் மடம், கிருஷ்ணபிள்ளை மடம், கடையம்மாமடம் போன்றவைகள் எல்லாம் இன்று அமைதியாகி விட்டன.

இந்த நிலையில் சைவ சமய அபிமானிகளின் வேண்டுதலையடுத்து செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகனின் முயற்சியால் சிவபூமி மடம் புதிதாக உருவாக்கப் பட்டுள்ளது. நாளை சனிக் கிழமை காலை ரிஷி தொண்டு நாதசுவாமிகளால் இந்த மடம் திறந்து வைக்கப்படவுள்ளது.

கீரிமலைக் கேணிக்கு அருகே கிழக்குப் பக்கமாகச் செகராசசிங்கமடம் இருந்த இடத்தில் அமரர் விஸ்வநாதன் ஆசிரியர் குடும்பம் அன்பளிப்பாக வழங்கிய காணியில் சிவபூமி அறக்கட்டளையினர் இந்தப் புதிய மடத்தை அமைத்துள்ளனர்.

நூற்றி எட்டு அடி நீளம் கொண்ட இந்தப் பெரிய மண்டபத்தில் ஏழு அறைகள் அலுவலகம், சமையலறை, குளியலறை, மலசலகூடம் என்பன சிறப்பாகவும் மக்களுக்கு வசதியாகவும் அமைக் கப்பட்டுள்ளன.

இந்தப் புதிய மடத்தின் இரண்டாவது பகுதிவேலைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அமைக் கப்பட்டு வரும் பகுதியில் பதினொரு அறைகள், கலை நிகழ்வுகள் இடம்பெறக்கூடிய மண்டபம் என மேலும் வசதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இருமாடிகளைக் கொண்டதாக அமையவுள்ள இந்தக் கட்டடத்தின் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு அகில இலங்கை இந்துமாமன்றம் சிவபூமி அறக்கட்டளைக்கு உதவுகின்றது. இங்கே முக்கிய தினங்களில் ஆரம்பத்தில் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்துள்ளதுடன் காலக்கிரமத்தில் தினமும் அன்னதானம் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கீரிமலைக்கு வரும் வெளியிடங்களைச் சேர்ந்த மக்கள் தங்கிச் செல்ல இந்த மண்டபம் பேருதவியாக அமையும் என்று ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார்.

இந்த மண்டபத்துக்கான அடிக்கல் 2011 ஆம் ஆண்டு ஆவணி மாதம் நடப்பட்டது.

ஐந்து மாதங்களாக இரவு பகலாக கட்டுமானப்பணிகள் இடம்பெற்று வந்தன. ஊரெழுவைச் சேர்ந்த பொறியியலாளர் சண்முகநாதனின் நெறிப்படுத்தலில் கட்டடப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

முகப்பில் இந்திய சிற்பக் கலைஞர் புருசோத்தமனின் கைவண்ணத்திலான சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மடித்தின் உட்பிரகாரத்தில் இந்தியாவில் இருந்து எடுத்து வரப்பட்ட சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது. மண்டப முகப்பு வாயிலில் கருங்கல்லினால் உருவான விநாயகர் விக்கிரகம் அழகுபடுத்தப்படவுள்ளது.

காலம் காலமாக மக்களுக்குத்தொண்டாற்றி அழிந்தொழிந்து போன கீரிமலை புண்ணிய தீர்த்தப் பிரதேசமானது சிவபூமிமடத்துடன் மீண்டும் தெய்வீக மணம் பரப்பும் என்று சைவத்தமிழ் மக்களிடையே புதிய நம்பிக்கை பிறக்கிறது.

**லக்ஸ்மன்**

**மோட்டார் வாகனச் சாரதிப் பயிற்சிப் போதனாசிரியர்களுக்கான கற்கைநெறி 2012**

மோட்டார் வாகனச் சாரதிப் பயிற்சிப் போதனாசிரியர்களைப் பதிவு செய்வதற்கென எதிர்வரும் மே மாதம் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கும் நேர்முகத் தேர்வுக்கும் சாரதிகளைத் தயார்படுத்தும் இப் பாடநெறிக்கு பின்வரும் தகைமை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

01. O/L கணித பாடத்துடன் 06 பாடங்கள் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
02. 25 வயதுடைய இலங்கையராக இருத்தல் வேண்டும்.
03. 5 வருடங்களுக்கு முன்னர் பெறப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம் ஒன்றை உடையவராக இருத்தல் வேண்டும். விவரங்கள், விண்ணப்பப் படிவங்கள், பாடத்திட்டம் சம்பந்தமான மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களுக்கான **ஒன்றுகூடல் நிகழ்வு**

*இடம் : கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி*
*காலம் : 29.01.2012 நேரம்: 2.30 மணி*

**குறிப்பு:** *போதனாசிரியராகப் பதிவு செய்து அனுமதிப் பத்திரம் பெறும் ஒருவர் சாரதிப் பயிற்சிப் பாடசாலை ஒன்றினை நிறுவ முடியும் என்பதனைக் கவனத்திற் கொள்ளவும்.*

*இயக்குனர்*
**செல்வா சாரதிப் பயிற்சிப் பாடசாலை**
**SELVA LEARNERS**
**கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி முன்பாக**

**கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை**
**முறைசாராக் கல்விப் பிரிவு வாகன ஓட்டுனர் பயிற்சி நெறி**
**கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி**

*பாடசாலை விட்டுவிலகிய 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு விஞ்ஞான ரீதியான சாரத்தியம் கற்றுத்தந்து சான்றிதழ் வழங்கும் பயிற்சிநெறி.*

**பங்குபற்ற விரும்புபவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு.**

*இடம் : கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபம்*
*காலம் : 29.01.2012*
*நேரம் : பிற்பகல் 4.30*

**அதிபர்**
**கிளி/மத்திய கல்லூரி, கிளிநொச்சி.**

# கொன்கோடியா கப்பல் மாலுமியும் இலங்கை நாட்டின் மாலுமிகளும்....

14》 சட்ட மூலம் குறித்து அக்கறை காட்டுவதற்குப் பதிலாக மத்திய கிழக்கு நாடுகளின் மக்கள் எழுச்சி குறித்து கவனம் கொள்ளும் நிலை உருவாகியுள்ளது. நாட்டின் சாதாரண பொதுமக்களோ தமக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை ஏற்றம் குறித்த செய்திகளை அறிய இயலாது, அரசைப் பதவியிலிருந்து அகற்றும் மக்கள் போராட்டங்கள் குறித்த செய்திகளுக்குக் காது கொடுக்கும் நிலை அரசால் உருவாக் கப்பட்டுள்ளது.

அதேவேளை மற்றொரு புறம் தனக்கு எதிரான இத்தகைய குற்றச்சாட்டுக்கள் ஊடாக மக்கள் அமைப்புக்கள் மூலம் தமக்கு ஏற்படுத்தப்படும் சிரமங்கள் மற்றும் சவால்களை ஈவு இரக்கமின்றி முறியடிக்கத் தக்க வாய்ப்பு அரசுக்கு வாய்த்துள்ளது. பொதுமக்களை ஒன்று திரட்டி மக்கள் போராட்டங்களை ஒழுங்கமைக்கும் தரப்பினர் மீது விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக, பொதுமக்களை அரசுக்கு எதிராகத் திசை திருப்புவதாக குற்றம் சுமத்தி அவர்களைத் தட்டி அடக்க அரசுக்கு வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இவ்விதம் பொதுமக்களின் எழுச்சி முயற்சிகள் ஆயுதவழிப் போராட்டங்கள் என அடையாளப்படுத்தப்படுவதும் இவை விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையோரால் முன்னெடுக்கப்படுவதாகக் குற்றம் சாட்டப்படுவதும், நாட்டின் ஒட்டுமொத்த ஜனநாயக வாதத்துக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலாகும். [illegible] தம்மை ஜனநாயக வாதத்தின் பாது காவலர் எனப் பெருமை பாராட்டிக் கொள்ளும் தரப்பினர்கள் இது குறித்து மௌனம் சாதிப்பதேன்? எதிரணி அரசியல் வாதிகள், ஊடகத் தரப்புகள், குடிசார் அமைப்புக்கள் என அரசுக்கு எதிராக விமர்சனம் மேற்கொள்ளும் சகல தரப்புக்களுமே இன்று மௌனம் காத்து வருகின்றன.

இன்று சமூக நலன் குறித்து செயற்பட்டு வரும் தரப்பினர் எதிர்நோக்கியுள்ள இந்த அமிலச் சோதனை, வரலாற்றையே முடக்கி விடத்தக்க பயங்கர சோதனையொன்றே அரசு ஏகாதிபத்தியப் போக்கில், தான் எதிர் கொள்ளும் சிக்கல்களையும், தனது இயலாத் தன்மையையும் மூடி மறைத்து விடுவதற்காக, ஜனநாயகவாத கோட்பாட்டில் நம்பிக்கை வைத்து அதற்காக மக்களை விழிப்படையச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வரும் அமைப்புக்களை அடக்கி ஒடுக்கி அழித்து விட மேற்கொள்ளும் முயற்சிகளை நாம் அனுமதிக் கலாமா? இன்று அத்தரப்புக்கள் எதிர் நோக்க நேர்ந்துள்ள அமிலச் சோதனையை நாளை நாமும் ஏதோவொரு ரூபத்தில் எதிர்நோக்க நேராது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**



*அன்புடையீர்!*
*கடந்த 28.12.2011 அன்று சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம்*
**அமரர்**
**இராசசிங்கம் கந்தசாமி**
*அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கீரிமலைல்யில் நடைபெற்று வீட்டுக்கிருத்தியம் 27.01.2012 நண்பகல் 12 மணியளவில் நடைபெறவுள்ளதால் இந்நிகழ்வில் தாங்களும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*1/4, ஏக்கர் திட்டம்,*
*பாரதிபுரம் கிழக்கு,*
*கிளிநொச்சி.*
*(11012)*
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதியாட்டத்தில் கலைமகள்-றொக்கெட்



யாழ்ப்பாணம், ஜன.27

வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் கலைமகள் விளையாட்டுக்கழகமும் றொக்கெட் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

கடந்த வாரம் இடம் பெற்ற அரை இறுதியாட்டம் ஒன்றில் றொக்கெட் விளையாட்டுக்கழகமும் காசரணி விளையாட்டுக்கழகமும் மோதின.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் றொக்கெட் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றியீட்டி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது அரை இறுதியாட்டத்தில் கலைமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கண்ணகி விளையாட்டுக்கழக அணி மோதியது.

மூன்றுசெற்களைக்கொண்ட ஆட்டத்தில் கலைமகள் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றியீட்டி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (உ-23)

## வென்றது கண்ணகி

வவுனியா பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் கண்ணகி விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது. கடந்த வாரம் வவுனியா நகர சபை விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கண்ணகி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதியது முன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் கண்ணகி விளையாட்டுக் கழகஅணி 2:0என்றசெற் கணக்கில் வெற்றியீட்டியது. (உ-23)

# பிலிப்ஸ் வெற்றிக்கிண்ணம் போட்டி நாளை ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜன.27

யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் அமரர் டாக்டர் ஜே.பி.சி. பிலிப்ஸ் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை சனிக்கிழமை மாலை 4.15 மணிக்கு பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

முதல் நாள் ஆட்டத்தில் சென். மைக்கல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (உ-23)



அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையே இடம்பெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்று நூற்றாண்டு விழாக் கிண்ணத்தைத் சுவீகரித்துக்கொண்ட சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி (இடது) அணி வீரர்களையும் இரண்டாம் இடத்தைப் பெற்ற அராலி சரஸ்வதி மகாவித்தியாலய (வலது) வீரர்களையும் படங்களில் காணலாம். (86)

# கிரிக்கெட் போட்டிகள்



புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கிரிக்கெட் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை புதுக் குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை இடம்பெறவுள்ளன.

இருபாலாருக்குமான ஆட்டங்களும் அன்றைய தினமே இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-23)

***

வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியும் வலைப் பந்தாட்டப் போட்டியும் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன.

ஆண் பெண் இருபாலாருக்குமான கிரிக்கெட்போட்டி சிறுவர்பூங்கா விளையாட்டுமைதானத்திலும் பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டி சைவப்பிரகாச வித்தியாலய மைதானத்திலும் இடம் பெறவுள்ளன. (உ-23)

***

ஏழாலை கண்ணகி விளையாட்டுக்கழகம் நடத்தும் 9 பேர் பங்குபற்றும் 10 பந்துப் பரிமாற்றங்களைக்கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஏழாலை மகாவித்தியாலயத்தில் நடைபெற்று வருகின்றது. அதில் நாளை நடைபெறும் ஆட்டத்தில் பங்குகொள்ளவுள்ள அணியின் விவரம் வருமாறு:

ஏழாலை திவ்யா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொக்குவில் ஏபி விளையாட்டுக்கழகம் மேதவுள்ளது. (உ-23)

எமது உள்ளத்தில் உறைந்துள்ள அன்புத் தெய்வத்தின்
பத்தாம் ஆண்டு நிறைவு நினைவு அஞ்சலி



மலர்வு
14.04.1947

உதிர்வு
17.01.2002

அமரர்
ஐயம்பிள்ளை நடராசா

(உரிமையாளர், மைதிலி நகைமாடம்)

திதி:27.01.2012

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்து
அமுதூட்டி பாசத்தால் பாதுகாத்து
வாழ்க்கைக்கு நல்வழிகாட்டியாய்
திகழ்ந்த எமது அன்புத் தெய்வமே
நாமுள்ளவரைக்கும் எம் உள்ளங்களில்
உங்கள் நினைவலைகள் என்றுமே அழியாது

(சி/8228)(2-6-7)

- என்றும் நினைவுடன் வாழும்:

மைதிலி நகைமாடம்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 7902

யாழ்-மைதிலி ஜூவலர்ஸ்,
79 Z, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொ.பே.0112396239

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆமை ஆயிரம் முட்டை இட்டாலும் அமைதியாக இருக்கும். ஒரு முட்டை போட்டாலே கொக்கரிக்குமாம் கோழி - சதமடித்து கொக்கரிக்கிறார் ஹோக்லி

# தப்பிக்குமா இந்தியா ?

இந்தியா, ஆஸ்திரேலியாவுடனான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் ஒருவாறு இன்னிங்ஸ் தோல்வியிலிருந்து தப்பித்துக் கொண்டது. இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடி வரும் ஆஸ்திரேலிய அணி நேற்றைய ஆட்ட நேர நிறைவில் 50 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்துள்ளது. முன்னதாக இந்திய அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 272 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளை இழந்தது.

ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் செய்து இந்திய அணி விளையாடி வருகின்றது. நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை இந்திய அணி 3 - 0 என்ற கணக்கில் ஏற்கனவே இழந்துள்ளது. நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் அடிலெய்டில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 7 இலக்குகளை மாத்திரம் இழந்து 604 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. துடுப்பாட்டத்தில் பொண்டிங் 221, மைக்கல் கிளார்க் 210, ஹடின் ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் அஸ்வின் 3, சகீர்கான் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இந்திய அணி நேற்று முன்தினம் ஆட்ட நேர நிறைவு வரையில் 61 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்திருந்தது. களத்தில் கம்பீர் 30, சச்சின் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

தோல்வியைத் தவிர்ப்பதற்கு போராட வேண்டிய கடப்பாட்டில் இந்திய அணி நேற்றைய தினம் களமிறங்கியது. சச்சின், கம்பீர் நிதானமாகத் துடுப்பெடுத்தாடத் தொடங்கினர். இருப்பினும் ஆஸ்திரேலியாவின் சீறி வரும் வேகப் ப்ந்து வீச்சினை சமாளிப்பதற்கு இருவரும் திணறினர். இந்திய அணி 78 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சச்சின் 25 ஓட்டங்களுடன் சிடிலின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஆரம்பம் முதல் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய கம்பீர் 34 ஓட்டங்களுடன் சிடிலின் வேகத்தில் நடையைக் கட்டினார். அனுபவ வீரர் லக்ஸ்மனும் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்திய அணி 111 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்திருந்தது.

இதன் பின்னர் இணைந்த ஹோக்லி, சகா ஜோடி இந்திய அணியின் மீட்புப் போராட்டத்தை தொடர்ந்தது. ஆஸ்திரேலிய பந்து வீச்சாளர்களுக்கு அதிர்ச்சி கொடுத்து நீண்ட நேரம் நீடித்தது இவர்களின் இணைப்பாட்டம். இவர்களின் பொறுமையான இணைப்பாட்டம் மூலம் இந்திய அணி 200 ஓட்டங்களைத் தாண்டியது.

114 ஓட்டங்களை ஆறாவது இலக்குக்காக பகிர்ந்த நிலையில் சகா 35 ஓட்டங்களுடன் ஹரிஸின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். திறமையாகத் துடுப்பெடுத்தாடிய ஹோக்லி தனது முதலாவது டெஸ்ட் சதத்தை 199 பந்துகளில் பூர்த்தி செய்தார். அதன் பின்னர் இந்திய அணியின் பின்வரிசை வழமை போன்று மடியத் தொடங்கியது. அஸ்வின் 5, சகீர்கான் 0, இசாந் சர்மா 16 ஓட்டங்களுடன் வரிசையாக ஆட்டமிழந்தனர். இறுதியில் ஹோக்லி 116 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்தியாவின் துடுப்பாட்டம் முடிவுக்கு வந்தது. இந்திய அணி 95.1 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்து 272 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பில் சிடில் 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

332 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆஸ்திரேலிய அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. ஆஸ்திரேலிய அணியின் இந்த முடிவானது கிரிக்கெட்டு ரசிகர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படத்தியது. இன்னிங்ஸால் இந்திய அணியை வீழ்த்தக் கூடிய நிலையிருந்தாலும் ஆஸ்திரேலிய அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியமை அனைவரது புருவங்களையும் உயர்த்த வைத்தது.

துடுப்பெடுத்தாடத் தொடங்கிய ஆஸ்திரேலிய அணிக்கு ஆரம்பம் சரியாக வாய்க்கவில்லை. வழமை போன்று முன்வரிசை வீரர்கள் சொதப்பினர். எட் கோவன் 10, மார்ஷ் 0, டேவிட் வோர்னர் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். ஆஸ்திரேலிய அணி 40 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்தது. அதன் பின்னர் இணைந்த பொண்டிங் - கிளார்க் இருவரும் மீண்டும் இணைப்பாட்டத்தைத் தொடங்கினர்.

நேற்றைய ஆட்ட நேர நிறைவில் ஆஸ்திரேலிய அணி 14 பந்து பரிமாற்றங்களில் 50 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்துள்ளது. களத்தில் பொண்டிங் 1, கிளார்க் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர். இன்றைய தினமும் இந்திய அணி மீண்டும் இந்த இணைப்பாட்ட ஜோடியிடம் வதைபடுமா ? (15)

## பொண்டிங் – கிளார்க் சாதனை




அடிலெய்ட்டில் நடைபெறும் இந்திய அணியுடனான 4 ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியின் மைக்கல் கிளார்க், ரிக்கி பொண்டிங் ஜோடி 4 ஆவது இலக்குக்காக 386 ஓட்டங்களைக் குவித்தனர். இது இந்த இரண்டு நாடுகளுக்கிடையிலான டெஸ்ட் ஆட்டமொன்றில் எந்தவொரு இலக்குக்குமான அதிகூடிய இணைப்பாட்ட சாதனையாகும்.

இதற்குமுன்னர் 2001 ஆம் ஆண்டு கொல்கத்தா ஈடன் கார்டனில் நடந்த ஆட்டத்தில் ராகுல் டிராவிட் - வி.வி.எஸ். லக்ஸ்மன் ஜோடி 376 ஓட்டங்களைப் பெற்றமையே இந்த இரண்டு நாடுகளுக்கிடையிலான டெஸ்ட் ஆட்டங்களில் அதிகூடிய இணைப்பாட்ட ஓட்டங்களாக இருந்தன.

அடிலெய்ட் மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் ஆட்டங்களிலும் கிளார்க் - பொண்டிங் இணைப்பாட்டமே எந்தவொரு இலக்குக்குமான மிகச் சிறந்த இணைப்பாட்டமுமாகும். (15)

# அரையிறுதியில் ஷரபோவா



ஆஸ்திரேலிய ஓபன் ரெனிஸ், பெண்கள் ஒற்றையர் பிரிவின் அரையிறுதிக்கு ரஷ்யாவின் ஷரபோவா முன்னேறினார்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற ஆஸ்திரேலிய ஓபன் ரெனிஸ் தொடர், மெல்போர்னில் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் காலிறுதியில், செக் குடியரசின் கிவிட்டோவா, இத்தாலியின் சாரா எரானியை சந்தித்தார். இதில் திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்திய கிவிட்டோ, 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் எளிதாக வெற்றி பெற்றார்.

மற்றொரு போட்டியில், ரஷ்யாவின் ஷரபோவா, சக வீராங்கனை மகரோவாவை 6-2, 6-3 என்ற செட் கணக்கில் வீழ்த்தி, அரையிறுதிக்கு முன்னேறினார். அரையிறுதியில் கிவிட்டோவா, ரஷ்யாவின் ஷரபோவாவைச் சந்திக்க உள்ளார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில், உலகின் நான்காம் நிலை வீரர் அன்டி முர்ரே (இங்கிலாந்து), ஜப்பானின் நிஷிகோரியை சந்தித்தது. இதில் அன்டி முர்ரே 6-3, 6-3, 6-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார்.

இதன் மற்றொரு போட்டியில், நடப்பு சம்பியன், முதல் நிலை வீரர் ஜோகோவிச் (செர்பியா), ஸ்பெயினின் டேவிட் பெடரரை 6-4, 7-6, 6-1 என்ற செட் கணக்கில் வீழ்த்தி, அரையிறுதிக்குள் நுழைந்தார். அரையிறுதியில் இவர், இங்கிலாந்து வீரர் அன்டி முர்ரேவை சந்திக்க உள்ளார்.

பெண்கள் இரட்டையர் பிரிவு அரையிறுதியில், இந்தியாவின் சானியா மிர்சா, ரஷ்யாவின் வெஸ்னினா ஜோடி, ரஷ்யாவின் சுவனரேவா, கஸ்னட்சோவா ஜோடியைச் சந்தித்தது. இதில் சானியா ஜோடி 6-7, 6-2, 4-6 என்ற செட் கணக்கில் அதிர்ச்சி தோல்வியடைந்தது.

அரையிறுதியில் பயஸ் ஜோடி:

ஆண்கள் இரட்டையர் பிரிவு காலிறுதியில், இந்தியாவின் லியாண்டர் பயஸ், செக் குடியரசின் ஸ்டெபனேக் ஜோடி, அமெரிக்காவின் எரிக், பிரேசிலின் புருனோ ஜோடியை எதிர் கொண்டது. இதில் அபாரமாக ஆடிய பயஸ் ஜோடி, 6-4, 7-6 என்ற செட் கணக்கில் வீழ்த்தியது.

சானியா-பூபதி அபாரம்

கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதியில், இந்தியாவின் சானியா மிர்சா, மகேஷ் பூபதி ஜோடி, அமெரிக்காவின் ஹியுபர், இங்கிலாந்தின் காலின் ஜோடியை சந்தித்தது. இதில் அபாரமாக ஆடிய பூபதி, சானியா ஜோடி 7-6, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் வலய உதைபந்தாட்டக் காலிறுதிப் போட்டிகள்

## 17 வயதுப் பிரிவு முடிவுகள்

பண்டத்தரிப்பு,ஜன.27

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் 17 வயதுக்குட்பட்ட பிரிவினருக்கான காலிறுதிப் போட்டிகள் நேற்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

நேற்று நடைபெற்ற காலிறுதிப் போட்டி ஒன்றில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இந்தப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்துக்கும் இணுவில் இந்துக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற இன்னொரு காலிறுதிப் போட்டியில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

மற்றுமொரு காலிறுதி ஆட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் அளவெட்டி அருணோதயக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இந்த ஆட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி ஒரு கோலை அடித்து வெற்றி பெற்றது.

இறுதியாக நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் ஏழாலை சிறிமுருகன் வித்தியாலயத்தை எதிர்த்து விளையாடிய வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

நேற்றைய காலிறுதிப் போட்டிகளின் அடிப்படையில் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் புனித ஹென்றியரசர் கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரியும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தை எதிர்த்து வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியும் மோதவுள்ளன.

(ங-130)

## 19 வயதுப் பிரிவு முடிவுகள்



19 வயதுக்குட்பட்டோருக்கான காலிறுதிப் போட்டியில் அளவெட்டி அருணோதயாவுக்கு எதிராக 'கோல்' அடிக்க முனையும் ஹென்றியரசர் அணி வீரர்கள்.

வலிகாமம்,ஜன.27

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 19 வயதுக்குட்பட்டோருக்கான காலிறுதி ஆட்டங்கள் நேற்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அணிக்கு எதிராக 6 கோல்களை அடித்து 6:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் மகாஜனக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற இன்னொரு காலிறுதிப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு போட்டியில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தை எதிர்கொண்ட ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 4:0 என்ற கோல் கணக்கில் இலகுவாக வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

இறுதிக் காலிறுதிப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் மோதிக் கொண்டன. முதல் பாதியில் இரு அணிகளும் கோல்கள் பெறாத நிலையில் இரண்டாம் பாதியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அடுத்தடுத்து இரண்டு கோல்களை அடித்து அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

இந்தப் போட்டிகளில் பெற்ற வெற்றிமூலம் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரியும், இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ங-130)




வவுனியா மத்திய மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கான மரதன் ஓட்டப்போட்டி நேற்று காலை இடம்பெற்றது. மேற்படி ஓட்டப்போட்டி வவுனியா மத்திய மகாவித்தியாலயத்தில் இருந்து ஆரம்பமானது வவுனியா நகரூடாக வந்த மரதன் ஓட்டப் போட்டி வீரர்கள் குருமன் காட்டு வீதியை அடைந்து அங்கு இருந்து யாழ்ப்பாண வீதியை அடைந்தனர். யாழ். வீதியில் மிகவும் உற்சாகத்துடன் வரவேற்ற பார்வையாளர்களின் கைதட்டல் ஒலியுடன் வீரர்கள் மாமடு சந்தியை அடைந்து அங்கிருந்து மீண்டும் பாடசாலையை வந்தடைந்தனர். (421)

# மருதநிலா வி.க அரையிறுதிக்குத் தகுதி பெற்றது

யாழ்ப்பாணம்,ஜன.27

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 17ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அமரர்களான சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் 11 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி வவுனியா வைரவப்புளியங் குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக விளையாட்டு மைதானத்தில் மின் ஒளியில் இடம் பெற்று வருகின்றது.



கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் மருதநிலா விளையாட்டுக் கழக அணி வெற்றியீட்டி அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.

காலிறுதியாட்டத்தில் மருதநிலா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளந்தென்றல் விளையாட் டுக் கழக அணி மோதிக் கொண்டது.

மருதாநிலா விளையாட்டுக்கழக அணியினர் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றனர்.

(த-23)



## கண்ணீர் அஞ்சலி



குருத்துவம் 20.11.1971

இறைவனடி சேர்ந்த எமது நெடுந்தீவுப் பங்கின் முன்னாள் பங்குத் தந்தை (1978-1982)

அருட்திரு.இராசசிங்கம் பீற்றர் துரைரெட்ணம்

அடிகள் எமது பங்கிலும், குறிப்பாக எமது ஆலய உருவாக்கத்திலும் ஆற்றிய அளப்பரிய பணிகளை நன்றியுடன் நினைவு கூருகின்றோம். அடிகளின் ஆன்மா இறை சன்னிதானத்தில் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புனித பற்றிமா அன்னை ஆலயம்,
நெடுந்தீவு.

பங்குத் தந்தையும்,
பங்கு மக்களும்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.மாவட்டச் செயலக தாபனக் கிளையின் பொது முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும்

திருமதி உஷாந்தி சுதன்

அவர்களின் அன்புத் தந்தையார்

பொன்னையா பாலச்சந்திரன்

அவர்கள் 25.01.2012 ஆம் திகதி இறைபதமடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவர்து குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாவட்டச் செயலகம்
யாழ்ப்பாணம்.

(13574)

ஊழியர் நலன்புரி கழகம்.

## வான் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள செல்மொடல் வான் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776158977

## தவறிவிட்டது

அரியாலையைச் சேர்ந்த இராசதுரை கஜேந்திரன் என்பவருடைய தேசிய அடையாளஅட்டை (871131597V) நெல்லியடிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொடர்பு: 0776849150

## அந்தியேட்டி வீட்டுத்திருத்திய அழைப்பு



கடந்த 28.12.2011 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

திருமதி பாக்கியம் கனகரத்தினம்

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (27.01.2012) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் நாளை (28.01.2012) சனிக்கிழமை வீட்டுக்கிருத்தியம் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

207/20, ஆடியபாதம் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

வேலுப்பிள்ளை செல்லத்துரை



ஆதிமயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்லத்துரை (செல்லக்கண்டு) நேற்று (26.01.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் சந்திரிக்கா, ஜெயக்குமார் (ஜெயா லொறி), சசிதரன் (சுவிஸ்), மோகனவர்ணன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ஈஸ்வரன் மற்றும் திருலோஜினி (ஆசிரியை, தெ/யூனியன் கல்லூரி), நந்தகுமாரி (சுவிஸ்), கிருஷ்ணபவானி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மல்லாகம்.

தகவல்: ஜெயக்குமார்
(உரிமையாளர், ஜெயா லொறி).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றும் எச்சங்கள் மீட்பு

இளவாலை - பண்டத்தரிப்பு பிரதான வீதியில் ரேஞ்ச் அடி என்ற இடத்திலிருந்து நேற்று முன்தினம் இரு மனிதர்களின் எலும்புக்கூடு மீட்கப்பட்ட கிணற்றிலிருந்து நேற்றைய தினமும் சில எச்சங்கள் மீட்கப்பட்டு பொலிஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடபில் மேலும் தெரியவருவதாவது:

மேற்குறித்த இடத்தில் முன்னாள் இராணுவ மண் அணைக்கு முன்பாகவுள்ள கிணற்றிலிருந்து நேற்று முன்தினம் மேற்படி இரு ஆண்களின் எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன. அதே இடத்திலிருந்து நேற்றும் இரண்டு மண்டையோடுகளும் எலும்பு எச்சங்களும் மீட்கப்பட்டன. ஆண்களின் உள்ளாடைகளும் மேலாடையும் நேற்று முன்தினம் கண்டெடுக்கப்பட்டது. அத்துடன் இராணுவத்தினர் பயன்படுத்துவது போன்ற தோற்றமுடைய பச்சை நிறத்திலான துணியும் கிடைக்கப்பெற்றன. ஒரு மண்டையோட்டினுள் சிதைவடையாத நிலையில் மூளையும் காணப்பட்டது.

இந்த நிலையில் நேற்றைய தினமும் குறித்த கிணற்றில் மேலும் ஏதாவது தடயங்கள் கிடைக்கின்றனவா என்பதற்காக தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது மேலும் சில எலும்புகள் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் மீட்கப்பட்ட எச்சங்களை கொண்டு நேற்றைய தினம் இனங்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன் உடற்கூற்றுப் பரிசோதனைகளும் இடம்பெறவில்லை என்பது குறிப்படத்தக்கது.

(த-15)



பலஸ்தீனத்தின், காஸா பிரதேசத்தில் இஸ்ரேலினால் மேற்கொள்ளப்பட்ட போரின் மூன்று ஆண்டு நிறைவை முன்னிட்டு புகைப்பட கண்காட்சியும் வீடியோ பட காட்சிப்படுத்தல் நிகழ்வும் கொழும்பில் அண்மையில் இடம்பெற்றன.

# தெரிவுக்குழுவில் இணைவதற்கு உத்தியோகபூர்வ அழைப்பில்லை

கொழும்பு,ஜன.27

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இணைந்து கொள்ளுமாறு அரசிடமிருந்து உத்தியோக பூர்வமாக அழைப்பு எதுவும் கிடைக்கப்பெறவில்லை. அவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டாலும் அரசு எம்முடன் இணக்கப்பாட்டுக்கு வந்தால் மட்டுமே அதுபற்றி முடிவெடுப்போம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுக்கள் ஒரு வருடத்தைக் கடந்துள்ள போதிலும் எதுவித முன்னேற்றமும் காணப்படவில்லை. இவ்வாறான நிலையில்தான் தெரிவுக்குழு குறித்து அரசு பேசுகின்றது.

தெரிவுக்குழுவில் பங்கு கொள்ள வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இதுவரையில் அரசு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுமில்லை. அழைப்பு விடுக்கவும் இல்லை என்று கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

நாம் எமது தரப்பு நிலைப்பாடுகளை மிகவும் தெளிவாகவே பேச்சுக் குழுவிடமும் ஜனாதிபதியிடமும் தெரிவித்திருக்கின்றோம்.

இதுவரையில் இடம்பெற்ற பேச்சுகள் தொடர்பில் அரசு கூட்டமைப்புடனும் இணக்கப்பாட்டுக்கு

**தெரிவுக்குழுவில் பங்குகொள்ள வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இதுவரையில் அரசு உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை.**

வர வேண்டும் என்பதைக் கூறியிருக்கின்றோம். எனினும் எமது நியாயப்பாடுகள் அரசினால் ஏற்றுக்கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-சி)

## மாணவர்களுக்கான சீருடைகள் வந்து சேர்ந்தன

தென்மராட்சி, ஜன.27

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான இலவச சீருடைத்துணிகள் நேற்று கொழும்பில் இருந்து வாகனம் மூலம் கொண்டுவரப்பட்டுள்ளன.

சீருடைத்துணிகள் அடுத்தவாரம் தொடக்கம் பாடசாலைகளுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் வலயக் கல்வி அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-207)

# குற்றப் பத்திரத்தை தமிழில் தாக்கல் செய்ய உத்தரவு

யாழ்ப்பாணம், ஜன.27

யாழ். நீதிமன்றில் வழக்கொன்று தொடர்பாக பொலிஸார் தாக்கல் செய்த முதல் முறைப்பாட்டு அறிக்கை மற்றும் குற்றப்பத்திரம் என்பன தனிச் சிங்களத்தில் இருப்பதனால் அதனை விளங்கிக் கொள்ளமுடியாது இருப்பதாக எதிர்த்தரப்புச் சட்டத்தரணி மன்றில் சுட்டிக்காட்டினார். இதனையடுத்து அவற்றைத் தமிழில் தாக்கல் செய்யுமாறு நீதிவான் மா.கணேசராஜா பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

நீர்வேலியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை மூன்று பேர் கொண்ட குழுவினர் கடுமையாகத் தாக்கியுள்ளனர். இதனால் அவரது வலது கை இயங்காத நிலைக்குச் சென்றுவிட்டதாக வைத்தியசாலை அறிக்கை மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. இதனுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவரையும் பொலிஸார் கைது செய்து மன்றில் நேற்று முற்படுத்தினர்.

பாதிக்கப்பட்ட வழக்குத் தொடுநர் சார்பில் சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் ஆஜராகியிருந்தார். எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பொலிஸார் தாக்கல் செய்த முதல் முறைப்பாட்டு அறிக்கை, குற்றப்பத்திரம் என்பன தனிச் சிங்களத்தில் உள்ளதனால் அதனை விளங்கிக் கொள்ளமுடியவில்லை. எனத் தெரிவித்ததையடுத்து அவற்றைத் தமிழில் சமர்ப்பிக்கக் கூறி வழக்கை அடுத்த மாதத்துக்கு ஒத்திவைத்தார் நீதிவான். (த-4)

# தீப்பிடித்தது வாகனம் கருகி மாண்டனர் நால்வர்

களுத்துறை - ஹொரண வீதியில் நேற்று அதிகாலை வான் ஒன்று திடீரெனத் தீப்பற்றி எரிந்ததில் அதில் பயணம் செய்த 2 சிறுவர்கள் உள்ளிட்ட 4 பேர் பலியாகினர். மேலும் 7 பேர் படுகாயமடைந்தனர். களுத்துறை தெற்கு அலமோதர பாலத்தை அண்மித்த பகுதியில் அதிகாலை 12.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. காயமடைந்தவர்கள் நாகொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆறு மற்றும் பதினொரு வயதுடைய இரண்டு சிறுவர்களும் இரண்டு பெண்களுமே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர். காயமடைந்த ஏழு பேரில் இரண்டு சிறுவர்களும் ஒரு பெண்ணும் அடங்குகின்றனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். பெற்றோல் கசிவு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்றும் அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார். எனினும், இந்தத் தீ விபத்துக்கான காரணம் சரியாகத் தெரியவரவில்லை. மரணச் சடங்கு ஒன்றுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆவணம் தீக்கிரையானாலும் தண்டனையில் மாற்றமில்லை

கொழும்பு,ஜன.27

சிறையில் ஏற்பட்ட தீயினால் கைதிகளது அனைத்து ஆவணங்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. ஆனால் அவர்களுக்கான தண்டனையில் மாற்றங்கள் இல்லாமல் குறிக்கப்பட்ட தண்டனைகள் வழங்கப்படும் என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

மகசின் சிறைச்சாலையில் ஏற்பட்ட தீயினால் கைதிகளது தகவல்கள் அடங்கிய ஆவணங்கள் அனைத்தும் முற்றாக தீக்கிரையாகியுள்ளன. ஆனால் எரிந்து நாசமாகிய ஆவணங்களை நாம் நீதிமன்றத்தில் உள்ள கோவைகளில் இருந்து பெற்றுக் கொள்ளமுடியும் என்று அவர் தெரிவித்தார்.

இதனடிப்படையில் தண்டனை விவரங்களையும் பெற்றுக்கொள்ள முடியும். எனவே, அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனைகளில் மாற்றங்கள் ஏற்படாது. அத்துடன், கைதிகளின் வழக்கு விசாரணைகளுக்கும் தடங்கல் ஏற்படாது என்று அவர்மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# புதுடில்லியின் ஒப்பந்தத்தை கொழும்பு விரும்பவில்லை

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடலில் காணப்படும் கடல் வளங்களைக் கூட்டாக முகாமைத்துவம் செய்வது தொடர்பில் புதுடில்லி முன்வைத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இலங்கை விரும்பவில்லை.

குறிப்பிட்ட கடல் பிரதேசத்தில் இரு நாட்டு மீனவர்களும் தொழில் செய்ய அனுமதிக்கும் ஏற்பாடு கொண்ட ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இந்தியா சமர்ப்பித்திருந்தது.

மீன்வளங்கள் குறைந்துபோகாமல் உயிர்ச்சூழலை பேணுவதற்கான கூட்டு முயற்சி பற்றியும் இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. சட்டப் பிரச்சினைகளை தோற்றுவிக்கக் கூடிய இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள இலங்கை விரும்பவில்லை.

மீனவர்கள் துன்புறுத்தப்படும் சம்பவங்களைத் தடுப்பதற்கு இரண்டு தரப்பினரும் எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றிய ஆலோசனையையும் இந்தியா சமர்ப்பித்திருந்தது. (த-சி)


பாராட்டி வாழ்த்துகிறோம்



எமது கோட்டத்தைச் சேர்ந்த இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அதிபராக நற்சேவையாற்றி, பதவி உயர்வு பெற்று சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளராக இன்று (27.01.2012) கடமையேற்கும்

சங்கரப்பிள்ளை சிவானந்தராஜா

அவர்களைப் பாராட்டி

வாழ்த்துவதோடு மேலும் சிறப்புகள் பெற இறையருளை வேண்டுகிறோம்.

தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளரும் தெல்லிப்பழைக் கோட்ட அதிபர்களும்.


# எமன் வடிவில் வீதியில் பாய்ந்து வந்தது பஸ்

## தெய்வாதீனமாக உயிரிழப்பு ஏதுமில்லை

கொழும்பு,ஜன.27

யார் செய்த புண்ணியமோ தெரியவில்லை! கொழும்பு ஜம்பட்டா வீதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காவு கொள்ளப்படவிருந்த பல உயிர்கள் தெய்வாதீனமாகக் காப்பாற்றப்பட்டன.

யாழ்.செல்வதற்காக ஜம்பட்டா வீதியில் பயணிகள் காத்திருந்த வேளையில், வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகிலிருந்த சுவர்கள், வாகனங்களுடன் முட்டி மோதியபடி அங்கு எமன் வடிவில் வந்தது ஒரு பஸ்.

வீதி அருகில் இருந்த மக்கள் தங்கள் உயிரைக் கையில் பிடித்தவாறு ஒருகணம் கண்களை மூடிக்கொண்டனர். கடந்து சென்றது ஆபத்து. கண்களை விழித்துக் கொண்டனர். எமன் வடிவில் வந்த அந்த பஸ் அப்போது ஒரு இரும்புக் கடையுடன் மோதுண்டு அந்த இடத்திலேயே நின்றுவிட்டது. அப்படி என்னதான் நடந்தது. அந்த சம்பவத்தின் விவரம் வருமாறு-

யாழ்-கொழும்பு சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் ஒன்று ஜம்பட்டா வீதியில் யாழ்.செல்வதற்காகக் காத்திருந்த பயணிகளை ஏற்றுவதற்காக வந்துகொண்டிருந்தது.

அந்தவேளையில் வீதியின் இருபுறங்களிலும் மக்கள் கூட்டம் கூட்டமாக நின்றுகொண்டிருந்தனர். சாரதி பஸ்ஸை நிறுத்துவதற்கு முற்பட்டவேளை, 'பிரேக்' செயற்படவில்லை. இதனால் வேகக்கட்டுப்பாட்டை இழந்த பஸ் அங்கும் இங்குமாக வந்தது.

'பிரேக்' இல்லை....பிரேக் இல்லை... எனக் கூறியபடி சாரதி வாகனத்தை செலுத்திவந்தார். சாரதியின் அலறல் சத்தத்தைக் கேட்டதும் அங்கிருந்த மக்கள் அதிர்ந்துபோனார்கள். எனினும் தெய்வாதீனமாக உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

அங்கு தரித்து நின்ற இரண்டு ஓட்டோக்களை நசுக்கிக்கொண்டு இரும்புக் கடையொன்றுடன் மோதி பஸ் நின்றது.

விபத்தில் சாரதிக்கு மாத்திரமே காயம் ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிவுக்குழு தாமதத்துக்கு நாங்கள் பொறுப்பல்ல

கொழும்பு, ஜன.27
அரசியல் தீர்வு யோசனைகளைத் தயாரிப்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்கும் நடவடிக்கை தாமதமாவதற்குத் தாம் பொறுப்பல்ல என்று அரசு நேற்றுத் தெரிவித்தது.

மேலும் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஓர் அணி விரும்புகிறது என்றும் மற்றோர் அணி எதிர்க்கிறது என்றும் அரசு தெரிவித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அரசியல் தீர்வு யோசனைகளைத் தயாரிப்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைப்பதை அரசு தாமதப்படுத்துகின்றது என்று சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்தத் தாமதத்திற்கு எதிர்க்கட்சியே காரணம். நாம் அல்லர். தங்களது பிரதிநிதிகளின் பெயர்களை அறிவிக்குமாறு நாம் எதிர்க்கட்சிகளிடம் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகிறோம். ஆனால், அக்கட்சிகள் உரிய பதிலை இன்னும் வழங்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி இதுதொடர்பில் எந்தவொரு பதிலையும் வழங்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஓர் அணி தங்களது பிரதிநிதித்துவம் இடம்பெறுவதை விரும்புகிறது. மற்றோர் அணி எதிர்க்கின்றது. ஜே.வி.பி. நாடாளுமன்றில் இரண்டு கட்சிகளாகச் செயற்படுகின்றது. எந்தக் கட்சிகளும் இன்னமும் பெயர்களை அறிவிக்கவில்லை.

தெரிவுக்குழுவை அமைத்துத் தீர்வு முயற்சிகளைத் துரிதப்படுத்த நாம் ஆர்வமாக உள்ளபோதும், எதிர்க்கட்சிகள் இது விடயத்தில் அக்கறையின்றி செயற்படுகின்றன. ஆகவே, தெரிவுக்குழு அமைப்பதற்கான தாமதம் ஏற்படுவதற்கு அரசு காரணமல்ல - என்றார். (த)

# தீர்வுக்கு தெரிவுக்குழு, செனட்சபை அவசியமில்லை என்கிறார் குகவரதன்

கொழும்பு, ஜன.27
தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்வைக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு, செனட்சபை, கூட்டமைப்புடனான பேச்சு என்பன அவசியமே இல்லை. மேலும், புதிய பேச்சுகளால் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு மேலும்தாமதமாகும். இது நீதியற்ற செயல்.

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாநகரசபை உறுப்பினரும், திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான நிலையியல் குழுவின் தலைவருமான எஸ்.குகவரதன் தெரிவித்துள்ளார்.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வை வழங்குவதற்காக நூற்றுக்கும் மேற்பட்ட பேச்சுகள் மற்றும் பல உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன. ஆனாலும், இன்றுவரை தீர்வோ கிடைத்ததாகவில்லை - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இதுவரை காலமும் யுத்தத்தால் பெரும் அழிவுகளை சந்தித்த மக்கள் இன்று நிர்க்கதியாக நிற்கின்றனர். எனவே, இம்மக்களுக்கான தீர்வை அரசே வழங்க வேண்டும்.

வரலாற்றில் இடம்பெற்ற பேச்சுகள் மற்றும் உடன்படிக்கைகள் அதன் மூலம் இணக்கப்பாடு கண்ட விடயங்கள் உட்பட அண்மையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் இவை அனைத்தையும் ஆராய்ந்து அரசால் சரியானதொரு தீர்வுத்திட்டத்தைத் தயாரிக்க முடியும்.

எனவே, நாடாளுமன்றத் தெரிவுக்குழு, செனட்சபை, கூட்டமைப்புடனான பேச்சு என்பன அவசியமே இல்லை.

நியாயமான தீர்வுத்திட்டத்தை மேற்கண்ட விதத்தில் தயாரித்து கூட்டமைப்பினதும், தமிழ் மக்களினதும் ஆதரவைப் பெற்று நடைமுறைப்படுத்த வேண்டும்.

யுத்தத்தால் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்த தமிழ் மக்களுக்கு இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதால் மட்டுமே அவர்களின் எதிர்காலத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்த முடியும்.

தமிழ் மக்களை மீளக் குடியேற்றல், அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற திட்டங்கள் முயல் வேகத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் இன்றோ ஆமை வேகத்திலேயே தான் நகர்ந்து கொண்டிருக்கின்றது. இந்த நிலைமை மாறவேண்டும்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-சி)

## ஆன்மீக நூல்கள் பெறலாம்

கனடாவில் வசிக்கும் கு.வி. கந்தசாமி என்பவர் தனதுசொந்தக் கிராமமான பனிப்புலத்திலுள்ள நூலகத்துக்கு ஆன்மீகம் சம்பந்தமான அரிய நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளார். கனடாவில் வாழ் எழுத்தாளர் டாக்டர் ஆர். லம்போதரன் எழுதிய 'சிவ புராண கருத்து விளக்கம்' என்னும் நூலை வழங்கி வருகிறார். இலவசமான வழங்கப்படும் இந்த அரிய நூலை பெற விரும்புவோர் வி.கந்தசாமி, பனிப்புலம் பண்டத்தரிப்பு என்னும் முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ந-28)

# இலங்கை உற்பத்திகளுக்கு தமிழ்நாட்டில் வந்தது தடை

1 »

இந்த உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார். தமிழக அரசு ஏற்கனவே இலங்கைக்கு எதிராக தமிழக சட்ட சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் இப்போது இலங்கை உற்பத்திப் பொருள்களுக்கு தடை விதிக்க வேண்டும் என அரச கூட்டுறவுச் சங்கங்களே கோரிக்கை விடுத்துள்ளதை அடுத்து தமிழகத்தில் உள்ள அரச நகர கூட்டுறவுச் சங்கங்களின் கடைகளின் முன்னால் உள்ள அலுமாரிகளிலிருந்து அந்தப் பொருள்கள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இலங்கையில் உற்பத்தியாகும் பிஸ்கட், சொக்கலேட், மருந்துப் பொருள்கள் ஆகியவற்றுக்கே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# கடத்தப்பட்ட மாணவியின் வாய்க்கும் மூக்குக்கும் 'பிளாஸ்ரர்'

1 »

கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. அத்துடன் அவரது கழுத்தில் கத்திரிக்கோலினால் குத்தப்பட்ட காயமும் உள்ளது.

பருத்தித்துறை சக்கோட்டைப் பகுதியில் இருதயநாதர் மேரிடிலக்சனா என்ற 17 வயது மாணவி நேற்றுமுன்தினம் கடத்திச் செல்லப்பட்டு பின்னர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த மாணவி தனது வீட்டிலிருந்து மாலை 6.30 மணியளவில் புறப்பட்டு 75 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள தனது பெரியம்மாவின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இந்த இரு வீடுகளுக்கும் இடைப்பட்ட பகுதியில் பெரியம்மாவின் வீட்டுக்கு அருகில் ஆள்கள் இல்லாத வீட்டில் வைத்தே இந்த மாண்வி கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலையை ஒரு குழுவினரே மேற்கொண்டுள்ளனர் முதற்கட்ட விசாரணைகளின்போது சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

மாணவியைக் கடத்தியவர்கள் மாணவியின் வாயையும் மூக்கையும் சத்திர சிகிச்சைக்கு பயன்படும் பிளாஸ்ரரினால் மூடி ஒட்டியுள்ளனர். அத்துடன் கத்திரிக்கோலால் கழுத்தையும் குத்தியுள்ளனர். மாணவியின் கன்னத்தில் கடித்துள்ளதுடன் அவருடன் தகாத முறையில் நடக்கவும் முற்பட்டுள்ளனர். இறுதியில் மாணவி மூச்சுத் திணறலால் மரணமாகியுள்ளார்.

மாணவியின் கழுத்தைக் கத்திரிக்கோலால் குத்தியதன் மூலம் அவர்கள், கொலை செய்யும் நோக்குடன் மாணவியைக் கடத்தவில்லை என்று முதற்கட்ட விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கொலை தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் சந்தேக நபர்களை வலை வீசித்தேடி வருகின்றனர். (த-15-4-319)

# காணி, பொலிஸ் பேச்சுக்கு சரியான இடம் தெரிவுக்குழு

1 »

முடிவு என்று கண்டறிவதும் அரசின் கடமை.

அதிகாரப் பகிர்வு தொடர்பாக உள்ள கேள்வி என்னவெனில் அதிகாரங்களை யாரிடம் ஒப்படைப்பது? அரசியல் வாதிகளிடமா? மக்களிடமா? மக்களுக்கு எது சிறந்ததோ அதை நாம் செய்வோம். காணி அதிகாரத்தில் சில சிறிய விடயங்களில் தான் பிரச்சினை.

ஆயினும் பொலிஸ் அதிகாரத்தை வழங்குவதில் அரசுக்கு சிக்கல் நிலை உள்ளது.

என்றாலும் எழுத்தில் போடமுதல் அதைப்பற்றி கலந்துரையாடுவதற்கு அரசு எண்ணுகிறது. அரசியல் யாப்பில் திருத்தம் வரும் அதற்கு முன்னர் மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் விருப்பங்களை தெரிந்து கொள்ள வேண்டும். அதற்குப் பின்னர்தான் எது பொருத்தம் என்று முடிவு செய்யப்படும். என்றார் கெஹலிய.

# ஆணைக்குழு அறிக்கை ஜெனிவாவுக்கு போகாது

1 »

நியமித்தது. ஆணைக்குழு அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்க வேண்டிய கட்டாயம் எதுவும் இல்லை.

அதனை அவ்வாறு சமர்ப்பிக்காத போதும் அந்தக் கூட்டத்தொடருக்கு இன்னும் ஒரு மாதம் இருக்கையில் அதில் உள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கிறேன். என்றார் பீரிஸ். (த)

# இலங்கையில் நிரந்தர அரசியல் தீர்வு அதிக அக்கறை காட்டுகிறது இந்தியா

1 »

இலங்கையின் அமைதி முயற்சிகள் குறித்தான இந்தியாவின் பங்களிப்பு பற்றியும் இதன்போது ஹிலாரி கிளின்ரன் நிருபமா ராவிடம் கேட்டறிந்து கொண்டார் என்றும் வோஷிங்டன் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரின் இலங்கைப் பயணம் மற்றும் தீர்வு முயற்சிகளில் இந்தியா செலுத்திவரும் அக்கறை குறித்து ஹிலாரியிடம் இங்கு சுட்டிக்காட்டிய நிருபமா ராவ், தமிழர்களுக்குத் தீர்வு வழங்குவது தொடர்பிலான விடயத்தில் கொழும்பின் உறுதிமொழி இந்தியாவுக்குத் திருப்தியளிப்பதாக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஒ-சி)

# அடம்பிடித்து மறுக்கிறது இலங்கை அடிக்கக் காத்திருக்கிறது மேற்குலகம்

1 »

றது எனக் கூறப்படுகின்றது.

ஜெனிவா மாநாட்டில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை விவாதத்திற்கு விடும் நிலைப்பாட்டில் இலங்கை இருக்காவிட்டால், சுயாதீன சர்வதேச விசாரணையை வலியுறுத்தி மேற்குலகம் இலங்கைக்கு எதிராக பிரேரணையொன்றை கொண்டுவரலாம் என இராஜதந்திரிகள் எதிர்வு கூறியுள்ளனர்.

அதேவேளை, போர்க் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் அறிக்கையல்ல நல்லிணக்கக் குழுவின் அறிக்கை என மேற்குலக நாடுகளிடம் சுட்டிக்காட்டியுள்ள இலங்கை அரசு, விவாதிப்பதற்கு இணங்கமாட்டோம் என ஆணித்தரமாக எடுத்துரைத்துள்ளது.

உள்நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையை சர்வதேச அரங்கில் விவாதிப்பது உகந்ததல்ல என்றும் தமது நிலைப்பாட்டை அறிவித்துள்ளது எனக் கூறப்படுகின்றது.

இதனால், சர்வதேச விசாரணையை வலியுறுத்தி வந்த மேற்குலக நாடுகள் அதிருப்தியடைந்துள்ளன. எனவே, போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான செயற்பாடுகள் ஆகியவற்றுக்கு இலங்கை பதிலளித்தே ஆகவேண்டும் என வலியுறுத்தி புதிய பொறிமுறையொன்றை மேற்குலகம் கையாளக்கூடும் என அறியமுடிகின்றது.

இதுதொடர்பாக மேற்குலக நாடுகளின் முக்கியஸ்தர்கள் விரைவில் ஒன்றுகூடி ஆராயவுள்ளனர் என்று இராஜதந்திர மட்டத்திலான தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்குலகம் எவ்வகையான தீர்மானத்தைக் கொண்டு வந்தாலும் அதனை முறியடிப்போம் என இலங்கை குறுரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

# தமிழர் விடயத்தில் இந்தியாவின் நடிப்பு

1 »

திட்டம் இல்லை. காலத்தை இழுத்தடிப்பதே அதன் நோக்கம். அமைச்சர் பஸிலின் கூற்றும் இதனையே பிரதிபலிக்கின்றது என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு மக்கள் காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கோரவில்லை என்று அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். அமைச்சரின் இந்தக் கூற்றுத் தொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே சோஷலிசக் கட்சியின் பொதுச் செயலாளர் மஹிந்த தேவகே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இனவாதப்போக்கை கடைப்பிடிக்கும் இந்த அரசிடம் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் எண்ணம் இல்லை என்றே நாம் கருதுகின்றோம்.

தீர்வு விடயம் தொடர்பாக ஜனாதிபதி ஒரு கதை சொல்கின்றார். அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இன்னுமொரு கதை சொல்கின்றார். தற்போது அமைச்சர் பஸில் புதிய கதையொன்றை சொல்கின்றார். எந்த கதையை நாம் நம்புவது?

அதிகாரப் பரவலாக்கத்திற்கு அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க ஆகியோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். இவர்களைப் பகைத்துக்கொண்டால் பௌத்த வாக்கு வங்கி குறைந்துவிடும் என்ற அச்சம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

காலத்தை இழுத்தடிக்கும் கைங்கரியமே அரசுக்கு தற்போது தேவைப்படுகின்றதே தவிர, இனப்பிரச்சினைக்கான தீர்வு அல்ல. அரசின் செயற்பாடுகள் எமக்கு இதனையே உணர்த்துகின்றன. மஹிந்த தலைமையிலான அரசிடம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கம் இல்லை. இதனால்தான் முரண்பட்ட கருத்துகளை அமைச்சர்கள் கூறிவருகின்றனர். அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களே இவ்வாறு கூறுவதால் அது அரசின் கருத்து என்றே பொருள்படும்.

இந்தியாவிற்கு ஒன்றையும், மேற்குலகுக்கு ஒன்றையும் கூறி பச்சோந்திகளாகச் செயற்படும் இந்த அரசை நாம் நம்பமாட்டோம்.

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு சந்தைவாய்ப்புகளை விஸ்தரித்துக்கொள்வதே இந்தியாவின் பிரதான நோக்கங்களுள் ஒன்று.

அதுமட்டுமின்றி, சீனா - இலங்கை உறவுப் பாலத்தைத் துண்டிக்கவேண்டிய நிர்ப்பந்தம் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால், 13 பிளஸ் என்ற பழைய பல்லவியைப் பகடைக் காயாகப் பயன்படுத்தியுள்ளது.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தரும் நோக்குடன் இந்தியா, இலங்கை விவகாரத்தில் தலையிடவில்லை. அது வியாபார நோக்கத்திற்காகவே தலையிடுகின்றது என்பதைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ளவேண்டும் - என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை நாகபூஷணிக்கு கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.27

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகப் பெருவிழா நாளை நடைபெறவுள்ளது. கும்பாபிஷேக நிகழ்வை முன்னிட்டு நாளை சனிக்கிழமை இரவு ஆலய கலையரங்கில் கொழும்பு அபினயஷேத்திரா நடனப் பள்ளி ஆசிரியை செல்வி திவ்யா சிவனேசனின் நடனக் குழுவினரின் பரத நாட்டிய நிகழ்வு இடம்பெறவுள்ளது.



மகா கும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னிட்டு அமுதசுரபி அன்னதான சபை நயினாதீவுக்கு வருகைதரும் பக்தர்களின் வசதி கருதி அன்னதானம் வழங்கிவருகின்றது.

-இதே வேளை

நயினை நாகபூசணி அம்மன் திருக்குட முழுக்கு பெருவிழாவை சிறப்பிப்பதற்காக இறை குருத்துவ பீடத்திலிருந்து வருகை தந்த சித்தர் சிவயோகி மாணிக்கம் சிதம்பரம் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

கொல்லிமலையில் ஐந்து தலை அரவை அழைத்து பேரற்புதங்கள் புரிந்த மகரிஷி பாம்பாட்டிச் சித்தரின் மகா குண்டலினி இறை குருத்துவ பீடத்திலிருந்து சித்தர் சிவயோகி மாணிக்கம் சிதம்பரம் இன்றும்,நாளையும்,நாளை மறுதினமும் ஆகிய மூன்று தினங்கள் தங்கியிருந்து அம்பாளின் கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்வார். அத்தோடு அடியவர்களுக்கு அருளாசியும் வழங்க உள்ளார்.

(ந-ரி)

# ஆசிரியையைத் தள்ளி விழுத்தி தங்கச் சங்கிலி அறுத்தெடுப்பு

யாழ்ப்பாணம், ஜன.27

மோட்டார் சைக்கிளில் வந்த திருடர்கள் வீதியால் சென்று கொண்டிருந்த ஆசிரியை ஒருவரைத் தள்ளி விழுத்தி விட்டு அவர் அணிந்திருந்த 5 பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று நீர்வேலியில் பிற்பகல் இடம்பெற்றது.

இது தொடர்பாக தெரியவருவதாவது-

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த ஆசிரியை ஒருவர் தனது பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகளை முடித்து விட்டு பிற்பகல் வேளை வீடு திரும்பிக் கொண்டிருந்தார். இந்த ஆசிரியையைப் பின் தொடர்ந்து வந்த திருடர்கள் அவரைக் கீழே தள்ளி விழுத்தி விட்டு அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றனர்.

ஆசிரியை நிலத்தில் குப்புற விழுந்து கூக்குரலிட்டுள்ளார். எனினும் திருடர்கள் ஆசிரியையின் முகத்திலும் கழுத்துப் பகுதியிலும் தாக்கி விட்டு சங்கிலியை அறுத்தெடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து அப்பகுதியில் மக்கள் கூடித் தேடுதல் நடத்தியபோதும் திருடர்கள் தப்பிச் சென்று விட்டனர்.

(த-17)

## இளம் பெண்ணின் சடலம் மீட்பு

ஒட்டுசுட்டான் முத்துஐயன் கட்டுப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் இளம்பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்ற ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை நடத்தியதுடன் சடலத்தை மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். (ஒ-319)

**Spoken English Class**

அரச, தனியார் ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் யாவருக்குமான Spoken Class வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். Spoken With Grammar அடிப்படையில் இருந்தும் கற்பிக்கப்படும்.
தொடர்பு:
0777110523

**THE SCIENCE POINT**
KANNATHIDDY - JAFFNA.
**2014 A/L புதிய பிரிவு**
**BIOLOGY**
ஆரம்பம் 28.01.2012 சனி
சனி, ஞாயிறு 4.30 - 5.45
**சு.பொன்திவாகரன்** (C-8232)

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE, JAFFNA.
**2013 A/L PHYSICS**
அலைகளும் அலைவுகளும்
ஆரம்பம் 28.01.2012 சனி 9.15AM
சனி, ஞாயிறு 9.15 - 10.30AM
BY செல்வன் B.Sc(Hons) (C-8233)

**ஆஸ்திரேலியா குடும்ப விசா**
குடும்பமாக ஆஸ்திரேலியா செல்ல 5 வருட விசாவிற்கு சட்ட ரீதியான ஆலோசனை. இறுதி நாள்- 07.02.2012
**திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்**
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
021 221 9016

INSTITUTE OF INFORMATICS STUDIES
அனைத்து கற்கை
நெறிகளுக்குமான புதிய பிரிவுகள்
ஆரம்பம்
காலம் :- 28.01.2012 10.00 a.m
INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831

50% OFFER **COMPUTER COURSES**
புதிய வகுப்புகள் ஆரம்பம்
28.01.2012

| | | |
|---|---|---|
| Certificate in Ms Office 2007 | ~~10000/-~~ | 3000/- |
| Diploma in Computer Studies | ~~10000/-~~ | 5000/- |
| Diploma in Graphic Designing | ~~15000/-~~ | 7500/- |
| Diploma in Web Designing | ~~10000/-~~ | 5000/- |
| Diploma in Computer Hardware | ~~10000/-~~ | 5000/- |
| Certificate in Java, VB.NET, C#, AsP | ~~22000/-~~ | 11000/- |

LONDON METROPOLITAN COLLEGE
No:197,Arasady Road,Jaffna
(Between Kantharmadam Junction & Hindu Ladies College)
Tel: 021 222 7230, 021 753 8395

**வட மாகாண ஆள் சேர்ப்பு போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள்**
ஆரம்பம்: ஞாயிறு பி.ப. 1.30
பொது உளச்சார்பு, பொது அறிவு, மொழித் திறன், கிரகித்தல், தகவல் தொழில்நுட்பம் ஆகிய விடயங்கள் உங்களது பரீட்சைகளுக்கு ஏற்ப விளக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிறும் பி.ப. 1.30 மணி தொடக்கம் பி.ப.5 மணிவரை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவில் நடைபெறும்.
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கி அருகில்)

**CHEMISTRY - S.VASU**
**NIGHT CLASS**
Inorganic - Sat., Sun. 7.15 - 8.15pm
Organic - Mon., Tue. 7.15 - 8.15pm
Physical - Wed., Thu. 7.15 - 8.15pm
* சகல பிரிவு மாணவர்களும் கலந்துகொள்ளலாம்.
* வெளிமாவட்ட மாணவர்களுக்கு சிறப்புச் சலுகைகள்
* பூரண பாடத் திட்டத்துடன் அதிகளவு பயிற்சிகள்
ஆரம்பம் 28.01.2012 சனிக்கிழமை 7.15pm
NEC பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.

**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**
ஆங்கிலம் - சனி, ஞாயிறு புதிய பிரிவு ஆரம்பம் (28.01.2012)
நகரசபை அருகில், ஸ்ரேசன் வீதி, சாவகச்சேரி → காலை 11.30 - 12.30
182, ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம் → மாலை 2.00 - 3.00
இலங்கை வங்கி மாடி, சங்கானை → மாலை 5.00 - 6.00
சிங்களம் - சனி, ஞாயிறு புதிய பிரிவு ஆரம்பம் (28.01.2012)
NSB அருகில், கொழகாமம் வீதி, நெல்லியடி → காலை 9.00 - 10.00
182, ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம் → காலை 3.00 - 4.00
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

**திசைகாட்டியின் விசா விழிப்புணர்வு**
வெளிநாட்டில் கல்வி பயில விரும்புபவர்கள் கல்லூரிக் கட்டணத்தை தனியார்களிடம் கையளிக்காது வங்கி ஆணை (Bank Draft) மூலம் செலுத்துங்கள். இதன் மூலம் மோசடிகளைத் தவிர்க்கலாம். இது சமூக நலன் கருதிய தகவல்
திசைகாட்டி பிறைவேற் லிமிட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
021 221 9016

**ACADEMY OF LOGIC**
அரசறிவியல்
M.அசோக்
Paper Class A/L 2012
அனேகமாணவரின்
வேண்டுகோளுக்கிணங்க
பிரிவு II சனி, ஞாயிறு 12 - 1
(13571)

## மூன்றாம் வருட நினைவலைகள்

அன்னையின் மடியில் 04 . 01 . 1982



மண்ணின் மடியில் 27 . 01 . 2009

**அமரர் சந்திரசேகரம் செந்தூரன் (திருமால்)**

அன்னை மடியில் திருமால் எனும் நாமம் கொண்டு
ஐவரில் ஒருவராக வந்துதித்து கல்வியுடன் பல
கலையும் கற்று வன்னிமண்தனில் காலம் இட்ட
கட்டளையை ஏற்று நடந்தாய் கட்டளை இட்டவர்
யாவரும் தடுமாறவும் தளராது நின்றவனே வஞ்சகர்
உளவு வலையில் வீழ்த்தி உன் உயிர் பறந்ததுவே
உயிரற்ற உன் உடல் வந்த நாள் முதல்
வேரிழந்த ஆலமரமாய் வாழ்கின்றோம். என்றும் உன் நினைவுடன்
மீசாலை வடக்கு. (C-2926) குடும்பத்தினர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.